விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபத்து நான்கு

Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 மாசி 23 செவ்வாய்க்கிழமை (06.03.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 079

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# அரசாங்கத்தின் பொறுப்புக் கூறலை

# சர்வதேசம் உறுதிப்படுத்த வேண்டும்

## ஐ.நா.நிபுணர் குழு தலைவர் வலியுறுத்தல்

(வாஷிங்டன்)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் அரசாங்கம் பொறுப்புக் கூறுவதை சர்வதேச சமூகம் உறுதிப்படுத்த வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் தலைவரான மார்சூகி தாருஸ்மன் வலியுறுத்தியுள்ளார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவு மாணவி கொலை சந்தேக நபருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் பாடசாலை மாணவி ஒருவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட நபரை இம்மாதம் 16 ஆம் திகதி வரை விளக்கமறியிலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

31 வயதான (24ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனிவாவுக்குச் சென்றிருந்தால் த.தே.கூவின் பதிவு இரத்தாகியிருக்கும்

## சுமந்திரன் எம்.பி. விளக்கம்

(யாழ்ப்பாணம்)



ஜெனிவாவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஐ.நா. மனிதவுரிமைக் கூட்டத்தொடரில் பங்கு பற்றினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பதிவு ரத்துச் செய்யப்பட்டுவிடும் என்பதற்காகவும் இந்தக் கூட்டத் தொடரில் அமெரிக்கா கொண்டுவரவுள்ள தீர்மானம் போர்க்குற்ற விசாரணைபற்றியது அல்ல என்பதற்காகவுமே தாம் கூட்டத்தொடரில் பங்கு கொள்ளவில்லை என தமிழ்த் (24ஆம் பக்கம் பார்க்க)

## கனடா உயர் ஸ்தானிக அதிகாரி அரச அதிபருடன் நேற்று சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் குடாநாட்டைச் சேர்ந்த தமிழ் மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு திரும்பும் போது உரிய சலுகைகளும் தேவைகளும் பூர்த்தி செய்யப்படுகின்றதா என கனடா நாட்டு உயர்ஸ்தானிகராலய இரண்டாம் நிலை நிர்வாகச் செயலாளர் குளோமி பேர்னாட் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரை நேற்று முற்பகல் 11 மணியளவில் யாழ். மாவட்டச் செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார் என யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக அரச அதிபர் மேலும் தெரிவிக்கையில், யாழ். குடாநாட்டிலிருந்து புலம்பெயர்ந்து கனடா சென்றவர்களில் எத்தனை பேர் மீண்டும் நாடு திரும்பியுள்ளனர் என்பதை (23ஆம் பக்கம் பார்க்க)

## டில்லியில் நேற்று நில அதிர்வு

(டில்லி)

இந்தியாவின் தலைநகர் டில்லியில் நில அதிர்வு உணரப்பட்டுள்ளது. நில அதிர்வினால் கட்டிடங்கள் அதிர்ந்ததை அடுத்து மக்கள் அச்சத்தில் தெருக்களுக்கு ஓடினார்கள்.

டில்லியின் மேற்கே சுமார் 50 கிலோ மீற்றர் தொலைவில் ஹரியான மாநிலத்தில் உள்ள பஹாதுர்க்கா என்ற இடத்தில் 4.9 ரிச்டர் அளவுக்கு இந்த நில அதிர்வு பதிவானதாக இந்தியாவின் பூமி அதிர்ச்சி தொடர்பான ஆய்வு நிலையத்தின் அதிகாரிகள் கூறுகின்றனர்.

19 கிலோ மீற்றர் ஆழத்தில் 5.2 ரிச்டர் அளவில் இந்த பூமி அதிர்ச்சி ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க பூகோளவியல் ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இந்த நில அதிர்வினால் டெல்லியிலோ அல்லது பஹாதுர்க்கா பகுதியிலோ சேதங்கள் ஏற்பட்ட (24ஆம் பக்கம் பார்க்க)

## வட மாகாண ஆளுநரின் அதீத தலையீட்டால் அரச நிறுவனச் செயற்பாட்டில் சிக்கல்

## பிரதேச, நகரசபைத் தலைவர்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தேர்தல் மாவட்டத்திற்குட்பட்ட நகர மற்றும் பிரதேச சபைகளில் ஆளணிப் பற்றாக்குறையுள்ளது.


ஆனால் ஆளுநரின் தலையீடு காரணமாக அதை நிவர்த்தி செய்ய முடியாதுள்ளது என இலங்கை உள்ளூர் அரசாங்க அதிகாரிகள் சங்க சம்மேளனத்தலைவர் முன்னிலையில் பிரதேச மற்றும் நகரசபைத்தலைவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

யாழ்.தேர்தல் மாவட்டத்திற்குட்பட்ட நகர மற்றும் பிரதேச (23ஆம் பக்கம் பார்க்க)



## கிலாரிக்காக அமைக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றச்சாட்டு



(கொழும்பு)

அரசாங்கத்தின் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த இடமளிக்கமாட்டோம் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கிலாரி கிளின்டனின் தேவைக்காக உண்மை களைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக் குழுவை நியமித்து (24ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தூதரகம் முன் தமிழகத்தில் ஆர்ப்பாட்டம்!

## 200 பேர் கைதானார்கள்

(சென்னை)

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி ஆழ்வார்பேட்டையில் அமைந்துள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன் உட்பட 200 பேரை தமிழக பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களுக்கு காரணமானவர்களுக்கு தண்டனை கிடைக்கப்பட வேண்டும்.

அவர்களை இந்தியா ஆதரிக்கக் கூடாது என்று வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடப்போவதாக மார்க்சிஸ்ட் கம்யூஸ்ட் கட்சி அறிவித்து (24ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இராணுவத்தின் செயற்பாடுகளை தட்டிக் கேட்டால் பதவி இழப்பு

## முன்னாள் வட மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு



(கொழும்பு)

இராணுவத்தினரின் செயற்பாடுகளை தட்டிக் கேட்டமையினாலேயே தமிழ் பொலிஸ் அதிகாரிகள் பதவியில் இருந்து நீக்கிக் கொள்ளப்பட்டனர் என முன்னைய வட மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் ரி.இந்திரன் தெரிவித்துள்ளார்.

பிரதி பொலிஸ்மா அதிபர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்கு நான்கு தமிழர்கள் உட்பட 58 பேர் தோற்றியிருந்தனர். இதில் 22 பேர் தேர்வு செய்யப்பட்டனர்.

பிரதி பொலிஸ்மா அதிபர்களாக தெரிவு செய்யப்பட்ட 22 பேரில் ஒரு தமிழர்கூடத் தெரிவு செய்யப்படவில்லை. இதற்குக் காரணம் அரசியல் ரீதியான அழுத்தங்களே.

வடக்கில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் கொள்ளை முயற்சிகள், குறிப்பாக காங்கேசன்துறைப் பகுதியில் படையினரால் கடத்தப்படவிருந்த இரும்பினை மீட்டமை போன்ற நடவடிக்கைகளுக்கு பாதுகாப்பு அமைச்சிடமிருந்து அதிருப்தி வெளியிடப் பட்ட நிலையிலேயே இப் பதவி நீக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

பதவிக்கால அடிப்படையில் மிக நீண்ட காலம் பணியாற்றி யவர்கள்கூட, தமிழர்கள் என்பதனால் பதவிகள் வழங்கப்படவில்லை. இதற்கு காரணம் அரசியல் ரீதியான அழுத்தங்களே.

தமிழர்களை உயர் பதவிகளில் அமர்த்தினால் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்ள நேரிடும் என்ற மனப்பான்மையே இதற்குக் காரணம் என அவர் கூறினார். (எ-4)

அன்பு வாசகர்களே!
உங்கள் வலம்புரியில்
கைரேகை ஜோதிடம்
எதிர்வரும் 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை
முதல் வாசிக்கத் தவறாதீர்கள்

# மீண்டும் ரஷ்ய அதிபரானார் புடின்



(மொஸ்கோ)

ரஷ்யாவில் மூன்றாவது தடவையாகவும் விளாடிமீர் புடின் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ஆனால் அவரது எதிர்ப்பாளர்களும் தேர்தல் கண்காணிப்பாளர்களும் இந்த அதிபர் தேர்தலில் புடினுக்கு ஆதரவாக மோசடிகளும் முறைகேடுகளும் இடம்பெற்றுள்ளதாக விமர்சித்துள்ளனர்.

ரஷ்யாவின் அதிபர் தேர்தல் புடின் வெற்றியடையக் கூடிய விதத்தில் திரிக்கப்பட்டிருந்தது என்று ஓஎஸ்சீஈ என்ற பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்புக்கான அமைப்பைச் சேர்ந்த கண்காணிப்பாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முன்னர் 2 தடவைகள் அதிபராகவும், தற்போது பிரதமராகவும் இருக்கின்ற புடினுக்கு ஆதரவாக 63 % க்கும் அதிகமான வாக்குகள் கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பரவலான வாக்கு மோசடிகளும் தேர்தல் முறைகேடுகளும் இடம்பெற்றுள்ளதாகவும், தேர்தல் முடிபுகள் எப்படி வரும் என்பதில் சந்தேகமே இருக்கவில்லை என்றும் ஓஎஸ்சீஈ அமைப்பு கூறியுள்ளது.

எல்லா வேட்பாளர்களுமே சுதந்திரமாக பிரசாரம் செய்ய வாய்ப்பு இருந்த போதிலும், ஜனாதிபதி வேட்பாளரான பிரதமர் விளாடிமிர் புடினுக்கு ஆதரவாகவே ஆரம்பத்தில் இருந்து தேர்தல் பணிகள் திரிக்கப்பட்டிருந்தன என்று ஓஎஸ்சீஈ கண்காணிபாளர்களின் அறிக்கை கூறுகின்றது.

தேர்தல் நடத்தப்பட வேண்டியதன் தேவையே, முடிவு முன் கூட்டியே தெரிந்திருக்கக்கூடாது என்பது தான் எனவும் ரஷ்யாவில் தேர்த லில் யார் வெற்றி பெறுவார் என்பது முன் கூட்டியே உறுதிசெய்யப்பட்ட விடயமாகவே இருந்தது என்றும் ஓஎஸ்சீஈ அமைப்பின் பேச்சாளர் ஒருவர் சுட்டிக்காட்டினார். (எ-11)

## அரச மரத்தில் ஏறி ஆர்ப்பாட்டம்

பொலிஸாரின் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக, மாத்தறையிலுள்ள அரச மரமொன்றின் உச்சியில் ஏறி நபர் ஒருவர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

சில மணித்தியால ஆர்ப்பாட்டத்தின் பின்னர் அவர் மரத்திலிருந்து இறங்குவதற்கு பொலிஸாரால் நிர்ப்பந்திக்கப்பட்டு திஹாகொட பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இந்நபருக்கு எதிராக பல்வேறு கொள்ளைகள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் உள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன கூறினார். (எ-11)

# மயானத்துக்கு குறுக்கே அணைக்கட்டு அமைப்பு

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை கொத்துத்துறை இந்து மயானத்துக்கு செல்ல முடியாதவாறு குறுக்கே மண் அணை போடப்பட்டுள்ளதாக பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதனால் இறுதிக்கிரியைகள் மேற்கொள்ளும்போது, சமய விழுமியங்கள் பாதிக்கப்படுவதாகவும், மயானத்துக்கு பிரேதங்களை எடுத்துச் செல்வதற்கு பல்வேறு இடர்பாடுகள் ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுத்து கொத்துத்துறை இந்து மயானத்தில் இறுதிக் கிரியைகளை இலகுவாக மேற்கொள்ள ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-11)

# ரகளையில் ஈடுபட்ட நால்வருக்கு பிணை

(யாழ்ப்பாணம்)

இரு வேறு இடங்களில் அடாவடியில் ஈடுபட்ட நான்கு பேரை யாழ். நீதிமன்றம் பிணையில் விடுவித்துள்ளது.

கொக்குவில் சந்தி மற்றும் ஆடியபாதம் வீதிகளில் ரகளையில் ஈடுபட்டனர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு கோப்பாய்ப் பொலிஸாரினால் குறித்த நால்வரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட நான்கு நபர்களும் நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கினை விசாரணை செய்த யாழ். நீதவான் மா.கணேசராஜா கொக்குவில் சந்தியில் சண்டித்தனத்தில் ஈடுபட்ட இருவரும் 10 ஆயிரம் ரூபாய் ஆட் பிணையிலும், ஆடியபாதம் வீதியில் ரகளையில் ஈடுபட்ட இருவரில் ஒருவருக்குரூ. 50 ஆயிரம் ஆட்பிணையிலும் மற்றைய நபர் 10 ஆயிரம் ரூபாய் ஆட்பிணையிலும் விடுவிக்கப்பட்டனர். (எ-4)

# 4 மீனவர் கைது

(யாழ்ப்பாணம்)

தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகள் மற்றும் பதிவு செய்யப்படாத படகுகளை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் நான்கு மீனவர்கள் யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

யாழ்.குடாக் கடலில் தொழிலில் ஈடுபட்ட குருநகரினைச் சேர்ந்த குறித்த நான்கு மீனவர்களும் கைது செய்யப்பட்டனர்.

குறித்த மீனவர்கள் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டு அன்றைய தினமே யாழ்.நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

குறித்த வழக்கினை விசாரணை செய்த யாழ்.நீதவான் மா.கணேசராஜா குறித்த நால்வருக்கும் தலா 9 ஆயிரம் ரூபாய் வீதம் 36 ஆயிரம் ரூபாய் அபராதமாகச் செலுத்துமாறு உத்தரவிட்டுள்ளார். (ச-4)

விற்பனைக்கு
MF-XXXX எனும் தொடர் இலக்கத்தினையுடைய பாவனையிலுள்ள சுப்பர் கப் மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:-
M.நெல்சன் (ஆசிரியர்)
077 6393868
(7623)

# கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பதவியேற்பு

கிழக்கு பல்கலைக்கழகத்தின் புதிய உபவேந்தராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட கலாநிதி கிட்ணன் கோவிந்தராஜா நேற்று திங்கட்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இதன்போது, கிழக்குப் பல்கலைக்கழகத்தினால் புதிய உபவேந்தருக்கு மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிழக்கு முதலமைச்சர் சி.சந்திரகாந்தன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

உபவேந்தராக கடமையாற்றிய கலாநிதி என்.பத்மநாதன் 2010 -ம் ஆண்டு பதவி விலகியதிலிருந்து குறித்த பதவி வெற்றிடம் காணப்பட்டது.

இதனால் கலாநிதி பிரேம்குமார் பதில் உபவேந்தராக கடமையாற்றி வந்தார்.

இந்நிலையில், குறித்த பதவிக்கு கிழக்கு பல்கலைக்கழக பேரவையினால் பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவத் துறைப் பேராசிரியர் ஆர்.சிவகணேசன், கிழக்கு பல்கலைக்கழக விவசாய பீட பீடாதிபதி எஸ்.சுதர்சன் மற்றும் கனடாவில் வசித்த கலாநிதி கிட்ணன் கோவிந்தராஜா ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டன.

இதனையடுத்தே கலாநிதி கிட்ணன் கோவிந்தராஜா கிழக்கு பல்கலைக்கழகத்தின் ஏழாவது உபவேந்தராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டார்.

1989-ம்ஆண்டுகிழக்குபல்கலைக்கழகத்தில் மாணவனாக நுழைந்த இவர், கணித துறையில் கலாநிதி பட்டம் பெற்றுள்ளார்.

அத்துடன் 1993-ம் ஆண்டு தொடக்கம் 2004-ம் ஆண்டு வரையான காலப் பகுதியில் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக பணியாற்றியுள்ளார்.

பின்னர் கிழக்கில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக 2004-ம் ஆண்டு நாட்டை விட்டு வெளியேறிய, இவர் கனடா பல்லைக்கழக மொன்றில் பகுதி நேர விரிவுரையாளராக பணியாற்றியுள்ளார்.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் மாணவர்களில் உபவேந்தராக நியமனம் பெற்றுள்ள முதலாவது நபர் கலாநிதி கிட்ணன் கோவிந்தராஜா என்பது குறிப்பிடத்தகது. (எ-11)

31 ஆம் நாள் நினைவஞ்சலி
மண்ணில் விண்ணில்
1926 02 24
2012 02 05



அமரர் நாகராசா வள்ளியம்மை
உலகில் நீங்கள் வாழ்ந்த காலம்
உயர்ந்த வாழ்வின் பயணமே
சேர்ந்த உறவும் இணைந்த உள்ளமும்
தொடர்ந்து வாழும் என்றுமே
06.03.2012 செவ்வாய்க்கிழமை இன்று காட்டாமணக்கு பிள்ளையார் கோவிலடி இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
7-ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு. -குடும்பத்தினர்.
(7621)

# 'வாயிற் கதவுகள் கவனம்' பறிகொடுத்தோர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

வீட்டின் வெளி வாயிற் கதவுகள் குறித்து எச்சரிக்கையுடன் இருக்குமாறு அதனைப் பறிகொடுத்தவர்கள் ஆலோசனை கூறி வருகின்றனர்.

வீட்டில் ஆட்கள் இருந்த போதிலும் வாயிற்கதவு திருட்டுச் சம்பவம் ஒன்று நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் நாச்சிமார் கோவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வீட்டு உரிமையாளர் வீட்டினுள் குளித்துக் கொண்டிருக்கையில் வீட்டின் கேற் இரும்புத் திருடர்களால் திருடப்பட்டுள்ளது.

சிறிய ரக கன்ரர் வாகனத்தில் வந்தவர்களால் சத்தமில்லாமல் இத் திருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திருட்டுத் தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டதோடு வீட்டின் உரிமையாளர் யாழ்.நகரிலுள்ள இரும்பு கடைகளுக்கும் சென்றும் பார்வையிட்டு வருகின்றார்.

இதேபோல் தம்மை சுகாதாரப் பிரிவினர் எனக் கூறிக்கொண்டு அண்மையில் மானிப்பாயில் டிரக்டரில் கழிவுப் பொருட்களை ஏற்றி வருகிறோம் எனக்கூறியும் பழைய இரும்புகள் கொள்ளையிடப்பட்டுள்ளது.

இவ்வாறான சம்பவங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் 'உங்கள் படலைகளும் கவனம்' என அறிவுரை கூறுகிறார்கள். (எ-4)

# குடும்பப் பெண் காயம்

(உடுப்பிட்டி)

கன்ரர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதிய விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் ஒருவர் படுகாயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இச்சம்பவம் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நெல்லியடி நாவலர் மடச் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் கரணவாய் கிழக்கு கரவெட்டியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தாயான க.வதனா (வயது 45) என்ற குடும்பப் பெண்ணே படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றார். சம்பவம் தொடர் பாக நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-3-52)

EASY ENGLISH
ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்
YAALH ENGLISH ACADEMY
யாழ். நகரில் வகுப்பிட அனுசரணை:
புதிய உயர் கல்லூரி
விபரங்களுக்கு :0773212711
(7379)

## இன்று ஒரு தகவல்

# உயிர் நம் கையில்

கடந்த மாதம் ஒரு சினிமா பார்த் தோம். அதிலே ஒரு காட்சி!

அதாவது ஒரு ஆசாமி சாகக்கிடக்கிறார். வெளிநாட்டிலே இருந்து அவருடைய மகன் விமானத்திலே திரும்பி வருகிறான். அவன் விமானத்திலே இருந்து இறங்கி ஒரு காரைப்பிடித்து வீட்டுக்கு வந்து சேர்ந்தான். தகப்பனாரைப் பார்க்கிறான். தகப்பன் மகனைப்பார்க்கிறார். மெதுவாக வாயைத் திறந்து கதைக்க ஆரம்பிக்கிறார்.

"உன்னை கண்ணாலே ஒருதரம் பார்த்து விட்டு கண்ணை மூட வேண்டும் என்பதுதான் எனது ஆசை. உயிரை கையிலே பிடித்துக்கொண்டு காத்துக்கொண்டு இருக்கிறேன்" என்றார்.

அதே மாதிரி மகனைப்பார்த்ததும் உயிரைத் துறந்தார்.

அந்தப் படத்தை பார்த்து விட்டு திரும்பி வந்து கொண்டிருக்கும் போது ஒரு நண்பர்,

" சினிமாவில்தான் இது மாதிரியெல்லாம் நடக்கும்" என்று சொன்னார்.

" எதைச் சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டேன்.

" பையன் வெளிநாட்டில் இருந்து வந்து சேரும் வரைக்கும் சாக இருந்த தகப்பன் உயிரைக் கையிலே பிடித்துக் கொண்டு இருப்பது சினிமா படத்தில்தான் சாத்தியம். அது நடைமுறைக்கு சாத்தியப்படாது. நேர காலம் வந்து சேர்ந்தால் போய் சேர வேண்டியது தான்" என்றார்.

இவர் இப்படி சொல்வது " சரி" என்று தான் நமக்குத் தோன்றுகிறது.

ஆனால், கலிபோர்னியாவிலே நடந்த ஒரு ஆராய்ச்சியின் முடிவு வேறு மாதிரி இருந்தது.

" மரணத்தை சிறிது பிற்போட வேண்டுமா? அது மனிதனாலேயே முடியும்" என்பது இந்த ஆராய்ச்சியின் முடிவு.

இப்போது உதாரணத்திற்கு ஒருவர் மரணப் படுக்கையிலே இருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவருடைய பேரனுக்கு இன்னும் பத்து நாட்களிலே கல்யாணம் நடைபெறவுள்ளது அல்லது அவர்களின் குடும்பத்திலே ஏதோ ஒரு விசேடம் இடம்பெறவுள்ளது.

சாகக் கிடக்கிறவர் அந்த சந்தோஷத்துக்காக காத்திருக்க ஆரம்பித்து விட்டார் என்றால் அவருக்கு உயிர் போகாதாம்.

ஒரு மகிழ்ச்சியான விடயம் காத்துக்கொண்டிருக்கும் மரணத்துடன் போராடுகிறவர்களின் மனவலிமை அதிகரிக்கிறது.

மனிதனுடைய ஆதிக்கம் உடம்பு மேலே ஆக்கிரமிக்கிறது. அதனாலே மனதிலே இருக்கும் விருப்பமும் ஆசையும் நிறைவேறுகிற வரைக்கும் சாவு என்பது கிட்டவும் நெருங்காது.

நாம் ஒன்றைத் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும். மனம் உறுதியாக இருந்தால் உடம்பைக் கவனமாக வைத்துக்கொள்ள முடியும். உயிரைப் பிடித்து வைத்துக் கொள்ள முடியும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இணுவில் பொதுநூலக ச.ச.நிலையத்தின் ஆண்டு நிறைவையொட்டி போட்டிகள்

இணுவில் பொது நூலக சனசமூக நிலையத்தின் 10 ஆம் ஆண்டு புனருத்தாரண ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு பல்வேறு போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இதன்போது துடுப்பாட்ட போட்டிகள், பொதுஅறிவுப்போட்டிகள், கரம், சதுரங்கப்போட்டிகள் என்பவும் இரத்ததானம் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளதாக இணுவில்பொது சன நூலக சனசமூக நிலையம் அறிவித்துள்ளது.

இதற்கமைய நடைபெறவுள்ள துடுப்பாட்ட போட்டியில் 7 பேர் பங்குபற்ற முடியும் எனவும் விண்ணப்பத்தில் பெயர் குறிப்பிட்ட வீரர்கள் மாத்திரமே போட்டிகளில் பங்குபற்ற முடியும் எனவும் குறிப்பிடப்பட் டுள்ளது.

இதற்கு விண்ணப்ப கட்டணமாக 350 ரூபாவினை செலுத்துதல் வேண்டும். அத்துடன் பங்குபற்றும் அணித் தலைவர்கள் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு நூலகத்திற்கு சமூகமளிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

பொது அறிவுப்போட்டிகள் தரம் 5 முதல் 13 வரையான மாணவர்களுக்கு நடத்தப்படவுள்ளது. பொது அறிவு, பொது உளச்சார்பு, மொழிறத்திறன் ஆகிய பாடங்கள் நடைபெறவுள்ளன.

இதில் உடுவில் பிரதேசத்திற்குட்பட்ட பாடசாலைகள், வெளிவாரி மாணவர்களும் பங்குபற்ற முடியும். இப்பரீட்சைகள் 4 பிரிவுகளாக நடைபெறவுள்ளது. விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரம், சதுரங்க சுற்றுப் போட்டிகள் திறந்த சுற்றுப் போட்டிகளாகவும் ஒற்றையர், இரட்டையர், கலப்பு இரட்டையர்களாகவும் நடைபெறவுள்ளது.

இப்போட்டியானது எதிர்வரும் 17, 18 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி முதல் இடம்பெறவுள்ளது.

போட்டிக்கான சதுரங்கப் பலகையினை போட்டியாளர்களே எடுத்து வருதல் வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் இரத்ததானம் செய்ய விரும்புவர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு நூலக கலாசார மண்டபத்திற்கு வருமாறும் இணுவில் பொது நூலக சனசமூக நிலையம் அறிவித்துள்ளது. (அ-7)

# ஜே/389 கிராம அலுவலர் பிரிவில் சுனாமி எச்சரிக்கை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் உள்ள வல்வெட்டித் துறை பிரதேசத்தின் ஜே/389 கிராம உத்தியோகத்தர் பிரிவில் சுனாமிக்கான பாசாங்கு எச்சரிக்கை மற்றும் போலி நடிப்பு பயிற்சி இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது என யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார்.

இச்செயற்பாடுகள் அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் மேற்கொள்ளப்படவுள்ளது. இப்பயிற்சி சம்பந்தமாக பொது மக்கள் பீதியடையாமல் அமைதியாக இருக்குமாறும் இது ஒரு ஒத்திகை செயற்பாடு என்பதால் எவரும் குழப்பமடையத் தேவையில்லை எனவும் அவர் பொது பொதுமக்களை கேட்டுள்ளார். (அ-7)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 65-70 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 65 | 60 | 50 |
| பச்சைமிளகாய் | 45 | 30 | 45 |
| தக்காளி | 10 | 20 | 20 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 30 |
| கோவா | 15 | 20 | 25 |
| கரட் | 40 | 60 | 40 |
| பூசணி | 35 | 30 | 30 |
| புடோல் | 20 | 40 | 25 |
| வாழைக்காய் | 35 | 20 | 40 |
| சின்ன வெங்காயம் | 55 | 40 | 50 |
| பெரிய வெங்காயம் | 70 | 60 | 70 |
| பாகற்காய் | 70 | 80 | 60 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | - | 50 | - |
| பயற்றங்காய் | 65-70 | 100 | 60 |
| லீக்ஸ் | 70 | 60 | 70 |
| பீற்றூட் | 20 | 20 | 30 |
| கறிமிளகாய் | 50 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 250 | 200 | 300 |
| போஞ்சி | 40 | 60 | 40 |
| கத்தரிதம்புள்ள | 30 | 40 | 25 |
| கீரை - 1 பிடி | 8-10 | 25 | 15 |
| தேசிக்காய் | 35-40 | 30 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 15-35 | 30 | 25 |
| வெங்காயப்பூ | 40 | 60 | 50 |

## இராசி பலன்

*06.03.2012*
*(மாசி 23, செவ்வாய்க்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.25 மணிக்கு*
*திரயோதசி முன்னிரவு 6.52 மணிவரை*
*ஆயிலியம் முன்னிரவு 9.45 மணிவரை*
*இராகுகாலம் 3.25-4.55 மணிவரை*
*சுபநேரம் 10.55-12.25 மணிவரை*
*பிரதோச விரதம்*

**மேடம்** போக்குவரத்தில் அலைச்சல்கள் ஏற்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், தொலைபேசி வழித் தகவல்கள் மகிழ்ச்சி தரும், வெளியுலக தொடர்புகள் வ்ரிவடையும் நாள், பெற்றோர் ஆதரவு பெருகும் நாள்.

**இடபம்** சகோதர ஒற்றுமை பலப்படும், குடும்பத்தினர் பாராட்டும் வகையிலான காரியங்களைச் செய்து முடிப்பீர்கள், சுவாரஸ்யமான நாள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**மிதுனம்** இனிமையான அனுபவங்கள் ஏற்படும், சுபகாரியப்பேச்சுக்கள் முடிவாகி மனநிம்மதியைக் கொடுக்கும், தனவரவு திருப்திகரமாக அமையும், விலை உயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரலாம்.

**கடகம்** சாமர்த்தியமாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்ளும் நாள், தொழில் முன்னேற்றம் கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், பயனாளிகளால் பலன் கிடைக்கும்.

**சிங்கம்** தாராளமாகச் செலவு செய்து மகிழும் நாள், வியாபாரம் தொழிலில் அதிகார பூர்வமான மாற்றங்களைச் செய்ய முன் வருவீர்கள், விரும்பிய பொருளை வாங்கி மகிழ்வீர்கள், சயன சுகக் குறைவான நாள்.

**கன்னி** இயல்பான வழியில் இன்பங்கள் கூடும்நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும், எக்காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், குடும்பத்தில் உள்ளவர்கள் செல்வாக்கு மேலோங்கும்.

**துலாம்** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், சுபகாரியம் நடைபெறும் நாள், அந்நியர் உதவிகள் கிடைக்கும், அசௌகரியமான நாள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** காலை நேரத்திலே கனிவான செய்திகள் வந்து சேரும் நாள், பூர்வீகச்சொத்துக்களால் நன்மை உண்டு, வருமானம் எதிர்பார்த்தபடி வந்து சேரும், தொழிலில் புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**தனுசு** கந்தன் வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவுகள் ஏற்படலாம், நம்பிக்கையான ஒருவர் சின்னத்தனமாக நடந்து கொள்வர்.

**மகரம்** எடுத்த கருமங்கள் கைகூடும், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், பேச்சில் கனிவு பிறக்கும், தொழில் முன்னேற்றமுண்டு, பொருளாதார நிலை மேம்படும்.

**கும்பம்** அயலவருடன் ஏற்பட்ட பகை மாறும், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, செய் தொழில் உயர்வும் மேன்மையும் ஏற்படும்.

**மீனம்** யோகமான நாள், எதிர்பாராமல் செய்த காரியங்களில்கூட எளிதில் வெற்றி கிடைக்கலாம், வியாபார விருத்தி ஏற்படலாம், பணத் தேவைகள் பூர்த்தியாகும், குடும்பத் தே வைகளை நிறைவு செய்து கொள்வீர்கள்.

வளவன்





வட இலங்கை சங்கீத சபை நடத்திய சற்குரு ஸ்ரீ த[illegible]ஜா சுவாமிகளின் 165 ஆவது ஆராதனை விழா நேற்று முன்தினம் ஸ்ரீ வெங்கடேஸ்வரப்பெருமாள் ஆலய லக்சுமி நாராயண மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சகல கலைஞர்களும் பங்கேற்ற பஞ்சரத்தின கீதாஞ்சலி இடம்பெறுவதையும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவிகள் மற்றும் இசை ஆர்வலர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- உ. சாளீன்)

# இந்திய, இலங்கை கடற்படையினர் கூட்டுரோந்தில் ஈடுபடவேண்டும்

## மீனவர் பிரச்சினைக்கு இதுவே தீர்வு என்கிறார் டக்ளஸ்

(கச்சதீவு)

இருநாட்டுக் கடற்படையினரும் கூட்டு ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவதன் மூலமே மீனவர் பிரச்சினையைத் தீர்க்கமுடியும் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வளாகத்தில் கடந்த 3ஆம் திகதி இரவு இடம்பெற்ற இந்தியத்தமிழக மற்றும் இலங்கை வடபகுதி மீனவர்களுடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் தடைசெய்யப்பட்டுள்ள ரோலர் மீன்பிடியை ஒருபோதும் அனுமதிக்க முடியாது எனவும் எல்லை தாண்டிய இழுவைப் படகு தொழில்முறை முற்றாகத் தடை செய்யப்படவேண்டும். இந்திய, இலங்கை அரசுகளும் இருதரப்புக் கடற்றொழிலாளர்களும் கலந்துரையாடுவதன்மூலமே மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்பதுடன் கடந்த ஆண்டு நடைபெற்று முடிந்த சார்க் மாநாட்டின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் இவ்விடயம் தொடர்பில் ஏற்கனவே கலந்துரையாடியிருந்தனர்.

மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக இருநாட்டு கடற்படையினரும் கூட்டு ரோந்து நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பில் இருநாட்டு அரசுகளுக்கும் பரிந்துரை செய்யவுள்ளதாகவும் தெரிவித்தார்.

மீனவர் பிரச்சினையை வெளிக்கொணரும் முகமாக இருநாட்டு ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் மத்தியில் நடத்தத் திட்டமிட்டதாகத் தெரிவித்தார்.

மேலும் இந்திய மற்றும் இலங்கைத் தரப்பின் துறைசார்ந்த அமைச்சர்கள் உள்ளிட்டோருடன் கலந்துரையாடி சாதகமான தீர்வைப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதிமொழி தெரிவித்தார். (அ-6)

# நாணய கண்காட்சி

(கரவெட்டி)

உலக நாணயக் கண்காட்சி இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணிவரை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் அதிபர் திருமதி எஸ்.சுந்தரேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

உலகில் உள்ள பல்வேறு நாடுகளிலுள்ள நாணயங்கள் இக்கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

வடமராட்சி கல்வி வலயத்தின் அனுசரணையுடன் இக்கண்காட்சி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-24)

# பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் தாமதம் ஏன்?

## மக்கள் கேள்வி

(கரவெட்டி)

வடமராட்சி தெற்குமேற்கு பிரதேச சபையின் அபிவிருத்தி வேலைகள் மிகவும் மந்தகதியில் இடம்பெற்று வருவதாகவும் அபிவிருத்தி தொடர்பாக மக்களுக்குப் போதிய தெளிவின்மை உள்ளதாகவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

உள்ளூராட்சி தேர்தலில் வெற்றிபெற்று சபை அமைக்கப்பட்டு பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டும் அபிவிருத்தி வேலைகள் மிகவும் மந்தகதியிலேயே உள்ளது.

வீதி புனரமைப்பு, மின்விளக்குப் பொருத்துதல், சபைக்குட்பட்ட பிரதேசங்களில் உள்ள சந்தைகள், கிணறுகள், கடைகள் மற்றும் ஏனைய கட்டடங்களை புனரமைத்தல் உள்ளிட்ட சபையின் எல்லைக்குட்பட்ட அபிவிருத்திகள் இதுவரை எதுவிதமான நடவடிக்கை எடுக்காமல் உள்ளது.

இதனால் அக்கட்டங்கள் மக்கள் பாவனைக்கு உரிய முறையில் இல்லாது மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் சபையை சிறந்தமுறையில் நடத்தி மக்களின் தேவைகளிலும் பிரதேசத்தின் அபிவிருத்தியிலும் அக்கறைகாட்ட முன்வரவேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-24)

# விழிப்புணர்வு நாடகம்

(காரைநகர்)

பெண்கள்ள சட்டரீதியாக வலுப்படுத்தல் தொடர்பான விழிப்புணர்வு நாடகம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு காரைநகர் வியாவில் சைவ வித்தியாசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யு.என்.டி.பி நிறுவன அனுசரணையுடன் வியாவில் கிராம அபிவிருத்தி சங்கத்தால் நடத்தப்படும் இந்நாடகம் சட்டவல்லுநர்களைக் கொண்ட குழுவினரால் அரங்கேற்றப்படுகிறது.

எனவே அனைத்துப் பொதுமக்களையும் கலந்துகொண்டு பயன்பெறுமாறு வியாவில் கிராம அபிவிருத்தி சங்கத்தினர் கேட்டுள்ளனர். (அ-3-246)




# நெல்லியடி இலங்கை வங்கி கிளைக்கு புதிய நவீன கட்டடம்

(கரவெட்டி)

இலங்கை வங்கி நெல்லியடி கிளைக்கு 53 மில்லியன் ரூபாய் செலவில் புதிய நவீன கட்டடம் அமைக்கும் பணி இவ்வருட இறுதிக்குள் ஆரம்பிக்கவுள்ளதாக வங்கி முகாமையாளர் கே.ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வீதியில் உள்ள தனியார் வர்த்தக நிலையம் ஒன்றில் தற்போது இயங்கிவரும் மேற்படி வங்கி சொந்தக்கட்டடம் இன்மையால் பல சிரமங்களை எதிர்கொண்டு வந்தது.

ஆயினும் தற்பொழுது நெல்லியடி லக்ஸ்மி திரையரங்கு இருந்த இடத்தில் உள்ள வெற்றுக்காணியை 150 இலட்சம் ரூபாயிற்கு வங்கியால் கொள்வனவு செய்யப்பட்டு நவீன வசதிகள் கொண்ட இலங்கை வங்கி ஒன்றை நிர்மாணிக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-3-24)

# அபிவிருத்திக்கடன் வழங்கும் நிகழ்வு

(கரவெட்டி)

இலங்கை வங்கி நெல்லியடி கிளையினால் கெருடாவில் அம்மன் கோவில் பகுதியில் வைத்து சுயதொழில் ஊக்குவிப்பு அபிவிருத்திக்கடன் வழங்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வங்கி முகாமையாளர் கே. ஆனந்தராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இலங்கை வங்கி நெல்லியடி கிளையின் வாடிக்கையாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்புடுத்தும் நோக்கத்துடன் சுய தொழில் ஊக்குவிப்புக்கு கடனாக 20 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் முதற்கட்டமாக இன்று சுயதொழில் ஊக்குவிப்புக்கடன் வழங்கப்படவுள்ளது. (அ-3-24)

# வீதிக்கான மின்விளக்குகளை பொருத்துவதில் தாமதம்

## மக்கள் விசனம்

(கரவெட்டி)

பருத்தித்துறை பிரதேச சபைக்குட்பட்ட வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்துவதில் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பருத்தித்துறை பிரதேச சபைக்குட்பட்ட வீதிகளுக்கு 300 மின் குமிழ்கள் பொருத்துவதற்கு சபையினால் தீர்மானிக்கப்பட்டு வேலைகளும் இடம்பெற்று வந்தன.

நீண்டகாலமாக இம்மின் விளக்குகளை பொருத்தாமையால் மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இதுவரை 50 மின்குமிழ்கள் மட்டுமே பொருத்தப்பட்ட நிலையில் மிகுதி 250 மின் குமிழ்களின் நிலைமை தொடர்பாக பல சந்தேகங்கள் எழுந்துள்ளன.

எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் மின் குமிழ்களை மிக விரைவாக பொருத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-24)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் மின் விநியோக மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டும் நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை மின்விநியோகம் தடைப்படும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் ஆகிய பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும். (அ)





சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் யா/சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரியில் இருந்து பங்கேற்ற 15 வயதிற்குட்பட்ட ஆண்கள் (2 ஆம் இடம்), 17, 19 வயதிற்குட்பட்ட ஆண்கள் (முதலாம் இடம்) ஆகியோருடன் அதிபர், பயிற்சியாளர்கள் நிற்பதைப் படங்களில் காணலாம்.

(படங்கள்:- சங்கானை செய்தியாளர்)

## மீளாய்வுச் செயலமர்வு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்களுக்கான துரித கற்றல் செயற்றிட்டம் மீளாய்வு செயலமர்வு எதிர்வரும்10 ஆம் திகதி மாங்குளம் ஆசிரியர் மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இச்செயலமர்விற்கு அதிபர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறும் வருகை தரும் போது தங்களுடைய பாடசாலையின் பிள்ளைநேயப்பாடசாலை தொடர்பான முன்னேற்ற செயற்பாட்டு அறிக்கைகள், இறுவெட்டுக்கள், புகைப்படங்களுடன் சமூகம் தரும்படி அவர் கேட்டுள்ளார். (அ-3-15)

# த.தே.கூட்டமைப்பு அமெரிக்காவுக்கு கடிதம் அனுப்பியதால் தமிழ் மக்கள் பாதிக்கப்படுவர்

## சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு ஆதரவு கோரி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சர்வதேச நாடுகளுக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

இந்தச் சவாலை நாடும் சிங்கள மக்களும் எதிர்கொள்வார்கள். ஆனால், இதனால் பாதிக்கப்படப்போகும் அப்பாவித் தமிழ் மக்களை யார் பாதுகாப்பார்கள் என அமைச்சரும் ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

ஐ.நா.மனித உரிமைப் பேரவையில் நாட்டிற்கு எதிரான தீர்மானங்களை நிறைவேற்றும் வகையில் ஐந்து சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் செயற்படுகின்றன.

அதே போன்று அமெரிக்கா மிகவும் மோசமான முறையில் இலங்கைக்கு எதிராக செயற்படுகின்றது. எவ்வாறாயினும் நாட்டிற்கு எதிரான அனைத்து தீர்மானங்களுக்கு எதிராகவும் இலங்கை தயார் நிலையிலேயே உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானங்களைக் கொண்டு வருவதற்கு அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகளுள் சில சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும் செயற்படுகின்றன. இதற்கு மேலும் துணை போகும் வகையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு 47 சர்வதேச நாடுகளுக்கும் கடிதம் அனுப்பி இலங்கைக்கு எதிராக செயற்படும் வகையில் கோரிக்கை விடுத்துள்ளது.

சிங்கள மக்கள் தாய் நாட்டிற்கு எதிராக வரும் அனைத்து சவால்களில் இருந்தும் நாட்டைப் பாதுகாப்பார்கள். ஆனால், இதனால் மீண்டும் பின்னடைவுகளையும் ஆபத்துக்களையும் சந்திக்கப் போகின்றவர்கள் இலங்கையில் வாழும் தமிழ் மக்களேயாவர். ஏனெனில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினதும் புலிகளினதும் பிரிவினைவாத செயற்பாடுகளினால் பாதிக்கப்பட்டது இந்நாட்டு தமிழ் மக்களேயாவர்.



இந்த நிலை மீண்டும் தொடரக் கூடாது என்பதே நம் அனைவரினதும் விருப்பமாகும். ஆனால், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஏனைய மேற்குலக நாடுகளுடன் இணைந்து கொண்டு நாட்டிற்கு எதிரான தீர்மானங்களுக்கு ஒத்துழைப்புக்களை வழங்கி வருகின்றது. இதனைத் தொடர்ந்தும் 'வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது என சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். (அ-2)

# கச்சதீவில் இறங்குதுறை அமைக்க நடவடிக்கை

## அமைச்சர் உறுதிமொழி



(கச்சதீவு)

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படும் அதேவேளை ஆலயத்திற்கு வரும் பக்தர்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு இறங்குதுறை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதிமொழி வழங்கியுள்ளார்.

கச்சதீவுப் பகுதிக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு வருகை தரும் பக்தர்களின் நலன்கள், தேவைகள் தொடர்பில் ஆராய்ந்தறிந்து கொண்டார்.

இதன்பிரகாரம் அடுத்தாண்டு நடைபெறவுள்ள ஆலய வருடாந்த உற்சவத்தின் போது வருகை தரவுள்ள இந்திய- இலங்கை பக்தர்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு குடிநீர், போக்குவரத்து, மின்சாரம், மலசலகூடம் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகள் தொடர்பில் தீர்வு காணப்படும் என்று உறுதிமொழி வழங்கினார்.

இதனிடையே வடக்குத் திசையில் இறங்குதுறை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப் படுமெனவும் உறுதிமொழி வழங்கினார். ஆலய வீளாகத்தை பார்வையிட்ட அமைச்சர் இந்திய-இலங்கை பக்தர்களிடம் தேவைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டதுடன் பால் பக்கெற் றுக்களையும் வழங்கி வைத்தார். (அ-2)

# மாவட்ட செயலகங்களில் வாகனங்களை பார்வையிடலாம்

(கொழும்பு)

கடந்த 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற போர் நடவடிக்கையின் போது பொதுமக்களால் கைவிட்டுச் செல்லப்பட்ட ஒரு பகுதி வாகனங்களின் விபரங்களினை முல்லைத்தீவு மாவட்ட பிரதேச செயலகத்திலும் மற்றும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களிலுள்ள மாவட்ட செயலகங்களிலும் பொது மக்கள் பார்வையிடலாம் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் சில வாகனங்களின் உரிமையாளர்களே வாகனங்களைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

ஏனையோர் விண்ணப்பங்களை இது வரை சமர்ப்பிக்கவில்லை.

என்வே, மேற்படி செயலகங்களில் தங்கள் வாகனங்களின் விபரங்களை பார்வையிட்டு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட செயலகத்தில் விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்குமாறும் அதற்குப் பின்னர் விண்ணப்பங்கள் எவையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது எனவும் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகம் பொதுமக்களைக் கேட்டுள்ளார். (அ-2)


## 31ம் நாள் நினைவஞ்சலி



அமரர் அண்ணாமலை முத்துத்தம்பி (பலாலி வடக்கு, பலாலி)

அன்பின் உருவாகி எம் நெஞ்சில் நிறைந்த
அன்பு அண்ணனே தூரதேசம் சென்றும்
சொந்தம் மறவாது எமை நெஞ்சில் வைத்த
எம் செல்வமே வாழ்வு நிலையற்றது தான்
ஆனாலும் உம் பிரிவு எமை வாட்டுதே!

(தம்பி ஜெயக்கொடி)

உம் பிரிவால் துயரும்

மனைவி மு.பு.மணி, சேகர் (பிரான்ஸ்), பஸ்கால் Willsried, Willialm குணரட்ணம் (சுவிஸ்), வதனி, லக்ஷமன்,லக்ஷனா, சுரேஷ் (பிரான்ஸ்), கருஷாந்தி, போஸ், இம்மானுவேல் ஜெயசித்ரா (வவி), சென்சியா, மெக்ஷன்சி, மெக்ஷிம்,

ஊரெழு மேற்கு, ஊரெழு.

மு.சதீஸ்குமார், சகோதரர்கள்.

(சி/6018)





கனடா தமிழ்ச் சங்கத்தின் அனுசரணையுடன் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு காலணிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் மாணவருக்கு காலணி வழங்குவதனையும் மாணவர் கள் அமர்ந்திருப்பதனையும் படங் களில் காணலாம்.

(படங்கள்:- மல்லாவி செய்தியாளர்)

# இலங்கை மீனவர்கள் இந்திய பணியாளரைக் காப்பாற்றினர்

(கொழும்பு)

இந்திய வர்த்தக கப்பலொன்றில் இருந்து கடலுக்குள் தவறி விழுந்ததாக கூறப்படும் கப்பல் பணியாளர் ஒருவர் இலங்கை மீனவர்களால் காப்பாற்றப்பட்டுள்ளார்.

குறித்த கப்பல் பணியாளர் மூன்று தினங்களுக்கு முன்னர் திருகோணமலைக்கு அப்பாற்பட்ட கடற்பரப்பில் விபத்துக்குள்ளானதாக கடற்படை பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கடற்படையினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய கடந்த சில நாட்களாக குறித்த பகுதியில் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

விபத்துக்குள்ளானதாக கூறப்படும் இந்திய கப்பல் பணியாளர் மீனவர்களினால் காப்பாற்றப்பட்டுள்ளதாக கடற்படையினருக்கும் தகவல் கிடைத்துள்ளது. இதனையடுத்து நடத்தப்பட்ட தேடுதலின் போது குறித்த கப்பல் பணியாளர் இருந்த மீனவ படகு நேற்று முன்தினமிரவு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

-நோய்வாய்ப்பட்டிருந்த குறித்த கப்பல் பணியாளருக்கு முதலுதவி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் திருகோணமலை வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# யுத்த பிரதேசம் இன்று அமைதிகண்டு வருகிறது

## தேசிய மக்கள் இணைவாக்க ஐக்கிய மன்றம்

(கொழும்பு)

கால் நூற்றாண்டு கால யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு 3 ஆண்டுகள் முடிவுறும் நிலையில் அரசின் தேசிய நல்லிணக்க ஏற்பாட்டின் மூலம் யுத்த நிலம் இன்று அமைதியையும் அபிவிருத்தியையும் கண்டு வருவதை மறந்து விட முடியாது.

நாட்டில் வாழும் குடிகள் எவரும் கோராத நிலையில் ஜெனீவாவில் நடைபெறும் ஐ.நா. சபையின் மனித உரிமை பேரவையின் அமர்வில் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகள் இலங்கைக்கு எதிராக கொண்டு வர எந்தனிக்கும் பிரேரணையானது நாட்டின் இறைமைக்கும் ஒருமைப்பாட்டுக்குமான அச்சுறுத்தலாகும் என ஜெனீவா மாநாடு தொடர்பாக தேசிய மக்கள் இணைவாக்க ஐக்கிய மன்றம் (யு.சி.என்.சி.) வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யு.சி.என்.சியின் பொதுச் செயலாளர் ஏ.யு.எல்.எம்.நஸீர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இனங்களுக்கிடையில் புரிந்துணர்வும் நல்லிணக்கமும் ஒற்றுமையும் மிளிர்ந்து வரும் தறுவாயில் இலங்கையின் அபிவிருத்திப் பணிகளுக்கு உதவுவதை விடுத்து மக்கள் மனம் புண்படும் வகையில் நாட்டின் இறைமையில் கைவைக்கும் வகையில் ஐ.நா. சபை செயற்படுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இறுதிக்கட்ட நடவடிக்கை பற்றி பிரேரணை கொண்டு வர முன்பு குறித்த விடயத்தின் ஆரம்பகட்ட நடவடிக்கைகள் பற்றியும் பாதிப்புக்கள் பற்றியும் அவற்றை ஏற்படுத்தியவர்களுக்கு எதிராக பிரேரணை கொண்டு வருவதே சரியான வழி முறையாகும்.

யுத்தகால மனநிலையுடனே வாழும் புலம் பெயர்ந்த மக்களின் செயற்பாடுகள் உள்நாட்டில் அமைதியாக வாழும் மக்களின் சகல வாழ்வை பாதிப்புறச் செய்யும் வகையில் அமைந்து விடக்கூடாது.

நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட எடுக்கும் நடவடிக்கைகளை மனித உரிமை மீறல்கள் என்று கொச்சைப்படுத்தக் கூடாது. இது விடயத்தில் தெளிவூட்ட வேண்டிய கடமை உள்நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கு உள்ளது. (அ-2)

# அமெரிக்காவின் நடவடிக்கை மனிதாபிமானமற்ற செயல்

## இந்திய பத்திரிகை சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி யுத்தம் முடிவடையும் போது உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை 2 இலட்சத்து 90 ஆயிரமாக இருந்தபோதிலும் பெரும்பாலானவர்கள் மீளக் குடியமர்த்தப்பட்டு விட்டனர்.

மேலும் 6 ஆயிரத்து 649 பேர் மாத்திரமே மீள் குடியமர்த்தப்பட இருக்கின்றனர் என இந்தியாவிலிருந்து வெளிவரும் பத்திரிகையான பயனியர் பத்திரிகை தெரிவிக்கின்றது.

விடுதலைப்புலிகளின் சிறுவர் போராளிகளுக்கு புனர்வாழ்வளித்து பெற்றோர்களிடம் அவர்களை அரசாங்கம் ஏற்கனவே ஒப்படைத்துவிட்டது. இவர்களுடன் முன்னாள் புலி உறுப்பினர்களும் புனர்வாழ்வு அளிக்கப்படுகின்றனர்.

வட பகுதியில் கண்ணிவெடிகளை அகற்றும் பணி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதன் மூலமே அரசாங்கம் அங்கு உள்ளூராட்சித் தேர்தல் ஒன்றை நடத்தி சிவில் நிர்வாக அமைப்பை நடைமுறைப்படுத்தியிருக்கின்றது.

இலங்கையில் யுத்தவடுக்கள் மாறிக்கொண்டிருக்கும் வேளையில் சர்வதேச சமூகம் மீண்டும் யுத்தம் தொடர்பான அழுத்தங்களையும் குற்றச்சாட்டுக்களையும் இலங்கை மீது சுமத்துவது நியாயம் அற்ற செயல் என்றும் அப்பத்திரிகை மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# தேசிய பாதுகாப்பு குறித்த மாநாடு நிறைவடைந்தது

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் அரசியல் கட்சித் தலைவர்கள் உள்ளிட்ட அமைச்சர்கள், பிரதியமைச்சர்களுக்காக நடத்தப்பட்ட செயலமர்வு நேற்று முன்தினத்துடன் நிறைவுற்றது.

இலங்கையின் தேசிய பாதுகாப்பு அன்று, இன்று , நாளை என செயலமர்வுக்கான தொனிப்பொருளாக இருந்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் பயங்கரவாதத்தை முறியடிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட மனிதாபிமான நடவடிக்கையின் அனுபவங்கள் தொடர்பாகவும் இந்த செயலமர்வில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

ஒரு நாட்டை தேசிய ரீதியாக மேம்படுத்தும் போது கலாசாரம், சுயாதீனத்தன்மை என்பவற்றை பாதுகாப்பது தொடர்பாக விளக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கையில் தற்போதைய அபிவிருத்தி நடவடிக்கைகள், சர்வதேச அழுத்தங்கள் போன்றவை தொடர்பாகவும் செயலமர்வின் போது கலந்துரையாடப்பட்டுள்ளன.

இதன்போது கருத்து வெளியிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் அனைத்து அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களுக்காக நடத்தப்பட்ட செயலமர்வு வெற்றியளித்துள்ளதாக அமைச்சர் டலஸ் அழகப் பெரும தெரிவித்துள்ளார்.

எமது பயணம் என்ற பெயரில் நடத்தப்பட்ட செயலமர்வின் பிரதிபலன் நேரடியாக பொதுமக்களுக்கே கிடைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் தேசிய பாதுகாப்பு தொடர்பாகவும் அமைச்சர், பிரதியமைச்சர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது. (அ-2)


## நான்காம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 21 01 1957



இறப்பு 06 03 2008

அமரர் கிட்டினன்-சிவநேசன்

(முன்னாள் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்

(பொது முகாமையாளர்-வடமாகாண பேரிணையம்)

பனை தென்னை வள கூட்டுறவு அபிவிருத்திச் சங்கம்.

*அன்பின் உருவமாய் நீயிருப்பாய்-எம்*
*மகிழ்ச்சிதனை காண்பாய் என நாம் இருக்க*
*காலனவன் வந்தானோ எம் கை நழுவி உனை எடுக்க*
*மீண்டும் நீ வருவாய் என காத்திருந்த- எம்*
*விழிகள் நோகுதப்பா--- மீண்டும் நீ வருவாயா?*

யாக்கரு,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

குடும்பத்தினர்.

# இந்து ஆலயங்களுக்கு நிதியுதவி கடிதங்களை பிரதமர் வழங்குவார்

(கொழும்பு)

புத்தசாசனம் மற்றும் அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 135 இந்து ஆலயங்களின் புனரமைப்பிற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ம.சண்முகநாதன் அறிவித்துள்ளார்.

இதற்கமைவாக வருடந்தோறும் கிடைத்துவரும் கோரிக்கைகள் மற்றும் விண்ணப்பங்களுக்கமைய பதுளை, கொழும்பு, களுத்துறை, கண்டி, கேகாலை, மாத்தளை, இரத்தினபுரி, நுவரெலியா, புத்தளம், மொனராகலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 135 ஆலயங்களுக்கு நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நிதியுதவிக்கான கடிதங்களை பிரதமரும் புத்தசாசன மத அலுவல்கள் அமைச்சருமான தி.மு.ஜயரட்ன இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் வைத்து ஆலயங்களின் பரிபாலன சபையிடம் கையளிக்கவுள்ளார்.

இதேவேளை இந்நிகழ்வில் புத்தசாசன மத அலுவல்கள் பிரதியமைச்சர் எம்.கே.ஏ.டீ.எஸ். குணவர்த்தன, அமைச்சின் செயலாளர், கெசியன் ஹேரத், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் மற்றும் பல பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (அ)

# பகிரங்க ஏலவிற்பனை

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்டு உரிமைகோரப்படாத சான்றுப் பொருட்கள் எதிர்வரும் 10ஆம் திகதி காலை 10 மணி தொடக்கம் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளதாக யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

பொருட்களினை கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவாக பணத்தினை மட்டும் செலுத்த வேண்டுமெனவும் காசோலை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது எனவும் அறிவித்துள்ளார். (அ)

# இடமாற்றம்

கிளிநொச்சி மாவட்ட மீன்பிடித் திணைக்கள நீரியல்வளத்துறை உதவிப் பணிப்பாளராக இரவீந்திரன் நேற்று முன்தினம் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இதுவரையான காலமும் கிளிநொச்சியில் கடமையாற்றிய உதவிப் பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி யாழ்.மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவர் கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மீள் குடியேறிய மீனவர்களுக்கு 2 வருடங்களாக சேவையாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-10)

# நிர்வாகத் தெரிவு

பருத்தித்துறை தும்பளை மேற்கு ஸ்ரீவரத விநாயகர் தேவஸ்தானத்தின் நிர்வாகத்தெரிவு அண்மையில் நடைபெற்றது.

இதில் தலைவராக கி.பாலகெங்காதரன், செயலாளராக முகுணேசன், பொருளாளராக ச.சிவஞானசுந்தரம், உபதலைவராக ச.திருஞானசம்பந்தர், உபசெயலாளராக ம.சுரேஸ், முகாமையாளராக த.சிவபாதசுந்தரம், களஞ்சியக் காப்பாளராக எஸ்.பி.விவேகானந்தன், நிர்வாகிகளாக இ.நிரஞ்சன், க.தர்சன், இ.சிவரூபன், ந.நிதர்சன், வே.கபிலன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (அ-10)


## சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு வடமாகாணம்

### வாடகைக்கு வாகனம் (08 ஆசனம்) அமர்த்துதல்

1.மாகாண அமைச்சின் பெறுகைகள் குழுவின் தலைவரினால் JSDF திட்ட கடமைகளுக்காக வாகனம் வாடகைக்கு அமர்த்துவதற்கான கேள்வி கோரப்படுகின்றது.

2.நாட்டமுள்ள விலைமனுதாரர்கள் கேள்வி ஆவணங்களை மாகாண சுகாதார அமைச்சு வடமாகாணம், சுகாதார கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உள்ள அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

3.கேள்வி ஆவணங்கள் 05.03.2012 தொடக்கம் 12.03. 2012 வரையான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் 09.00 மணியிலிருந்து 15.00 மணிவரை அலுவலக நேரத்தில் ஒவ்வொரு தனித்தனி கேள்வி படிவத்திற்கும் மீளளிக்கப்படாத வைப்பு பணமாக 1000 காசாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

4. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் மூடிய கடித உறையினுள் இட்டு தலைவர், பெறுகைகள் குழு சுகாதார அமைச்சு, வடமாகாணம், சுகாதார கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது அலுவலகத்தில் பிரதான பெறுகைகள் பெட்டியினுள் 14.03.2012 அன்று காலை 10.00 மணிக்கு முன்னதாக கிடைக்கத்தக்கதாக சேர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விகள் கேள்வி நேர முடிவில் உடனடியாக திறக்கப்படும்.

5. மேலதிக விபரங்களை அலுவலகத்திலோ அல்லது 021-222 0801 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ பெற்றுக் கொள்ளலாம்.

இ.இரவீந்திரன்,
தலைவர்,
பெறுகைகள் குழு,
சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு,
வடமாகாணம். (சி-6019)


# ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய பொதுக்கூட்டம்

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய பருத்தித்துறை பிரதேச சங்க 2ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இளைப்பாறிய நீதிபதி பா.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலக பிரதேச செயலாளர் இ.த.ஜெயசீலன், சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலகக் கணக்காளர் கி.யோகேந்திரன், யாழ்.மாவட்ட பகிரங்கசேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய செயலாளர் பொ.கமலநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இக்கூட்டத்தின்போது கடந்த ஆண்டு செயலாளர் ஆண்டறிக்கை, பொருளாளர் அறிக்கை சமர்ப்பிப்பு, நம்பிக்கை நிதியத்தின் நிர்வாக சபை உறுப்பினர் தெரிவு என்பன இடம்பெறவுள்ளது என சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (அ-7)

# கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

கொக்குவிலைச் சேர்ந்த வி.லோகேஸ்வரன் என்பவரது வாகன வருமான உத்தரவுப் பத்திரம் கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் அலுவலக நேரத்தில் வந்து தகுந்த ஆதாரத்தை காட்டிப் பெற்றுக் கொள்ளலாம். (அ)

* * * * * *

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர் செம்மணி வீதியைச் சேர்ந்த சறோஜினிதேவி மனோ கரன் (5073 11121வ) என்பவரது அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ள முடியும் என யாழ். போதனா வைத்திய சாலை செயலாளர் ஏ.எஸ். பிரசாத் அறிவித்துள்ளார். (அ-2)

* * * * * *

காரைநகர் கோவளத்தை சேர்ந்த குமாரசுவாமி கனகலிங்கம் 410772027வி என்பவரது தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்து ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும். (அ)

# இலங்கை விவகாரம் தமிழக மக்களின் எண்ணங்களை வெளிப்படுத்தும்

## ஜி.கே.வாசன் தெரிவிப்பு

இலங்கை விவகாரத்தில் தமிழக மக்களின் எண்ணங்களை வெளிப்படுத்தும் வகையில் மத்திய அரசு செயற்படும் என இந்திய மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் ஜி.கே.வாசன் தஞ்சாவூரில் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தை இருளாக்க நினைக்கும் எதிர்ப்பாளர்கள் சூட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். கூடங்குளம் அணு மின் நிலையத்தை திறக்க வேண்டும்.

அதற்குரிய பணிகளை மத்திய மாநில அரசுகள் விரைந்து செய்ய வேண்டுமெனத் தமிழக மக்கள் எதிர்பார்க்கிறார்கள். மத்திய அரசைப் பொறுத்தவரை தமிழர்களின் நலன் காக்கும் அரசாகவே என்றும் செயற்படும்.

மீனவர்களின் நலன் காக்கவும் அவர்களின் எண்ணங்களைப் பிரதிபலிக்கும் வகையிலும் மத்திய அரசு செயற்படும். கேரளத்தில் மீனவர்கள் கொல்லப்பட்டது வருந்தத்தக்கது. இந்த விவகாரத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இலங்கை குறித்து ஐ.நா.சபையில் கொண்டு வரப்படவுள்ள தீர்மானத்தில் இந்தியாவின் நிலைப்பாடு குறித்த கேள்விக்கு தமிழக மக்களின் எண்ணங்களை வெளிப்படுத்தும் வகையில் மத்திய அரசு செயற்படும். இதைத் தமிழக காங்கிரசும் வலியுறுத்தும் எனவும் வாசன் கூறியுள்ளார். (அ-2)

# வடக்கு ரயில் பாதைக்கு இந்தியா நிதியுதவி

வடக்கு புகையிரதப் பாதையை மீள அமைப்பதற்காக இந்திய அரசு 382.37 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்குகிறது.

இலகு கடன் அடிப்படையில் இத்தொகையை பெறுவதற்கு இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதற்கும் இலங்கை அரசு முடிவு செய்துள்ளது.

பளை முதல் காங்கேசன்துறை வரையிலான புகையிரத பாதையை மீள அமைப்பதற்கும் வடபகுதி புகையிரதப் பாதையின் சமிக்ஞை கட்டமைப்பை உருவாக்குதல் போன்றன முன்னெடுக்கப்படவுள்ளன.

வடபகுதி புகையிரத பாதையின் சமிக்ஞை கட்டமைப்பினை உருவாக்குவதற்காக இந்தியாவின் சுவதேச நிறுவனமான (IRCON) நிறுவனத்துடன் ஏற்கனவே இலங்கை அரசு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. (அ-2)

# கருத்தரங்கும் கருத்தாடலும்

பெரியபுராணத்தில் இளையான்குடிமாற நாயனார் புராணம் பற்றிய கருத்தரங்கும் கருத்தாடலும் நாளை புதன் கிழமை காலை 9.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை தலைவர் மா.வேதநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வின் வரவேற்புரையை சரவணை நாகேஸ்வரி வித்தியாலய ஆசிரியர் கு.பாலசண்முகநாதன் தொடக்கவுரையை கலாநிதி மனோன்மணி சண்முகதாசும் வழங்கவுள்ளனர்.

இளையான்குடிமாறநாயனார் புராணத்தின் கட்டமைப்பு என்ற பொருளில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசனும் இளையான்குடிமாறநாயனார் காட்டும் வாழ்வியல் என்ற தலைப்பில் பண்டிதர் சைவப்புலவர் வ.ஆ.தங்கமயிலும் கருத்துரைகளை வழங்குவர்.

கருத்தரங்கைத் தொடர்ந்து கருத்தாடல் இடம்பெறும். இதன் இணைப்பாளர்களாக சொல்லின்செல்வர் இரா.செல்வவடிவேல், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆசிரியர் ந.சத்தியவேந்தன் ஆகியோர் பங்கேற்பர்.

இளைய தலைமுறையினரிடையே சமய நம்பிக்கைகளை கட்டி வளர்க்கும் நோக்குடனும் ஆய்வுப் பார்வையில் சமய இலக்கியங்களை அணுகும் முறைமையைப் பயிற்றுவிக்கும் எண்ணத்துடனும் இக்கருத்தரங்கு நடத்தப்படுகிறது. ஆர்வமுள்ள எவரும் இக்கருத்தரங்கில் பங்கேற்று பயன்பெறலாம் எனவும் இதன் நெறியாளர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தெரிவித்துள்ளார்.


மண்டபத்திற்கான அனுசரணையை யாழ்.மாநகரசபையின் கலாசாரப்பகுதியினரும் நிகழ்வுக்கான அனுசரணையை கொக்குவில் உயர் கலைக் கல்லூரியினரும் வழங்கியுள்ளனர். (அ-6)



சங்கானை கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் 15 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களுக்கு நடத்தப்பட்ட ஆண்கள் பிரிவில் யா/ அராலி சரஸ்வதி மகா வித்தியாலயமும் யா/ சுழிபுரம் விக்டோரியா கல்லூரியும் மோதுவதை படத்தில் காணலாம். (படங்கள்:- சங்கானை செய்தியாளர்)

# அமெரிக்காவுடன் இணைந்து நாடகமாடும் அரசிற்கு எதிராக கிளர்ந்தெழும் காலம்

## ஜே.வி.பி.தலைவர் சோமவன்ச அறைகூவல்



(கொழும்பு)

**ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணை என்பது அமெரிக்காவும் இலங்கை அரசும் இணைந்து நடத்துக்கின்ற நாடகமாகும். நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மக்களின் கவனத்தை திசை திருப்பவே அப்பட்டமான பொய்ப் பிரசாரத்தை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது என ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.**

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையும் அதன் பரிந்துரைகளும் அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலுக்குட்பட்டதாகும். இது தொடர்பான ஜெனீவா பிரேரணையானது நிறைவேறினாலும் நிறைவேறாவிட்டாலும் நாடு எதிர்பார்த்துள்ள தீர்வு நிச்சயமாக வரப் போவதில்லை. ஏனெனில் அதுவொரு வெறுமையான பிரேரணை எனவும் குறிப்பிட்டார்.

ஜே.வி.பி.தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தின் இரட்டை வேடம் தற்போது அம்பலத்திற்கு வந்திருப்பது யாவருக்கும் தெளிவாகும். பொருளாதார விடயத்திலும் அரசியல் நகர்விலும் தற்போதைய அரசாங்கம் அமெரிக்க ஏகாதிபத்தியதுக்கு அடிபணிந்து கிடக்கிறது என்பதே பொருத்தமாகும்.

யுத்தக் குற்றம் என்ற பெயரில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப் போவதாகவே அரச தரப்பின் அண்மைக்கால பிரசாரங்கள் அமைந்திருந்தன. அந்தப் பிரசாரங்கள் அனைத்தும் அப்பட்டமானவை. போலியானவை. அதேபோல் அரசாங்கத்தால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களும் போலியானவையாகும்.

ஜெனீவா பிரேரணை சர்வதேச நீதிமன்ற விசாரணை என்பதெல்லாம் வெறுமையானவையாகும். இந்த வெறுமையைப் பாவித்தே அரசாங்கம் மக்கள் மத்தியில் ஒரு வித பீதியை ஏற்படுத்தியிருக்கின்றது. மண்ணெண்ணெயா அல்லது நாடா என்ற வகையில் அமைந்திருந்த அரசாங்கத்தின் பிரசாரம் நாட்டின் பொருளாதார சீர்கேட்டினையும் மக்கள் மீதான சுமைகளையும் நெருக்கடிகளையும் திசை திருப்புவதற்கான ஒரு வெளிப்பாடாகவே அமைந்திருந்தது.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனைப் பெற்றுக் கொள்வதற்காகவே அரசாங்கம் இந்த மக்கள் ஏமாற்றுத் திட்டத்தை செயற்படுத்தியிருக்கின்றது.

ஜெனீவாவில் பிரேரணை நிறைவேறினாலும் நிறைவேறாவிட்டாலும் கூட அதனால் இலங்கையில் நடந்துவிடப் போவது ஒன்றுமில்லை என்பதே உண்மையாகும்.

உள்நாட்டுப் பிரச்சினைக்கு உண்மையான தீர்வு எட்டப்பட வேண்டுமானால் அதே நேரம் எமது நாட்டின் இறைமை பாதுகாக்கப்பட வேண்டுமானால் உள்நாட்டுக்குள்ளேயே தீர்வுக்கு வழி வகுக்கப்பட வேண்டும்.

அதனை விடுத்து அமெரிக்காவுடன் இணைந்து கொண்டு நடத்தப்படுகின்ற நாடகத்தால் எதுவும் நடந்து விடாது. அரசாங்கமானது ஜெனீவா பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இங்கு மக்களைத் தூண்டிவிட்டு ஆர்ப்பாட்டத்தை நடத்துகின்றது.

ஆனாலும் மறுபுறத்தில் அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவே அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. இதுவே அரசாங்கத்தின் இரட்டை வேடமாகும். இதனை மக்கள் நன்கு உணரவேண்டியுள்ளது.

எனவே, அமெரிக்காவுடன் இணைந்து நாடகமாடுகின்ற அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழ வேண்டிய காலமே உருவாகியுள்ளது. ஏனெனில் இன்றை ஏமாற்று அரசாங்கத்திடமிருந்து நாட்டிற்கு ஜனநாயகத்தையோ தேசிய பிரச்சினைக்குத் தீர்வினையோ எதிர்பார்க்க முடியாது.

இதேவேளை, இங்கு எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளித்த சோமவன்ச அமரசிங்க கூறுகையில் ஏதாவதொரு தீர்வு என்பது இங்கு ஏற்றுக் கொள்ளக்கூடியதாகும். மக்களால் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வே இங்கு அவசியமாகும் என தெரிவித்தார். (அ-2)

# இந்தியா இலங்கைக்கு ஆதரவு வழங்கும்

## சில தினங்களில் உண்மை வெளியாகும் என்கிறார் விதாரண

(கொழும்பு)

ஜெனீவா மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக பிரேரணை கொண்டு வரப்பட்டால் அதனை தோற்கடிக்க இந்தியா இலங்கைக்கு ஆதரவு வழங்கும் என்பதனை எதிர்வரும் அமர்வுகளின்போது இந்தியா பகிரங்கமாக அறிவிக்கும் என்று அமைச்சரும் சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் முன்னாள் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

நாட்டின் வெளிவிவகார கொள்கையின் அடிப்படையிலேயே இலங்கை விடயத்தில் இந்தியா தீர்மானம் எடுக்கும் என்றும் இந்த விடயத்தில் வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவுடன் பிரதமர் மன்மோகன் சிங் கலந்துரையாடவுள்ளார் என்றும் தகவல்கள் வெளிவருகின்றமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டார்.

அமைச்சர் இவ்விடயம் குறித்து மேலும் குறிப்பிடுகையில், எந்தவொரு இக்கட்டான கட்டத்திலும் இலங்கைக்கு இந்தியா முழுமையான ஆதரவு அளிக்கும் என்ற நம்பிக்கை இலங்கைக்கு இருக்கின்றது. இந்தியா எம்முடன் நெருங்கிய உறவைக் கொண்டுள்ள நாடாகும்.

அந்த வகையில் ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக பிரேரணை கொண்டு வரப்படின் அதனை தோற்கடிக்க இந்தியா இலங்கைக்கு ஆதரவு வழங்கும் என்பது எமது பலமான நம்பிக்கையாகும்.

அத்துடன் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையின் அமர்வுகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் இந்தியா பேரவையில் உரையாற்றும் சந்தர்ப்பத்தில் இலங்கைக்கான ஆதரவு வெளிப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கின்றோம் என்றார். (அ-2)

# ஜீப் விபத்துக்குள்ளானதில் இரு பொலிஸார் காயம்

(கொழும்பு)

தங்காலை பொலிஸ் அத்தியட்சகர் பயணித்த ஜீப வண்டி விபத்துக்குள்ளானதில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் காயமடைந்துள்ளனர். தங்காலை வீரகெட்டிய மாக்கத்தின பெதிகம பகுதியில நேற்று முன்தினம் மாலை இந்த விபதது இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவிததனர்.

அவர்கள பயணித்த ஜீப் வண்டி வீதியை விட்டுவிலகி தூணொன்றில் மோதி விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் ஜீப் வண்டியில் பயணித்த பொலிஸ் அத்தியட்சகருக்கு எவ்வித காயங்களும் ஏற்படவில்லை.

விபத்தில் காயமடைந்த சார்ஜன் ஒருவர் மாத்தறை வைத்தியசாலையிலும் ஜீப் வண்டியின் சாரதி தங்காலை வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (அ-2)

# ஆயிரத்து 521 வாகன சாரதிகளுக்கு எதிரான வழக்கு தொடரப்பட்டுள்ளது

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

(கொழும்பு)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் வாகன விபத்துக்களின் எண்ணிக்கை 120 ஆக உயர்வடைந்துள்ளதுடன் போக்கு வரத்து விதிமுறைகளை மீறிய ஆயிரத்து 521 வாகன சாரதிகளுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்தார்.

இவ்வருடத்தில் மாத்திரம் 69 வாகன விபத்துக்கள் அதிவேக நெடுஞ்சாலையில் இடம்பெற்றுள்ளதுடன் ஒருவர் பலியாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதிவேக நெடுஞ்சாலையில் இடம்பெற்றுள்ள வாகன விபத்துக்கள் தொடர்பாக கருத்து தெரிவித்தபோதே ஊடக பேச்சாளர் இதனை தெரிவித்தார்.


இது தொடர்பாக மேலும் அவர் தெரிவிக்கையில், குறித்த நெடுஞ்சாலை கடந்த வருடம் நவம்பர் மாத இறுதியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்பட்டதுடன் திறந்து வைக்கப்பட்டு 24 மணித்தியாலத்துக்குள் முதலாவது விபத்து பதிவானது.

இந்த நெடுஞ்சாலையில் கடந்த வருடம் வாகன விபத்துக்கள் இடம்பெற்ற போதும் எவரும் பலியாகியிருக்கவில்லை.

வாகனங்களுக்கு மாத்திரமே சேதங்கள் ஏற்பட்டதுடன் சாரதிகள் மற்றும் வாகனத்தில் பயணித்தவர்களுக்கு சிறு சிறு காயங்கள் ஏற்பட்டன. முதலாவது மரணச் சம்பவம் இவ்வருடம் ஆரம்பத்திலேயே இடம்பெற்றது.

இவ்வருடத்தில் மாத்திரம் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் போக்குவரத்து விதிமுறைகளை மீறி செயற்பட்ட ஆயிரத்து 50 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அத்தோடு இவ்வருடத்தில் 69 வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-2)





49 ஆவது தேசிய சிரேஷ்ட மட்ட கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகளை வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி கௌரவிப்பதனைப் படங்களில் காணலாம்.

(படங்கள்:- என்.குமார்)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 01



ஜப்பானுக்கெதிராக அமெரிக்காயுத்தத்தை தொடங்குவதாக ரூஸ்வெல்ட் தனது அறிக்கையில் கையொப்பமிடுகிறார்

வெகுஜனங்களின் சக்திமிக்க இயக்கமும் பிரிட்டிஷ் தீவுகளின் உள்ளும், மேற்கு கோளகர்த்தத்திலும் பாசிச துருப்புகள் நுழையும் அபாயமும் சோவியத் யூனியனுடன் இராணுவக்கூட்டை ஏற்படுத்திக் கொள்ளும் ஓர் அவசியத்தின் முன், மேலைய வல்லரசுகளின் அரசாங்கங்களை வைத்தன. 1941 ஆம் ஆண்டு ஜூன் 22 ஆம்திகதி பிரிட்டிஷ் பிரதமர் வி.சர்ச்சிலும் 1941 ஜூன் 24 அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்டும் பாசிச ஜேர்மனிக்கு எதிரான யுத்தத்தில் சோவியத் யூனியனை ஆதரிப்பதாக தம் அரசாங்கங்களின் சார்பில் அறிக்கை விடுத்தனர். இவை அனைத்தும் உலகின் மிகப்பெரும் அரசுகளாகிய சோவியத் யூனியன், அமெரிக்க ஐக்கியநாடு, பிரிட்டன் ஆகிய நாடுகள் பாசிச எதிர்ப்புக் கூட்டணியில் ஒன்று சேருவதற்கான புறவயரீதியான சூழ்நிலைகளைத் தோற்றுவித்தன. இவ்வாறாக ஹிட்லர் எதிர்ப்புக் கூட்டணி தோற்றுவிக்கப்பட்டதானது, ஒரு புறவயரீதியான நிகழ்ச்சியாக இருந்தது.

ஹிட்லர் எதிர்ப்புக் கூட்டணி இராஜதந்திர ரீதியாகவும் சட்டரீதியாகவும் முறைப்படுத்துவது ஒரு சில கட்டங்களில் நிறைவேற்றப்பட்டு, 1942-ஆம் ஆண்டின் முதல் பகுதியில் நிறைவுபெற்றது. சோவியத்யூனியன், அமெரிக்க ஐக்கியநாடு மற்றும் பிரிட்டனின் அரசாங்கங்களால் வெளியிடப்பட்ட பரஸ்பர ஆதரவு குறித்த அறிக்கைகள் இதற்கான ஆரம்பமாக அமைந்தன.

மாஸ்கோ மகாநாட்டிற்கு வின்ஸென்ற்சர்ச்சில் வருகைதந்தபோது -ஸ்ராலினுடன்



ஜேர்மனுக்கு எதிரான கூட்டு நடவடிக்கைகளைப்பற்றி சோவியத் யூனியனுக்கும் கிரேட்பிரிட்டனுக்கும் இடையே 1941 ஜூலை 12 - இல் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இதன்படி பரஸ்பரம் உதவி செய்துகொள்வது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது, எல்லா நேச நாடுகளின் ஒப்புதலின்றி ஜேர்மனியுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதில்லை, அதனோடு சமசரசமோ, சமாதானமோ செய்துகொள்வதில்லை என உறுதி மொழி தரப்பட்டது. இதுதான் ஹிட்லர் எதிர்ப்புக் கூட்டணியின் தோற்றத்தின் தொடக்கத்திற்குப் பாதையமைத்த முதல் அதிகாரப்பூர்வமான ஆவணமாக அமைந்தது. 1941 செப்ரம்பரில் லண்டனில் சோவியத் யூனியன், பெல்ஜியம், செக்கோஸ்லோவாக்கியா, கிரீஸ், போலந்து, தாய்லாந்து, நோர்வே, யுக்கோஸ்லாவியா, லாக்சம்பர்க், சுதந்திர பிரான்ஸ் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட மாநாடு நடைபெற்றது. 1941-ஆம் ஆண்டு ஒகஷ்ட் 14 -ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்டாலும் பிரிட்டிஷ் பிரதமர் வி.சர்ச்சிலாலும் கையெப்பமிடப்பட்ட அட்லாண்டிக் சாசனத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை (நாஜி



அட்லாண்டிக் மகாநாடு-அமெரிக்க ஜனாதிபதியும் பிரித்தானியப் பிரதம மந்திரியும் ஏனைய அதிகாரிகளும்

கொடுங் கோன்மையை ஒழிப்பது, ஆக்கிரமிப்பாளனை ஆயுதம் களைந்து மக்களை ஆயுதச் சுமையிலிருந்து விடுவிப்பது, பாசிசத்தை முறியடித்த பின் எல்லா நாடுகளுக்கும் அமைதியையும் பாதுகாப்பையும் அளிப்பது இத்தியாதி) ஒத்துக்கொண்ட சோவியத் அரசாங்கம் தனது அறிக்கையில், ஐரோப் பிய மக்களை இரத்தக் களரியான பாசிச ஆட்சிக் கும்பலின் கொடுமையிலிருந்து விரை வாகவும் இறுதியாகவும் விடுவிக்கும் பொருட்டு சுதந்திரத்தை விரும்பும் மக்களின் பொருளாதார மற்றும் இராணுவ மூல ஊற்றுக்களை ஒரு முனைப்படுத்தி சரியானபடி இவற்றை விநியோகிக்க வேண்டியதன் இன்றியமையா அவசியத்தை வலியுறுத்தியது. சோவியத் பிரதிநிதி, ஹிட்லர் எதிர்ப்புக் கூட்டணியின் இலட்சியங்கள் மற்றும் கடமைகளைப் பற்றிய சோவியத் அரசாங்கத்தின் பிரகடனத்தை மகாநாட்டில் சமர்பித்தார். இதில் பாசிசக் கூட்டின் ஆக்கிரமிப்பு நோக்கங்கள் அம்பலப் படுத்தப்பட்டிருந்ததுடன், பாசிச ஜேர்மனியையும் இதன் கூட்டாளிகளையும் விரைவாக்வும் உறுதியாகவும் முறியடிப்பதற்காக எல்லாச் சக்திகளையும் சாதனங்களையும் ஒன்று திரட்டுமாறு ஹிட்லர் எதிர்ப்புக் கூட்டணியின் நாடுகளுக்கு அறை கூவல் விடப்பட்டிருந்தது. மேலும் அரசு சுதந்திரத்திற்கும் தன்னாட்டின் பிரதேச அரசுரிமைக்கும் ஒவ்வொரு மக்களினத்திற்கும் உள்ள உரிமையையும் தன்விருப்பப்படி அரசு அமைப்பை நிலைநாட்டிக் கொள்ளும் உரிமையையும் சோவியத் யூனியன் ஆதரிப்பதாக பிரபகடனத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டிருந்தது. செப்ரம்பர் 29 முதல் அக்டோபர் 1 வரை சோவியத் யூனியன், அமெரிக்க ஐக்கிய நாடு, பிரிட்டிஷ் ஆகிய 3வல்லரசுகளின் பிரதி நிதிகள் கலந்துகொண்ட மாஸ்கோ மகாநாடு நடந்தது. இதில் பரஸ்பர இராணுவப் பொருளாதார உதவியைப்பற்றி தீர்மானிக்கப் பட்டது, சோவியத்யூனியனுக்கு அமெரிக்காவும் பிரிட்டனும் அளிக்கும் இராணுவ சப்ளையைப் பற்றிய உடன்பாடு கையெழுத்தானது. "இந்த முடிவானது, எங்கள் நாட்டில் சாந்தப்படுத்துவதற்கான எல்லா முயற்சிகளுக்கும் சர்வாதிகாரிகளுடன் இணக்கமாகப் போகுமாறு அழைக்கும் எல்லா அறை கூவல்களுக்கும் முடிவு கட்டும்" என்று ஜனாதிபதி ரூஸ்வெல்ட் கூறினார். இதன்பின் ஜேர்மனியிலும் இத்தாலியிலும் ரூஸ்வெல்ட் "யுத்தத்தைத் தூண்டிவிடுவதாக" பிரச்சாரம் செய்யப்பட்டது. ஆனால், சோவியத் யூனியனிலும் மிகப்பெரும்பான்மையான நாடுகளிலும் அமெரிக்க அரசாங்கத்தின் இத்தகைய முடிவு திருப்தியோடு வரவேற்கப்பட்டது.

சோவியத் யூனியனுக்கு உதவி புரியக் கோரும் இயக்கங்கள் மாஸ்கோ அருகே நடந்த சமரின்போது குறிப்பாக வலுத்தன, "இந்த மாபெரும் சமரில் மனிதகுலத்தின் எதிர்காலமே முன்வைக்கப்பட்டுள்ளது... ஒரு தரப்பில் ஒளியும் முன்னேற்றமும் மறுதரப்பில் இருள், பிற்போக்கு,




ஜப்பானுக்கெதிரான அமெரிக்காவின் சுவரொட்டி

அடிமைத்தனம், மரணம். தனது சோஷலிச விடுதலையைக் காத்து நிற்கும் ருஷ்யா, அதேநேரத்தில நமது விடுதலைக்காகவும் போராடுகிறது. மாஸ்கோவைப் பாதுகாப்பதன் மூலம் அது லண்டனைப் பாதுகாக்கிறது" என்று கேண்டர்பெர்ரி மாதா கோயிலின் மதகுரு ஜான்ஸன் கூறினார்.

தன்னிடம் உள்ளதும் அமெரிக்க ஐக்கிய நாட்டுக்குத் தேவையானதுமான பண்டங்களையும் மூலப் பொருட்களையும் அமெரிக்காவிற்கு அளிக்க, தான் தயாரென சோவியத் யூனியன் அறிவித்தது. ஆனால், அமெரிக்க மற்றும் கிரேட்பிரிட்டனின் தரப்பிலிருந்து அளிக்கப்பட்ட பொருளாதார உதவியின் அளவு, பாசிச ஜேர்மனிக்கு எதிரான யுத்தத்தில் சோவியத்யூனியன் ஆற்றிய பெரும்பங்கிற்கு ஏற்றதாக இல்லை. 1941 அக்டோரில்-நவம்பரில் அமெரிக்கா லேண்ட் லீஸ் சட்டத்தின் அடிப்படையில் சோவியத் யூனியனுக்கு 5 இலட்சத்து 45 ஆயிரம் டொலர் மதிப்புள்ள ஆயுதங்களையும் பொருட்களையும் அனுப்பியது.

## 'ஜேர்மனி, ஜப்பான் ஆக்கிரமிப்பின் விஸ்தரிப்பு 'மின்னல் வேக யுத்தம்' என்ற ஹிட்லர் போர்த்தந்திரத்தின் தோல்வி

மற்ற நாடுளுக்கு அமெரிக்கா அளித்த மொத்த உதவியில் (741 மில்லியன் டொலர்கள் மொத்த மதிப்பு) இது 0.1 சதவிகிதத்திற்கும் குறைவானதாக இருந்தது.

அச்சு நாடுகளுக்கு எதிராக, நேச நாடுகளின் சுவரொட்டி




(தொடரும்)


# குருவைத்தேடி...



**கேள்வி:** ஞானத்தின் பிரமாண்டம் என்று தங்களுடைய புத்த கத்தை படித்த பிறகு உங்களைப் பார்த்தால் கடவுளைப்போல தெரிகிறது./ உங்களுக்கும் முக மதுவுக்கும் யேசுபிரானுக்கும் புத்தருக்குமுள்ள வித்தியாசம் என்ன?

**சத்குரு:** அவர்கள் எல்லோரும் இறந்து விட்டார்கள். நான் இன்னும் உயிரோடு இருக்கிறேன். அது மிகப்பெரிய வித்தியாசம்.

தற்போது நீங்கள் ஏன் என்னைக் கடவுளைப் போல என்று சொல்கிறீர்கள்? உங்கள் மனத்தில், எங்கோ மனிதன் என்பவன் மிகச்சிறியவன். கடவுள் தான் மிகப் பெரியவர் என்று



இருக்கிறது. இந்தப் புத் தகத்தின் முழு நோக்கமே மனிதன் என்பவன் மிகச்சிறிய விடயமல்ல என்பதை உங்களுக்குப் புரிய வைப்பதுதான். தற்போது நீங்கள் எப்படி கற்பனை செய்திருக் கிறீர்க ளோ, அதை விடவும் மிகப் பெரிய அம்சம் மனிதன். ஒரு மனிதனாக இருப்பது என்பது, ஒரு மிகப் பெரிய அம்சம். அது ஒரு சிறிய விடயமல்ல. தற்போது கடவுளின் பெயரால் மக்கள் அவர்களுடைய மனிதநேயத்தை வீசி எறிந்து விட்டார்கள். இந்த உலகில் நிகழ்ந்துள்ள மிகப் பெரிய துயரம் அதுதான். கடவுளின் தேடுதலில் மனிதநேயத்தை வீசி விட்டார்கள். மனிதனாக இருப்பது என்பது, சிறிய விடயம் அல்ல. இது மிகப் அற்புத மான, பிரமாண்டமான விடயம். மனிதத் தன்மையின் முழுத்திறனையும் தொடும் விதமாக நீங்கள் வளர்வீர்க ளேயானால், கடவுள் கூட உங்களைப் பார்த்து பொறாமைப்படுவார். உங்களுக்குத் தெரியுமா? இந்தக் கலாச்சாரத்தில் பல அற்புதமான கதைகள் உள்ளன.

கடவுள்கள் தங்களுக்குப் பிரச்சினை வரும்போது அதை எப்படித் தீர்ப்பது என்று கலந்தாலோசிப்பதற்காக, பூமியிலுள்ள துறவிகளைத் தேடி வருவார்கள். என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். அப்படிப் பட்ட கதைகள் எல்லாம் எதற்காக சொல்லப்பட்டது என்றால், கடவுள்கள் கூட உங்களைத் தேடி வருமளவிற்கு மனிதரின் திறன் உள்ளது என்பதை சுட்டிக்காட்டத் தான். ஆமாம். அத்தகைய ஆற்றல் மனிதனுக்குண்டு.

**கேள்வி:** சத்குரு, தங்களுடைய எதிர்காலத்திட்டம் என்ன? ஆன்மீகம், ஆரோக்கியம் மற்றும்சுற்றுச்சூழல் என்று பல தளங்களில் நீங்கள் செயற்பட்டு கொண்டிருக்கிறீர்கள்?

**சத்குரு:** அடிப்படையான பணி ஆன்மீகத்தை நேர்க்கித்தான். ஆன்மீகம் என்று சொல்லும்போது ஒன்றை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஆன்மீகம் என்றாலே, மக்கள் எப்போதும் கோவிலுக்கோ, மசூதிக்கோ அல்லது தேவாலயாத்திற்குச் செல்வதைத்தான் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அது மதம் சார்ந்தது. மதம் என்பதற்கும், ஆன்மீகம் என்பதற்கும் அடிப்படையான வித்தியாசம் உள்ளது. நீங்கள் ஒரு குறிப் பிட்ட மதத்திற்கு சொந்தக்காரரர் என்று சொல்லும்போது அதை நம்புபவராகத்தான் இருக்கிறீர்கள். ஆன்மீகப் பாதையில் நான் இருக்கிறேன் என்று நீங்கள் சொல்லும்போது நீங்கள் தேடுதல் உடையவ்ராக இருக்கிறீர்கள். ஏதோ ஒன்றை நம்புவதற்கும், ஏதோ ஒன்றைத் தேடுவதற்கும் அடிப்படையிலேயே பெரும் வித்தியாசம் இருக்கிறது.

ஒரு விஞ்ஞானி என்பவர், தேடுபவர். ஒரு ஆன்மீகவாதி எனபவரும் தேடுபவர். ஏறத்தாழ அவர்கள் இருவரும் ஒரே படகில்தான் போய்க் கொண்டிருக்கிறார்கள். ஒருவர் வெளிப்புற நிதர்சனங்களை தேடிக் கொண்டிருக்கிறார். இன்னொருவர் உள்நிலை நிதர்சனங்களை தேடிக் கொண்டிருக்கிறார். உள்நிலை நிதர்சனங்களை தேடுவதுதான், ஆன்மீக அறிவியல். வெளிப்புற நலவாழ்விற்கென ஒரு அறிவியலும், தொழில்நுட்பமும் இருப்பதைப் போல, உள்நிலை நலவாழ்விற்கும் ஒரு

**ஆன்மீகம் 15**

அறிவியலும், தொழில்நுட்பமும் உள்ளது. அதுதான் ஆன்மீக செயல் முறை. இது தன்னிலை சார்ந்ததாக இருப்பதால், பலவிதமாக இது திரிபடைந்துவிட்டது. அநேகமாக எல்லா மதங்களும் மனிதனின் உச்சபட்ச நிலையை அடைவதற்கான ஆன்மீக செயல்முறையாகத்தான் தொடங்கப்பட்டன. ஆன்றால், காலப் போக்கில் இந்தக்கருவிகள் மனித குலத்தையே அழித்திடும் சாத்தான்களாக உருவெடுத்துவிட்டன. அவை மனித குலத்தை அழிக்கிறதோ, இல்லையோ ஒரு விதத்தில் மனித குலத்தை பாகம் பாகமாக கூறு போட்டு விட்டன. துரதிர்ஷ்டவசமாக அதை நீங்கள் மீண்டும் ஒன்று சேர்ப்பது முடியாததாகிவிட்டது. இது முடியாதது இல்லை. ஆனால், குறுகிய காலத்தில் இவற்றை மீண்டும் ஒன்று சேர்ப்பது சாத்தியமில்லை என்பது போல தோன்று கிறது.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

## ஒரு கிலோவுக்கான பால்மாவில் 37ரூபாவரை நட்டமேற்படுகிறது

### விநியோக நிறுவனங்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

வர்த்தக சந்தையில் விற்பனையில் உள்ள பால்மாக்களின் எண்ணிக்கை தொடர்பாக ஆராயுமாறு கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தகத்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நுகர்வோர் அதிகாரசபைக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

பால்மாக்களின் விலைகளை எதிர்காலத்தில் அதிகரிக்குமாறு அவற்றை விநியோகிக்கும் நிறுவனங்கள் கோரிக்கை விடுத்து வருகின்றன.

அது தொடர்பாக கவனம் செலுத்துவதற்காகவே இவ்வாறு பால்மாக்களின் எண்ணிக்கையை ஆராயுமாறு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளதாக அமைச்சு செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தவருடம் இறுதியாக பால்மாக்கள் இறக்குமதி செய்யப்பட்ட காலம் தொடர்பாகவும் தகவல்களை ஆராயுமாறு அமைச்சர் நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

குறித்த தகவல்கள் திரட்டப்படும் வரை பால்மாக்களின் விலைகள் அதிகரிப்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது எனவும் இறக்குமதி செய்யப்பட்ட பால்மாக்களில் ஒரு கிலோகிராமுக்கு 37ரூபாவை தாம் நட்டமாக எதிர்நோக்குவதாக பால்மா விநியோக நிறுவனங்கள் அண்மையில் தெரிவித்திருந்தன.

அதனைத் தவிர்த்துக் கொள்வதற்கான விலையுயர்வு அவசியம் என அவர்கள் நுகர்வோர் அதிகார சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-7)

## பிரேரணையை தோற்கடிக்க விரைவில் ஒன்றிணையுங்கள்

### இலங்கைத் தூதுவர்

(கொழும்பு)

அமெரிக்காவின் தலைமையில் ஜெனீவா மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படும் இலங்கைக்கான பிரேரணையினை தோற்கடிப்பதற்காக ஒன்றிணையுமாறு அமெரிக்காவிற்கான இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்ரமசூரிய அமெரிக்காவில் உள்ள இலங்கையர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

அவ்வாறான ஒரு பிரேரணையின் மூலம் நாட்டில் ஏற்பட்டு வரும் ஐக்கியம் வலுவிழந்து விடும் என்பதனை அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

இதன் காரணமாக அமெரிக்காவில் உள்ள இலங்கையின் மைந்தர்கள் அந்த யோசனையை தோற்கடிப்பதற்கான அவசியம் குறித்து அமெரிக்க அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தப்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-2)

## ஜப்பான் சென்றார் மஹிந்த சமரசிங்க

(கொழும்பு)

ஜப்பானில் நடைபெறும் தேயிலை தொடர்பான மாநாடொன்றில் கலந்து கொள்வதற்காக அமைச்சர் மஹிந்த சமரசிங்க நேற்று முன்தினம் ஜப்பான் பயணித்துள்ளார்.

எதிர்வரும் 12 ஆம் திகதிவரை ஜப்பானில் தங்கியிருந்து இலங்கை திரும்பும் அமைச்சர் மீண்டும் எதிர்வரும் 14ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கலந்து கொள்வதற்காக ஜெனீவா பயணமாகியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி 27ஆம் திகதி ஜெனீவாவில் ஆரம்பமான ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கூட்டத் தொடரின் ஆரம்ப நிகழ்வுகளில் கலந்து கொண்ட அமைச்சர் மஹிந்த சமரசிங்க கடந்தவாரம் நாடு திரும்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## புதிய பேருந்துகள் சேவையில்

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் போக்குவரத்திற்காக மேலும் 5 புதிய பேருந்துகள் இன்று முதல் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் தலைவர் ரொஷான் குணவர்த்தன பயணிகளின் கோரிக்கையினை ஆராய்ந்ததன் பின்னரே இந்த தீர்மானத்திற்கு வந்ததாக குறிப்பிட்டார்.

அதுபோல தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் தனியார் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளுக்கு மேலதிக வசதிகளை செய்து கொடுக்கப்படும் எனவும் சபையின் தலைவர் ரொஷான் குணவர்த்தன தெரிவித்தார். (அ-2)

## பிரதேச மட்டத்தில் வர்த்தக சம்மேளனங்கள் அமைக்க முடிவு

(கொழும்பு)

மஹிந்த சிந்தனை திட்டத்தின் கீழ் கிராமங்களை அபிவிருத்தி செய்து நகரங்களுடன் இணைக்கும் நோக்குடன் பிரதேச மட்டத்தில் வர்த்தக சம்மேளனங்களை அமைக்கும் பணிகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கிணங்க இதன் ஆரம்ப நிகழ்வு மாவட்டத்தின் ஏறாவூர் நகர் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் எஸ்.எல். எம். ஹனிபா தலைமையில் நடைபெறவுள்ளது.

சிறு, நடுத்தர கைத்தொழிலாளர்கள், வர்த்தகர்கள், மீனவர்களது வாழ்வாதாரத்தை முன்னேற்றும் வகையில் உள்ளீடுகள் பயிற்சிகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கி நிறுவன ரீதியில் ஊக்கப்படுத்துதல் இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

பிரதேச செயலாளர் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் பிரதேச வர்த்தக சம்மேளனத்தின் இணைத்தலைவர்களாக செயற்படவுள்ளனர். (அ-2)



# சிறுவர் அரங்கம்

31

# அம்புலி மாமா கதைகள்

## எசமான விசுவாசம்




ரங்கசாமி பெரிய நிலச் சுவான்தாராக இருந்தது மட்டுமல்லாமல் வியாபாரம் செய்துவந்தார். தன் வேலையாட்களை மிக அன்புடன் நடத்துவதில் ரங்கசாமிக்கு நிகர் யாருமில்லை என்று ஊரெங்கும் பேச்சாகஇருந்தது. அவரிடத்தில் வேலைசெய்ய ஊரிலுள்ள அனைவரும் போட்டியிட்டனர்.

பழனி அவரிடத்தில் வேலை பார்த்து வந்த விசுவாசமிக்க வேலைக்காரர்களில் தலைசிறந்தவன். பழனி அயலூரில் இருந்த தனது தம்பியுடன் சென்று அங்கேயே வசிக்கமுடிவு செய்து ரங்கசாமியிடம் அனுமதிகேட்டான். அவனுக்கு அனுமதியளித்த ரங்கசாமி அவனுடைய இடத்தில் முருகன் என்ற பெயர் கொண்ட தனது நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒரு ஆளை நியமிக்க எண்ணினார். ஆனால் அவருடைய மனைவி குறுக்கிட்டு இன்னொரு ஆளை நியமிக்கும் பொறுப்பை என் தம்பி வீரசாமியிடம் விட்டு விடுங்கள். நல்ல வேலைக்காரனாகப் பார்த்து அவன் கொண்டு வருவான் என்றாள். தனது தம்பியையும் உடனே அங்கு வரவழைத்தாள்.

அவளுடைய தம்பி வீரசாமி வீட்டிற்கு வந்ததும் ரங்கசாமியிடம் எனக்கு ஹரி என்ற ஆளைத்தெரியும். அவன் பழனியைவிட பல மடங்கு மேலானவன் என்று சவாலாகப் பேசினான்.

அதற்கு ரங்கசாமி தன் மைத்துனனை நோக்கி எந்தவொரு ஆளையும் பணியில் நியமனம் செய்யும் முன் நான் அவனைப் பலமுறைகளில் சோதிப்பது வழக்கம். நான் வைத்த பல சோதனைகளிலும் தேறிய பழனி மிக நல்ல ஆள். அவனை நான் மிகவும் நேசிக்கிறேன். அவனுக்குச் சமமாக குணங்கள் படைத்த தொழிலாளி கிடைப்பது அரிது என்றார். அதன்பின்பு ரங்கசாமி பழனியைப் பற்றி விளக்கிக் கூறலானார். நகரத்திலுள்ள ரங்கசாமியின் ஜவுளிக்கடையில் பழனி வேலைசெய்து வந்தான். அவனுடைய கடின உழைப்பினால் ஜவுளிக்கடை வியாபாரம் மிக நன்றாக நடந்து வந்தது. ரங்கசாமிக்கு நிறைய இலாபமும் கிடைத்தது. பழனியின் திறமையையும் உழைப்பையும் கண்ட ஏனைய வியாபாரிகள் அவனுக்கு நிறைய சம்பளம் தருவதாக ஆசைகாட்டி தங்களுடைய கடைகளுக்கு அழைத்தனர். ஆனால் பழனி அதற்கிணங்கவில்லை. அவனைச் சோதிப்பத ற்கு ரங்கசாமி தன் நண்பர் பாபுவை ஒருநாள் அவனிடம் அனுப்பினார். பழனியைச் சந்தித்த பாபு நான் ஒரு ஜவுளிக்கடை புதிதாகத் திறக்க விரும்புகிறேன். ரங்கசாமி உனக்குத் தருவது ஆயிரம் ரூபாய் சம்பளம். நான் உனக்கு இரண்டாயிரம்



தருவேன். என்னிடம் வந்துவிடு என்று ஆசை காட்டினார். அதற்குப் பழனி அமைதியாக ஐயா இரண்டாயிரம் என்ன, மூவாயிரம் சம்பளம் தருவதாகக்கூறி பலர் என்னை அழைக்கின்றனர். ஆனால் நான் மறுத்துவிட்டேன் என்றான். அப்படியா! நான் உனக்கு நான்காயிரம் தருகிறேன். உடனே என்னிடம் வந்துவிடு என்றார்.

உடனே பழனி ஐயா சம்பளத்தைவிட என் எசமானரை நான் பெரிதாக மதிக்கிறேன். பணம் பெரிதல்ல எனக்கு.என் எசமானர் காட்டும் அன்புதான் பெரிது. எனக்குப் பணம்தேவைப்பட்டால் என் எசமானர் தந்துதவுவார் என்றார். பாபு திரும்பிவந்து பழனியின் விசுவாசத்தைப்பற்றி ரங்கசாமியிடம் எடுத்துரைத்தார். அதிலிருந்து அவருக்கு பழனியின் மீது அன்பும் நம்பிக்கையும் பலமடங்கு அதிகரித்தது. மறுநாளே திடீரென்று பழனிக்கு ஏராளமான தொகை தேவைப்பட்டது. தன்னுடைய சகோதரி திருமணத்திற்கு ஏற்பாடு செய்திருந்த பழனியை பிள்ளைவீட்டார் உடனடியாக ஆயிரம் ரூபாய் தரவேண்டி நச்சரித்தனர். பழனியிடம் பணமில்லாததால் அவன் தன் எசமானரிடம் பண உதவி கேட்டான். ரங்கசாமிக்கு மீண்டும் அவனை சோதிக்கத் தோன்றியது. உடனே அவர் பழனியிடம் உனக்கு உதவி செய்ய என்னிடம் பணம் இல்லை. வேறு ஒரு இரகசியமான விடயத்திற்காக ஆயிரம் ரூபாய் வைத்துள்ளேன். அதை உன்னிடம் தருகிறேன். ஆனால் அது உனக்கல்ல. அதைப்பத்திரமாக வைத்திருந்து ஒருமாதத்திற்குப் பின் திருப்பித்தருவாய் என்று கூறி ஆயிரம்ரூபாய் தந்தார். அதை எடுத்துக்கொண்டு பழனி வீடு திரும்புகையில் ரங்கசாமி ஏற்கனவே ஏற்பாடு செய்திருந்தபடி நண்பர் அவருடைய பாபு வழியில் பழனியைச் சந்தித்தார். பழனி உனக்குப் பணம்தேவை என்று அறிவேன். ரங்கசாமி உனக்கு உதவி செய்யவில்லை என்பதையும் நானறிவேன். என்னிடம் வேலை செய்யவந்தால் உனக்கு உடனே ஆயிரம் ரூபாயும் நீ கேட்கும் சம்பளமும் நான் உனக்குத் தருவேன் என்றார். அப்போதும் பழனி ஐயா! எனக்கு மிகவும் பிரியமான எசமானரைவிட்டு நான் வரமாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தான். மேற்கூறிய சம்பவங்களை ரங்கசாமி தனது மைத்துனருக்கு விளக்க அப்போதும் அவன் பழனி நம்பத் தயாராகவில்லை. உடனே ரங்கசாமி நீ சிபாரிசு செய்யும் ஹரி நல்லவன் என்பது உனக்குத் தெரியும். அவனைப் பற்றி விசாரித்தாயா என்று கேட்டார். ஆஹா அவன் மிகவும் நல்லவன். பொதுவாக பெண்கள் தங்கள் கணவர்மார்களைப் பற்றி ஏதாவது புகார் கூறிக் கொண்டேயிருப்பார்கள். என் மனைவிகூட இதற்கு விதிவிலக்கல்ல. ஆனால் ஹரியின் மனைவிதான் செல்லும் இடமெல்லாம் தன் கணவனைப் பற்றி புகழ்ந்து கொண்டேயிருக்கிறாள். அதிலிருந்தே ஹரி நல்லவன் என்று நாம் தெரிந்து கொள்ளலாம் என்றான்.

ரங்கசாமிக்கு தன் மைத்துனனுடைய பதில் சரியாகப்படவில்லை. அவன் பழனியை அதுபற்றிக் கலந்தாலோசித்தார். பழனி ஐயா! நாம் இருவரும் ஹரியின் வீட்டிற்கு அவன் இல்லாத சமயம் சென்று அவன் மனைவியிடம் பேச்சுக் கொடுத்து உண்மையை அறிவோம் என்றான்.

அதன்படியே இருவரும் ஹரியின் வீட்டிற்குச் சென்றனர். ஹரியின் மனைவியிடம் பழனி நான் ரங்கசாமி ஐயாவின் ஜவுளிக்கடையில் பல ஆண்டுகளாக வேலை செய்து வருகிறேன். தற்போது நான் அந்த வேலைய்யை விட்டுவிட்டு அயலூர் செல்லப்போகிறேன். என்னிடத்தில் உங்கள் தூரத்துச் சொந்தக்காரரான முருகனை நியமிக்கலாம் என்று கருதுகிறார். முருகனைப் பற்றி நீங்கள் நன்கு அறிவீர்களேயானால் அவனைப் பற்றிக் கூறுங்கள் என்று கேட்டான்.

உடனே ஹரியின் மனைவி ஐயோ அந்த முருகனையா நீங்கள் வேலைக்கு அமர்த்தப் போகிறீர்கள்? அவன் ஒருபெரிய குடிகாரன், போக்கிரி, திருடன் என்றாள்.

உங்களுடைய யோசனைக்கு மிகவும் நன்றி என்று கூறி பழனி தன் எசமானரையும் அழைத்துக் கொண்டு திரும்பிவிட்டான். பார்த்தீர்களா? முருகனைப் பற்றி நமக்கு நன்றாகத் தெரிந்திருந்தால் அவள் கூறுவது பொய்யென்று தெரிகிறது. அவளுடைய கணவன் தான் குடிகாரனாகவும் போக்கிரியாகவும் இருப்பான் என்று நினைக்கிறேன் என்றான் பழனி.

அது எப்படிக்கூறுகிறாய் என்று ரங்கசாமி கேட்க பாண்டவர்களில் மூத்தவரான யுதிஷ்டிரரை நல்லவர்கள் யார் என்று கேட்டபோது அவர் எல்லோருமே நல்லவர்கள் என்றார். அதேகேள்வியை துரியோதனனிடம் கேட்டபோது எல்லோருமே கெட்டவர்கள் என்றான். அதுபோலத்தான் இருக்கிறது ஹரியின் மனைவி முருகனைப் பற்றிக்கூறுவது என்றான் பழனி. அவன் பேச்சைக் கேட்டு மகிழ்ந்த ரங்கசாமி அது இருக்கட்டும். பழனி நீ பெரிய அறிவாளியாக இருந்தும் தனியாக ஏன் வியாபாரம் செய்ய



முயற்சிக்கவில்லை என்று கேட்டார். அதற்குப் பழனி ஐயா உலகில் அறிவாளிகள் பலர் உள்ளனர். சிலர் வியாபாரம் செய்வதில் அறிவாளிகளாக திகழ்கின்றனர். என்னைப் போல் சில நல்ல எச்மானரைத் தேடி அவரிடம் வேலை செய்வதில் அறிவாளிகளாக விளங்குகின்றனர் என்றான். பழனியின் விவேகத்தை ரங்கசாமி பாராட்டினார். அதன்பின்பு ஒரு வாரத்திற்குள் முருகனையே வேலையாளாக நியமித்தார்.

# சாட்சிகளை பாதுகாக்கும் சட்டமூலம்

# விரைவில் சட்டமாக்கப்படவுள்ளது

## அரசாங்கம் உறுதியளிப்பு

(கொழும்பு)

பொறுப்புக்கூறல் தொடர்பாக அமெரிக்கா உட்பட உலக சக்திகள் பலவற்றின் அழுத்தங்களுக்கு மத்தியில் சாட்சிகளை பாதுகாப்பதற்கான சட்டமூலம் விரைவில் சட்டமாக்கப்படும் என சர்வதேச சமூகத்திற்கு இலங்கை அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 19 ஆவது கூட்டத் தொடர் நடைபெறும் நிலையில் அங்குள்ள பல்வேறு தூதரகங்கள், சர்வதேச மன்னிப்புச் சபை உட்பட சர்வதேச அமைப்புக்கள் , உலக தமிழர் பேரவை, மனித உரிமைகளுக்கான தமிழர் மத்திய நிலையம் போன்ற தமிழீழ விடுதலைப் புலிகள் ஆதரவு அமைப்புடன் இலங்கை அரசாங்கத்தின் தூதுக்குழுவினர் கூட்டமொன்றை நடத்தினர்.

அக்கூட்டத்தின்போது சர்வதேச மன்னிப்புச்சபை பல கேள்விகளை எழுப்பியது.. அக்கேள்விகளுக்கு நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் பதிலளிக்கையில்,

சாட்சிகளை பாதுகாக்கும் சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் சட்டமாக்கப்படும் என்றார். வீடியோ மூலம் அளிக்கப்படும் சாட்சியங்களின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதை இச்சட்டமூலம் எதிர்பார்கின்றது.

வீடியோ மாநாட்டு முறை மூலம் சாட்சியமளிக்கப்படும் போது அத்தகைய தகவல்களின் நம்பகத்தன்மை குறித்து கரிசனைகள் எழ முடியும். வேறொரு இடத்திலிருந்து சாட்சியமளிக்கப்படும் போது பின்னணியிலுள்ள எவராலும் வற்புறுத்தலுக்குள்ளாக்கப்பட சாத்தியமுள்ளது.

· இச்சட்டமூலம் 2008 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

எனினும் பின்னர் விவாதமொன்றில் இது குறித்து மேலும் கலந்துரையாட தீர்மானிக்கப்பட்டது.தற்போது சட்டவரைஞர் திணைக்களம் இச்சட்டமூலத்தை வரைவதற்கான இறுதிக்கட்ட பணிகளில் ஈடுபட்டுள்ளது. (அ-2)

## கஞ்சா வைத்திருந்த நபரொருவர் கைது

மொறட்டுவையின்பல இடங்களுக்கு போதைப் பொருட்கள் விநியோகித்த நபரொருவரை 31 கிலோ கிராம் கஞ்சாவை தன்வசம் வைத்திருந்த போது மொறட்டுவை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மொறட்டுவைப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை கொண்டு இந்நபரைக் கைது செய்ய முடிந்ததாக தலைமையகப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

லக்சபத்திய என்ற இடத்தில் விநியோகத்தில் ஈடுபட்டிருந்த வேளையில் இவர் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார். (அ-2)

## முஸ்லீம் காங்கிரசிற்கும் ஆளும்கட்சிக்கும் இடையே அபிவிருத்திட்டம் குறித்து பேச்சு

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பிற்கும் அதன் பங்காளி கட்சிகளில் ஒன்றான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கும் இடையிலான விசேட பேச்சுவார்த்தையொன்று இன்னும் ஒரு சில தினங்களில் இடம்பெறவுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் புறக்கணிக்கப்படுவதாக நேற்று முன்தினம் தியத்தலாவ பாதுகாப்பு கல்லூரியில் இடம்பெற்ற அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான செயலமர்வின் போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இதனையடுத்தே ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பிற்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசிற்கும் இடையில் பேச்சு நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் சிரேஷ்ட உறுப்பினரொருவர் தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தலைமையில் கடந்த வாரம் நடைபெற்ற அம்பாறை மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொது செயலாளர் எம்.ரி.ஹசன் அலியின் அபிவிருத்தி திட்டங்கள் அமைச்சர் பசில் ராஜபக்ச நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் குறித்த கூட்டத்திற்கு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த நான்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

இந்நிலையிலேயே இந்த பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## ஜெயலலிதாவின் கூற்றுக்கு இஸ்லாமிய ஒருமைப்பாட்டு முன்னணி கண்டனம்

அமெரிக்க அரசாங்கம் இலங்கைக்கு எதிராக ஜெனீவா மனித உரிமைகள் பேரவை கூட்டத் தொடருக்கு கொண்டு வரவிருந்த கண்டனப் பிரேரணைக்கு இந்திய அரசாங்கம் தனது ஆதரவை அளிக்க வேண்டும் என்று தமிழ்நாட்டின் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ஜெயராம் தெரிவித்துள்ள கருத்தை இஸ்லாமிய ஒருமைப்பாட்டின் முன்னணியின் தலைவர் ரியாஸ் சாலி கண்டித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக செயற்படுவதற்கு பதிலளித்த செல்வி ஜெயலலிதா உண்மையிலேயே விடுதலைப்புலிகளை தமிழ் நாட்டில் இருந்தும் செயல் இழக்க செய்தமைக்காக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும் என்றும் அதற்கு மாறாக இவ்விதம் செல்வி ஜெயலலிதா நடந்து கொள்வது கண்டனத்துக்குரிய செயல் என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு பயங்கரவாதத்தை பூண்டோடு அழித்துக் கட்டுவதற்கு இந்திய அரசாங்கம் செய்த உதவிகளை நாம் மறக்கவில்லை என்று சுட்டிக்காட்டிய அல்ஹாஸ் ரியாஸ் சாலி,

இந்தியாவும் தமிழ்நாட்டு அரசாங்கமும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் வெற்றியீட்டிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நன்றியுணர்வுடன் இருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

செல்வி ஜெயலலிதா கடந்த கால நிகழ்வுகளை இலகுவில் மறந்து விடுகின்றார். எவ்விதம் ராஜீவ்காந்தியை தமிழீழ விடுதலைப்புலிகள் கொலை செய்தது என்பதை நாம் அவருக்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றோம் என்று அவர் கூறினார். எங்கள் நாட்டுப் பிரச்சினைகளை நாங்கள் தீர்த்துக் கொள்வோம்.

தயவு செய்து வெளிநாடுகள் இதில் தலையிடக்கூடாது என்று தெரிவித்த ரியாஸ் சாலி, நாம் தாய்நாட்டுக்கு ஏற்புடைய ஒரு சமாதானத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவோம்.

அல்குர்ஆனில் கூறியிருப்பதை போன்று நாட்டு மக்கள் நாட்டுப் பற்றுடன் இருக்க வேண்டும் என்று கூறினார். இஸ்லாமிய ஒருமைப்பாட்டு முன்னணி கொழும்பு தெவட்டகஹ பள்ளிவாசலில் கடந்த சனிக்கிழமை ஜனாதிபதிக்கு பிரார்த்தனை ஒன்றையும் நடத்தியது. (அ-2)

## ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

### இறைவார்த்தையை வாழ்பவர்களே இறைவனின் மக்கள்




வார்த்தை உலகைப் படைத்தது, மனிதனை உண்டாக்கியது,, வாழ்வு கொடுத்தது, ஆனால் மனிதன் வார்த்ததையை மீறினான், கடவுளின் தண்டனையை பெற்றுக் கொண்டான்.எனினும் மனிதன் மேலுள்ள தன் அன்பை சற்றும் குறைக்காத இறைவன் அதே வார்த்தையால் அவனை மீட்பதாக உறுதிமொழி தந்தார்.இறைவன் மனிதனானார், மனிதன் வாழ்வுபெற தன்னைத் தந்தார். வார்த்தையால் அவன் வாழ்வை வழிப்படுத்தினார்.வார்த்தை வடிவில் இன்றும் இறைவன் மனிதனுடன் வாசம் செய்கிறார்.அன்று மட்டுமல்ல இன்றும் மனித இதயத்தில் இறைவனுடைய வார்த்தைகள் விதைக்கப்படுகின்றன.காலத்தின் அறிகுறிக்கேற்ப அது தொடர்ந்து வெளிப்பட்டுக்கொண்டே இருக்கிறது.இன்று இறைவன் பல வடிவங்களில் பல நபர்களின் மூலமாக இயற்கையினூடாக காலத்தின் அறிகுறிகள் ஊடாக எங்களுடன் பேசிக்கொண்டிருக்கிறார்.

அருட் சகோதரர்
றமேஸ் அ.ம.தி

இறைவன் தன்னை எமக்கு வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்.நாம் இறைவனுடைய வார்த்தைகளை உள்ளத்தில் தியானிக்கின்றோமா? மேலாக பின் நவீனத்துவ வாழ்க்கைமுறையும் நாகரிகத்தின் அதீத வளர்ச்சியும் விஞ்ஞானத்தின் விந்தையும் சினிமாவின் மோகமும் கலாசார பண்பாடுகளின் நவீன மாற்றங்களும் எம்மை திசைதிருப்பி எமது அகக் கண்களை இருட்டாக்கி வேறோர் திசையில் எம்மை நகர்த்திச் செல்வது கண்கூடு.இதனால் எம்மில் விதைக்கப்படும் வார்த்தை விதையிலேயே மடிகின்றன. சில முளைத்தும் கருகிப்போகின்றன.இன்னும் சில வளரும்போது நெரிக்கப்படுகின்றன. எனவே எமது வாழ்வின் உண்மைத் தன்மையை உணருவோம்.வார்த்தையின் ஒளியில் எங்களில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவோம்.வார்த்தைக்கு உயிரளிப்போம்.இறைமதிப்பீடுகளை வாழ்வாக்குவோம்.ஆண்டவரின் வாக்ககு நிறைவேறும் என்ற நம்பிக்கையடன் இறைவார்த்தையை வாழும்போதே நாம் இறைமகள் என்ற உரிமையோடு இறைவனை அணுகமுடியும்.

## நெல்லை விற்பதில் விவசாயிகள் சிரமம்

நெல் கொள்வனவின்.போது பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருப்பதன் காரணமாக விவசாயிகள் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகி வருவதாக பல்வேறு தரப்பினரும் குற்றம் சாட்டுகின்றனர்.

எனினும் தேவையான அளவு நெல்லை கொள்வனவு செய்ய தாம் தயாராக இருப்பதாக நெல் கொள்வனவு சபை தெரிவித்துள்ளது.

நெல் கொள்வனவில் காணப்படும் நிபந்தனைகள் குறித்து கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீ .ஹரிசன் இதனைத் தெரிவித்தார். (அ-2)

## தும்புத்தடியால் அடித்ததில் பெண்ணொருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

மற்றொரு பெண்ணினால் தும்புத்தடியால் அடிக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த பெண்ணொருவர் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் மரணமடைந்துள்ளதாக வைத்தியசாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு மரணமடைந்திருப்பவர் நெளுங்குளம். குடா நெளுங்குளம் பகுதியைச் சேர்ந்த என். அனுலாவதி (56 வயது) என்பவராவார்.

அயல் வீட்டார் ஒருவருடன் ஏற்பட்ட கொடுக்கல் வாங்கல் பிணக்கு முற்றி ஏற்பட்ட கைகலப்பின் போது தும்புத்தடியால் தலைப்பகுதியில் பலமாக அடித்ததால் படுகாயமடைந்த நிலையில் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

இப்பெண்ணின் மீது தாக்குதல் நடத்திய பெண்ணும் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்பதும் வைத்தியசாலை வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது. (அ-2)

## கத்தோலிக்க ஆயர்களிடையே இருவேறுபட்ட கருத்துக்கள்

ஜெனீவாவில் இலங்கைக்கெதிராக அமெரிக்கா கொண்டு வரவுள்ள தீர்மானத்தை கத்தோலிக்கத் திருச்சபை எதிர்ப்பதாக இலங்கை கத்தோலிக்கத் திருச்சபையின் தலைமைக் குருவான கர்தினால் மல்கம் ரஞ்சித் முன்னர் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

ஆனால், மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசப் தலைமையிலான வடபகுதியைச் சேர்ந்த 31 கத்தோலிக்க குருமார் போர்க்குற்றங்கள் குறித்து அனைத்துலக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு 31 கத்தோலிக்க குருமார்களும் இணைந்து ஒப்பமிட்ட மனுவொன்றையும் அனுப்பியுள்ளனர்.

இந்நிலையில் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக் கூறுதல் தொடர்பில் கத்தோலிக்க மத குருமார் களுக்கிடையே இருவேறுபட்ட கருத்துக்கள் நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## மட்டக்களப்பு கரடியனாற்றில் இளைஞனின் சடலம் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கரடியனாறு பகுதியில் மர்ம முறையில் உயிரிழந்த வாலிபர் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மரணமடைந்தவர் செங்கலடி பகுதியைச் சேர்ந்த பாலச்சந்திரன் ஜெயச்சந்திரன் (வயது 27) என அடையாளம் காணப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சனிக்கிழமை காலை வீட்டில் இருந்து சென்றவர் மீண்டும் வீடு திரும்பவில்லை என சடலமாக மீட்கப்பட்டவரின் உறவினர்கள் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு பதில் நீதிபதி எம்.ஐ.எம்.சியாம் சடலத்தை பார்வையிட்டு மரண விசாரணை மேற்கொண்ட பின்னர் பிரேத பரிசோதனைக்காக சடலம் செங்கலடி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இம்மரணம் தொடர்பாக கரடியனாறு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளார். (அ-2)

## மரக்கறி விலைகள் வீழ்ச்சி; விவசாயிகள் பெரும் பாதிப்பு

(கொழும்பு)

மரக்கறிகளின் விலை திடீரென வீழ்ச்சியடைந்துள்ளமையினால் விவசாயிகள் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர். நாட்டின் கீழைத்தேய மரக்கறி வகைகளுக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக ஒன்றிணைந்த விவசாய அமைப்புக்களின் தலைவர் ஆர்.பீ.ஹேரத் தெரிவித்துள்ளார்.

எனினும் மலையக பகுதிகளிலுள்ள மரக்கறி வகைகள் சாதாரண விலையில் விற்பனை செய்யப்படுவதாகவும் அவர் குறிப்பிடுகிறார். இவ்வாறு ஏற்பட்டுள்ள நிலையானது ஒவ்வொரு ஆண்டின் பெப்ரவரி மாதமும் ஏற்படும் நிலைமை என தம்புள்ள விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் முகாமையாளர் கிரிஸ்ட் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அறுவடையின் போது சந்தைக்கு அதிகளவான மரக்கறிகள் கிடைத்துள்ளமை மற்றும் விவசாயிகளின் திட்டமின்றி மரக்கறி வகைகள் வளர்கின்றமை இந்த நிலைமைக்கான காரணம் எனவும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

இதேவேளை, தம்புள்ள விசேட பொருளாதார மத்திய நிலையத்திற்கு மரக்கறி வகைகள் கொண்டு வரப்படும்போது உரிய முறையில் பொதி செய்யாமை மரக்கறி வகைகள் சிதைவடைவதற்கு காரணமாக அமைகின்றது என அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

எனினும் ஒன்றிணைந்த விவசாய அமைப்பின் தலைவர் ஆர்.பி.ஹேரத் இந்த குற்றச்சாட்டை நிராகரித்தார். (அ-2)



வண- தென்மேற்கு ஆறுகால் மட ஞானக் குழந்தை இல்ல அறிவொளி முன்பள்ளியின் புதிய கட்டடத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். மாநகரசபை பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் ச.லோகசிவம் மங்கல விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.




★ 1079-ஒமார் கயாம் ஈரான் நாட்காட்டியை அமைத்து முடித்தார்.

★ 1447-ஐந்தாம் நிக்கலாஸ் திருத்தந்தை ஆனார்.

★ 1479-கனாரி தீவுகளை போர்த்துக்கல் காஸ்டில் பேரரசுக்கு வழங்கியது.

★ 1521-பேர்டினண்ட் மகலன் குவாம் தீவை அடைந்தார்.

★ 1788-கைதிகளைக் குடியமர்த்தும் திட்டத்தில் முதற்படியாக முதலாவது தொகுதி கைதிகள் அடைங்கிய கப்பல் நோர்போக் தீவை அடைந்தது.

★ 1836-டெக்சாசில் அலாமோ நகரை மெச்சிக்கோ படைகள் தாக்கிக் கைப்பற்றின.

★ 1869-டிமித்ரி மெத்வதேவ் தனது முதலாவது ஆவர்த்தன அட்டவணையை சமர்ப்பித்தார்.

★ 1940-குளிர்காலப் போர்: பின்லாந்துக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையில் தற்காலிகப் போர் ஒய்வு ஒப்பந்தம் ஏற்பட்டது.

★ 1945-ருமேனியாவில் கம்யூனிச அரசு பதவிக்கு வந்தது.

★ 1946-வியட்நாம் போர்: ஹோ சி மின் பிரான்சுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி பிரான்ஸ் வியட்நாமை பிரெஞ்சு ஒன்றியம் மற்றும் இந்தோனேசியக் கூட்டமைப்பினுள் தன்னாட்சி அதிகாரம் கொண்ட பகுதியாக ஏற்றுக் கொண்டது.

★ 1953-ஸ்டாலினின் மறைவையடுத்து சோவியத்தின் பிரதமராகவும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை செயலாளராகவும் கியோர்கி மாலென்கோவ் பதவியேற்றார்.

★ 1957-ஐக்கிய இராச்சியக் குடியேற்ற நாடுகளான கோல்ட்கோஸ்ட் மற்றும் பிரித்தானிய டொகோலாந்து ஆகியன இணைந்து கானா குடியரசு என்ற பெயரில் விடுதலை பெற்றன.

★ 1964-காசியஸ் கிளே தனது பெயரை அதிகாரபூர்வமாக முகமது அலி என மாற்றிக் கொண்டார்.

★ 1967-திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டில் முதன்முறையாக ஆட்சியைக் கைப்பற்றியது.

★ 1975-ஈரானும் ஈராக்கும் தமது எல்லை தொடர்பாக உடன்பாட்டிற்கு வந்தன.

★ 1987-பிரித்தானியாவின் எம்எஸ் ஹெரால்ட் என்ற கப்பல் கவிழ்ந்ததில் 193 பேர் உயிரிழந்தனர்.

★ 2007-இந்தோனேசியாவின் சுமாத்ராவில் இடம்பெற்ற இரண்டு அடுத்தடுத்த நிலநடுக்கங்களில் 70 பேர் வரையில் உயிரிழந்தனர்.

### பிறப்புக்கள்

★ 1475-மைக்கலாஞ்சலோ புவோனரோட்டி, இத்தாலிய மறுமலர்ச்சிக் கால ஓவியர் (இ.1564)

★ 1508-ஹுமாயூன், இரண்டாவது முகலாயப் பேரரசர் (இ.1556)

★ 1869-சேர் ஜேம்ஸ் எமர்சன் டென்னெண்ட், எழுத்தாளர், பயணி இலங்கைக்கான பிரித்தானிய காலனித்துவ செயலாளர் (இ.1804)

★ 1928-காபிரியேல் மார்க்கெஸ், நோபல் பரிசு பெற்ற கொலம்பிய எழுத்தாளர்

★ 1948-ஸ்டீஃபன் ஷவார்ட்ஸ், அமெரிக்காவைச் சேர்ந்த பாடலாசிரியர், இசையமைப்பாளர்

### இறப்புக்கள்

★ 1888-லூயீசா ஆல்கொட், அமெரிக்க நாவலாசிரியை (பி.1832)

★ 1973-பெர்ல் பக், நோபல் பரிசு பெற்றவர் (பி.1892)

### சிறப்பு நாள்

★ கானா-சுதந்திர தினம் (1957)



★ 1937-விண்ணுக்குச் சென்ற முதற்பெண் விண்வெளி வீரர் வலன்டினா தெரெஷ்கோவா பிறந்த தினம்.

# அதிசய உலகம்...



## ஆகாரமாக சோப்பும் பஞ்சும் உண்ணும் அதிசய பெண்





இங்கிலாந்து நாட்டு தலைநகர் லண்டனில் வசிக்கும் பெண் கேரி டிரெபில்கூக் (வயது 21 ) நர்சாக பணியாற்றி வரும் இவருக்கு விசித்திரமான பழக்கம் ஒன்று உள்ளது. அதாவது சிற்றுண்டியாக அவர் சலவை சோப்பு மற்றும் பஞ்சு ஆகியவைகளை சாப்பிடுகிறார். இதுவரையில் அவர் 100 க்கும் மேற்பட்ட சோப்பு மற்றும் 4 ஆயிரம் பஞ்சு ஆகியவற்றை சாப்பிட்டு இருக்கிறார்.

இது பற்றி அவர் கூறுகையில், வீட்டிற்கு வெளியே செல்வதற்கு முன்பு சிறிய பிளாஸ்டிக் பையில் துண்டு துண்டாக வெட்டப்பட்ட பஞ்சு ,தக்காளி மற்றும்

சோஸ் ஆகியவைகளை எடுத்துச் செல்வேன். பசி எடுக்கும் போது அவற்றை கலந்து சாப்பிடுவேன்என்கிறார்.


## மின்னல் வேகத்தில் வரும்தோட்டாவை வாளால் வெட்டும் சாதனை மனிதன்



BB வகை துப்பாக்கிமூலம் 200 அடிகள் தூரத்திலிருந்து மணிக்கு 200 மைல் வேகத்தில் சுடப்படும் பருமனில் சிறிய தோட்டாவை மிக கூர்மையாக அவதானித்து தனது வாள் கொண்டு இரு கூறாக்கி சாதனை படைத்துள்ளார் இசாஓ மாச்சி என்ற அதிசய மனிதர்.

இவரது இந்த மின்னல் வேக சாதனையை 250 முறைகள் வீடியோ கமெரா மூலம் பதிவு செய்துள்ளனர். 250 முறை பதிவு செய்யப்படும். ஓரளவிற்குதான் தெளிவாக பதிவு செய்ய முடிந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நவீன சாமுராய் என அழைக்கப்படும் மாச்சி வயதான ஒருவரால் இவ்வாறு பயிற்றுவிக்கப்பட்டு தற்போது சாமுராய் பாடசாலை ஒன்றில் தலைமை ஆசிரியராக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 5,600mph சுடுதிறன் உள்ள அதிவிசேட மின் துப்பாக்கி



இந்தத் துப்பாக்கியானது அமெரிக்க கடற்படையின் போர்த்திறனை உலகுக்கு பறை சாற்றுவதாக அமைந்துள்ளது. இது ஒரு 5,600mph அளவுக்கு சுடு திறனுள்ள அதி விசேட மின் துப்பாக்கியாகும். இதன் விசேட அம்சம் யாதெனில் இதிலிருந்து புறப்படும் குண்டின் வேகம் ஒலியின் வேகத்தை விட 7 மடங்கு அதிகமாகும்.

இந்தத் துப்பாக்கியானது முதற்கட்டமாக அமெரிக்க கடற்படையின் போர்க்கப்பல் களில் பொருத்தப்படுகின்றது. இந்தத் துப்பாக்கியில் இருந்து 115 மைல்கள்வரை குறி பார்த்துச் சுட முடியும். அமெரிக்க கடற்படையின் பொறியியலாளர் குழுவினால் 150 மில்லியன் யூரோக்கள் செலவு செய்யப்பட்டு 7 வருடங்கள் ஆய்வு செய்யப்பட்டு உருவாக்கப்பட்டதே இந்த அதிவிசேட மின் துப்பாக்கி ஆகும்.

ஆனால் இந்தத் துப்பாக்கி ஆனது விஞ்ஞானிகளின் அதிநவீன கண்டுபிடிப்புக்களின் சிகரம் சென்று சொன்னால் மிகையாகாது.

## ட்ரம்ஸில் அசத்தும் பிஞ்சுப்பாலகன்




நிகழ்காலத்தில் சிறுவர்கள் எல்லாம் ஏனையவர்கள் வாயில் வைத்து வியக்கும் அளவிற்கு தமது திறமைகளை வெளிப்படுத் துகின்றனர்

மேலும் இதற்கிணங்க சிறுவயது பாலகன் ஒருவன் தனது உயரத்திற்கு சமமான ட்ரம்ஸ்டிக்கை வைத்துட்ரம் ஸில் தூள் கிளப்புகின்றான்.


அண்ணளவாக ஒரு வயது நிரம்பிய இச்சிறுவன் எந்த விதமான கூச்ச சுபாவமும் இன்றி தைரியமாக ட்ரம்ஸ் வாசிக்கும் காணொளியானது யூடியூப்பில் பதிவேற்றப்பட்டு பார்ப்பவர்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

## இருமலைகளுக்கிடையில் சாகசம் செய்யும் இளைஞன்



Dan Hunt அமெரிக்கரின் தன்னம்பிக்கையின் உச்சத்தைப் பாருங்கள். அப்படியே அசந்து போவீர்கள். 450 அடிகள் உயரமுள்ள இடத்தில் அதுவும் இரண்டு மலைகளுக்கு இடையில் கயிற்றின் மூலம் கடக்கும் இந்த நபரின் செயல் பார்ப்போரை திகைப்பில் ஆழ்த்தியுள்ளது. 33 வயதான இந்த நபர் 90 அடி நீளமாக உள்ள இந்த கயிற்றில் பிடித்துக் கடக்கும் சாகச முயற்சியை இவரது உடலில் கட்டியிருக்கும் கமராவே படம் பிடிக்கின்றது. உண்மையில் இவர் ஒரு தைரியசாலி தான். எங்கே நீங்களும் பாருங்களேன்.

## வியக்கவைக்கும் இராட்சத உயிரினம்



Attacus என்று அழைக்கப்படும் உயிரினம் உலகில் மிகப் பெரிய உயிரினமாகும். இவ் உயிரினமானது இந்தியாவின் இமாலயப் பிரதேசத்தில்கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.மேலும் பூச்சியினங்களில் மிகப் பெரியதாக காணப்படும். இந்த உயிரினத்தின் இறக்கை ஒன்று 25 சென்ரி மீற்றர்கள் நீளமானதாக உள்ளது.

வண்ணத்துப்பூச்சி போன்ற வடிவில் தோற்றமளிக்கும் இந்த இராட்சத உயிரின்மும் 2 வாரங்கள் மட்டுமே உயிர் வாழுமாம்.

# நீரிழிவு நோய்- அறிமுகம்

**கேள்வி 19:- க்ளுக்கோமீட்டரினால் ஒருவர் தனது இரத்தத்திலுள்ள சீனியின் அளவை அறிந்து கொள்ள முடியுமா?**

**பதில்:-** க்ளுக்கோமீட்டரை மிகவும் எளிதாகப் பயன்படுத்தலாம். க்ளுக்கோமீட்டரின் உதவியால் ஒருவர் தனது வீட்டிலிருந்தபடியே தனது இரத்தத்திலுள்ள் சீனியின் அளவை அறிந்துகொள்ளலாம். சிலர் ஆய்வு கூடத்திற்குச் சென்று இரத்தப் பரிசோதனையின் மூலம் சீனியின் அளவை அறிந்து கொள்கின்றனர். இந்த இரண்டிற்கும் இடையே பெரிய வித்தியாசம் எதுவுமில்லை. எப்படியோ ·பாதிக்கப்பட்டவர் சீனியின் அளவை அறிந்து கொண்டு அதைக் கட்டுப் படுத்துதல் நன்றாம்.

**கேள்வி 20:- நொய்மையான நீரிழிவுநோய்(Brittle diabetes) என்றால் என்ன?**

**பதில்:-** ஒரு சிலருக்கு இரத்தத்தில் சீனியின் அளவு அவ்வப்போது மாறிக் கொண்டே இருக்கும். இதனை நொய்மையான நீரிழிவு நோய் என்றழைக்கின்றனர். பதற்றம், பரபரப்பு, குறித்த நேரத்தில் மருந்து மாத்திரைகள் மற்றும் இன்சுலின் எடுத்துக்கொள்ளாதது, உணவுக் கட்டுப்பாட்டை மீறுவது போன்ற குறைகளே இந்நோய்க்கு முக்கிய காரணிகளாகும். நொய்மையான நீரிழிவு அ வகை நீரிழிவு நோயாளிகளிடமே (Type A diabetic patients) அதிகம் காணப்படுகின்றது.

**கேள்வி 21:- நீரிழிவு நோயாளிகள் அவசியம் செய்து கொள்ள வேண்டிய ஏனைய பரிசோதனைகள் யாவை?**

**பதில்:-** நீரிழிவு நோயாளிகள் பின்வரும் பரிசோதனைகளை அவ்வப்போது செய்து கொள்ள வேண்டும்.

- ✷ இரத்தம் மற்றும் சிறுநீர் பரிசோதனைகள்.
- ✷ இரத்தத்தில் இருக்கும் கொழுப்புச் சத்தை அறிந்து கொள்வதற்கான பரிசோதனை.
- ✷ ஈ.சி.ஜி. மற்றும் டி.எம்.டி.(E.C.G. and T.M.T ) பரிசோதனைகள்.
- ✷ எடை அளவு பதிவு செய்தல்.
- ✷ கண் பரிசோதனை.
- ✷ பாதங்கள் பரிசோதனை.
- ✷ இரத்த அழுத்த பரிசோதனை.

**கேள்வி 22:- சிறுநீரில் கீட்டோன் காணப்பட்டால் அது நிரிழிவு நோய்க்கான அறிகுறியா?**

**பதில்:-** பொதுவாக எல்லோருடைய சிறுநீரிலும் கீட்டோன் காணப்படும். அதனால் ஒருவரது சிறுநீரில் கீட்டோன் காணப்பட்டால் அவர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறார் என்று பொருள் அல்ல. பெண்களின் சிறுநீரிலும் குழந்தைகள் அதிகாலையில் கழிக்கும் சிறுநீரிலும் அஜீரணக் கோளாறு உள்ளவர்களின் சிறுநீரிலும் பொதுவாக கீட்டோன் காணப்படும்.

**கேள்வி 23:- தங்கள் சிறுநீரில் கீட்டோன் இருக்கிறதா என்பதை நீரிழிவு நோயாளிகள் அறிந்து கொள்வது அவசியமா?**

**பதில் :-** சிலருக்கு அடிக்கடி வாந்தி , வயிற்று வலி, சோர்வு, சோம்பேறித்தனம் போன்றவை வரும். நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகள் அடிக்கடி ஜலதோசம் மற்றும் சுரத்தினால் பாதிக்கப் படுவர். அவர்களுக்கு வயிற்று வலி, வாந்தி பேதி, குமட்டல் போன்றவையும் உண்டாகும்.




**05** இப்படிப்பட்டவர்கள் தங்கள் சிறுநீரில் கீட்டோன் இருப்பதை அறிந்து கொள்வது அவசியமாகும். நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் கர்ப்பிணிப் பெண்கள் இப்பரிசோதனையைக் கட்டாயம் செய்து கொள்ள வேண்டும்.

**கேள்வி 24 :- ஒவ்வொருவரும் குளுக்கோஸ் டாலரன்ஸ் டெஸ்ட் (GTT) செய்து கொள்வது அவசியமா?**

**பதில்:-** ஒருவர் தனக்கு நீரிழிவு நோய் இருப்பதாகச் சந்தேகப்பட்டால் அவர் இப் பரிசோதனையைச் செய்துகொள்வது அவசியமாகும்.

டாக்டர்.A.K.ஜிங்கான்

தனது உடல் நீரிழிவு நோய்க்கு இடம் கொடுக்குமா என்பதை இப்பரிசோதனையின் மூலம் அறிந்து கொள்ளலாம். இப் பரிசோதனையில் முதலில் வெறும் வயிற்றில் ஒருவரிடமிருந்து இரத்தம் எடுக்கப்பட்டு அதில் சீனியின் அளவு கண்டறியப்படும். பின்னர் அரை மணிநேரம், ஒரு மணி நேரம், இரண்டுமணி நேரம் என்னும் இடைவெளிகளில் மூன்று முறை சீனியின் அளவு கண்டறியப்படும். இப்பரிசோதனையை செய்து கொள்பவர் அச்சமயம் புகைபிடிக்கக்கூடாது. (முற்றும்)

# விபத்து நேர சிகிச்சை

விபத்துக்குப் பொதுவான காரணம் அவசரம்தான். வாகன ஓட்டுநர்கள் போக்குவரத்து விதிகளை மீறி வாகனங்களில் வேகமாகப் போவது ஆளை அடித்தாலும் ஆயிரம் ரூபாய் தானே அபராதம் என்கிற அலட்சியமான போக்கு, வண்டி வருவதற்குள் வீதியைக் கடந்து விடலாமே என்ற மக்களின் அவசர எண்ணம், கவனக்குறைவு இவைகளால் தான் பெரும்பாலான விபத்துகள் நிகழ்கின்றன. பல வெளிநாடுகளில் ஐந்து முறைக்கு மேல் போக்குவரத்து விதிகளை மீறினால் சாரதி அனுமதிப்பத்திரத்தை இரத்து செய்து விடுகிறார்கள். இங்கு அதைப்போல ஓரளவுக்கு இருந்தாலும் சட்டத்திற்கான மரியாதையையும் மனித உயிருக்கான மரியாதையையும் கொடுத்து பொதுமக்களுக்கு எச்சரிக்கையுடனும் நிதானமாகவும் நடந்து கொண்டால் விபத்துக்களை தவிர்க்கலாம்.

**விபத்தில் சிக்கியவருக்கு முதல் உதவி என்ன?**

விபத்துக்குள்ளானவர்களைக் காப்பாற்ற முயன்றால் தேவையில்லாமல் வழக்கு விசாரணை என்று அலைய வேண்டிவரும் என்று நினைக்கிற பொதுமக்களின் தவறான மனப் போக்குதான் இதற்குக் காரணம். இதனால் காப்பாற்றப்படக்கூடிய நோயாளிகள் கூட, காப்பாற்றப்படாமல் இறந்து போகிறார்கள்.

**முதலுதவிகள் என்ன?**

நோயாளி நன்றாக மூச்சு விடுகிறாரா? என்பதை சோதிக்க வேண்டும். ஏனென்றால், சிலசமயம் அதிர்ச்சியினால் மூச்சடைப்பு ஏற்படலாம் அல்லது மயக்கமான நிலையில் நாக்கு உள் மடிந்து உமிழ்நீர் மற்றும் சுரப்பிகளில் திரவங்கள் ஆகியவை மூச்சுக் குழாயில் அடைப்பை ஏற்படுத்தி விடும்.

அடிபட்டவரின் வாயைத் திறந்து கொண்டு நமது வாயால் காற்றை ஊதினால் மூச்சு சீராக வரத் தொடங்கும் (கைக்குட்டை போன்ற மெல்லிய துணியை இரண்டு வாய்களுக்கும் இடையே வைத்துக் கொள்ளலாம்).

அடிபட்டு மயக்கமான நிலையில் உள்ளவருக்கு சோடாவோ, தண்ணீரோ கொடுக்கக் கூடாது. சில நேரங்களில் உணவுக்குழாய்க்கு அவை செல்வதற்குப் பதில் மூச்சுக் குழாய்க்குச் சென்று உயிருக்கு ஆபத்தை உண்டாக்கும். அப்படிக் கொடுப்பதால் மயக்க மருந்து கொடுக்க முடியாமல் போக நேரிடும்.

நோயாளியை உடல் வளையாமல் ஒருக்களித்துப் படுக்க வைக்க வேண்டும். சுத்தமான துணி அல்லது கைக்குட்டையால் அழுத்தமாகக் கட்டி இரத்தப்போக்கைத் தடுக்க வேண்டும். ஒரு கோல் அல்லது குச்சியை எடுத்து உடைந்த உடம்பை சமன் செய்து கட்டியோ, அசைவு அதிகமாகாதபடி கவனத்துடன் மருத்துவமனைக்குக் கொண்டு வந்து சேர்க்க வேண்டும். அங்கு 24 மணி நேரமும் எக்ஸ்ரே எடுக்கும் வசதியும் இரத்தப் பரிசோதனை செய்யும் வசதியும் எல்லா நேரத்திலும் சத்திரசிகிச்சை தியேட்டரை ஆயத்தமாகவும் வைத்திருக்க வேண்டும். இதில் எது ஒன்று இல்லாவிட்டாலும் நோயாளிக்கு சிகிச்சை தருவதில் தாமதமாகிவிடும்.

விபத்து நடந்த முதல் ஒரு மணி நேரம் தான் நோயாளிக்குப் பொன்னான நேரம். உடனடியாக மருத்துவமனையில் நோயாளியைச் சேர்த்து சிகிச்சையளிப்பதற்குப் பொதுமக்கள் மனிதாபிமானத்தோடு உதவ வேண்டும்.

**மருத்துவமனையில் சிகிச்சை**

மருத்துவமனைக்குக் கொண்டு வந்ததும் விபத்துக்குள்ளானவர்களுக்குச் சிகிச்சை ஆரம்பிப்பதை ஏபிசி என்று கூறுவோம். மூச்சுக் குழாய் சரியாக இயங்குகிறதா என்பதை சரி பார்க்க வேண்டும். இரத்த இழப்பு ஏற்பட்டிருந்தால் உத்தேசமாக எவ்வளவு என்று கணித்து உடனடியாக சரியான குரூப் இரத்தத்தைக் கொடுத்து சரி செய்ய வேண்டும். சில வேளைகளில் சரியான குரூப் இரத்தம் கிடைக்கத் தாமதமாகலாம். அப்பொழுது இரத்தத்திற்கான சப்ஸ்டிடியூட்டுகளையும் குளுக்கோஸ் போத்தல்களையும் தற்காலிகமாக உபயோகித்த பின்னர் இரத்தமும் செலுத்த வேண்டும். இரத்த அழுத்தம் சரியாக இருக்கிறதா? என்பதை சரிபார்க்க வேண்டும். நோயாளிக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினையைக் கண்டுபிடிக்கும் வரையிலும் வாய் வழியாக எதையும் கொடுப்பதில்லை. அதிர்ச்சி தீரவும் வலியை மறக்கவும் மருந்துகளைச் செலுத்த வேண்டும். சிறுநீர் சரியாக வருகிறதா, சிறுநீரில் இரத்தம் வருகிறதா, சிறுநீரில் இரத்தம் கலந்து வந்தால் சிறுநீரகம் அல்லது சிறுநீரகக்குழாய் பாதிக்கப்பட்டிருக்கும். சிலவேளையில் எந்த அறிகுறிகளும் தெரியாமல் உட்காயம் ஏற்பட்டிருக்கும். அதையும் மனத்தில் கொண்டு சிகிச்சை செய்ய வேண்டும். தலையில் ஏதாவது அடிபட்டிருக்கும் என்று சந்தேகப்பட்டால் உடனே எக்ஸ்ரே எடுத்துப் பார்க்க வேண்டும். இதெல்லாம் முடிந்த பின்னர் எந்த உறுப்பு பாதிக்கப்பட்டிருக்கிறதோ அந்த உறுப்பு சம்பந்தமான நிபுணரைக்கொண்டு உடனடியாக சிகிச்சையைத் தொடங்க வேண்டும்.

**எலும்பு முறிவு ஏற்பட்டவருக்கு என்ன சிகிச்சை கொடுக்க வேண்டும்?**

எதுவுமே செய்யாவிட்டாலும் உடைந்த எலும்புகள் அருகருகே இருந்தால் ஒன்றாக சேர்ந்துவிடும். கோணல் மாணலாக சேர வாய்ப்புகள் அதிகம். எனவே, எக்ஸ்ரே எடுத்து எலும்பு எப்படி பாதிக்கப்பட்டுள்ளது என்பதைக் கண்டுபிடித்து அதற்கேற்ப சிகிச்சை செய்ய வேண்டும். சில நேரங்களில் மயக்க மருந்து கொடுத்து எலும்பு முறிவை சரி செய்து கட்டுப்போடுவதோ அறுவை சிகிச்சை செய்வதோ மேற்கொள்ளப்படும். எலும்பு நொருங்கி சிதைந்திருந்தாலும் வயரிங், ஸ்குரூஸ் செய்து இணைத்து சிகிச்சை செய்யலாம். இல்லாவிட்டால் உடைந்த எலும்புக்குப் பதில் உடலின் வேறு இடத்தில் உள்ள எலும்பை எடுத்து எலும்பு முறிவால் இடைவெளி ஏற்பட்டுள்ளதை சரிசெய்யலாம். செயற்கை முறையில் வந்துள்ள சாதனங்களைப் பொருத்தியும் சிகிச்சையளித்து எலும்பு முறிவை சரிப்படுத்தலாம்.

**விபத்துக்குள்ளானவர்களுக்கான மருத்துவமனை எப்படி இருக்க வேண்டும்?**

24 மணி நேரமும் எக்ஸ்ரே எடுக்கவும் இரத்தப் பரிசோதனை செய்யவும் வசதிகள்

**01**



இருக்க வேண்டும். அவசர சிகிச்சையை மேற்கொள்வதற்காக பல துறைகளைச் சேர்ந்த அறுவை சிகிச்சை நிபுணர்கள் காலம் தாழ்த்தாமல்வந்து சிகிச்சையை மேற்கொள்ளவேண்டும். எந்த நேரத்திலும் சத்திரசிகிச்சை தியேட்டரும் தயாராக இருத்தல் அவசியம். இவை தவிர அதிக முதலீடு ஆகக்கூடிய சில உபகரணங்களும் கட்டாயம் இருக்க வேண்டும். உதாரணத்திற்கு வெண்டிலேட்டர்கள், பல்ஸ் ஆக்ஸிமீட்டர்கள், டீபைபிரிலெட்டர், மொனிட்டர்,

டாக்டர்.கே.செந்தில்நாதன்,MBBS.,Phd.,
சென்னை-107.

சென்ட்ரல் ஒட்சிசன், பெட்லிப்ட் வசதிகள், இந்த உபகரணங்களை இயக்க சக்தி வாய்ந்த ஜெனரேட்டர் போன்றவை (மின்சாரம் தடைப்படும்போது) இருக்க வேண் டும். இவை யாவற்றிற்கும் மேலாக மனிதாபிமானத்தோடும் கடமை உணர்வுடனும் இருக்கும் பணியாட்கள் அவசியம். எங்களிடம் 24 மணி நேரமும் மேற்சொன்ன வசதிகளும் 3 சத்திரசிகிச்சை தியேட்டர்களும் தயாராக இருப்புதால் நோயாளிகளை விரைந்து கவனிக்க முடிகிறது. இதேபோன்ற வசதியுள்ள மருத்துவமனையை அணுக வேண்டும்.

ஆபத்துக்குள்ளானவர்களுக்கு சிகிச்சை முடிந்த பின்னரும் எக்ஸ்ரே மற்றும் ஸ்கான் ஃபிலிம்களை மருத்துவமனைகள் கொடுக்க மறுப்பார்கள். அதற்குக் காரணம் விபத்துக்குள்ளானவர்கள் சம்பந்தமாக நீதிமன்றத்தில் சாட்சி கொடுக்க சிகிச்சை அளித்த மருத்துவமனையிலிருந்து மருத்துவர்கள் வர வேண்டும். அவ்விதம் வரும்போது எல்லா ஆவணங்களையும் ஆதாரத்திற்காகக் காட்ட வேண்டிவரும். அந்த ஆதாரங்களின் நட்ட ஈடு தரவேண்டும் என்று நீதிமன்றத்தினர் முடிவு செய்வார்கள். எனவே, ஆவணங்களைப் பல வருடத்திற்குப் பத்திரப்படுத்தி வைக்க வேண்டியது மருத்துவமனைகளின் பொறுப்பாகி விடுகிறது. இந்தக் காரணத்தினால் தான் மருத்துவமனைகள் எக்ஸ்ரே, ஸ்கான் ஃபிலிம்களைக் கொடுப்பதில்லை.

# 'இது நல்லதுக்கில்ல'

# கோர்ட்டில் எகிறிய சசிகலா!

சொத்துக் குவிப்பு வழக்கை எந்தத் திசையில் கொண்டு செல்ல இவர்கள் நினைக்கிறார்கள் என்று கோர்டில் இருந்தவர்கள் எல்லோரும் குழம்பிப்போவது போன்றநிலை மையை பெங்களூரு சிறப்பு நீதி மன்றில் சசிகலாவும் அவரது வழக் கறிஞர்களும் உருவாக்கியது, தான் கடந்த புதன்-வியாழன் இரு நாட் களின் ஹைலட்.

புதன் கிழமை (பெப்ரவரி 29) அன்று ஸ்பெஷல் கோர்ட்டுக்கு தனது வக்கீல்களோடும் இளவரசி, சுதாகரன் ஆகியோரோடும் சசிகலா வந்தார். தன்கையிலுள்ள நோட்டி ஸைப் பார்த்து பதில் தரும் சசிகலா, தன்னுடைய பார்வை மற்றவர் களுக்குத் தெரியாதபடி இருப்பதற் காக. ஒரு கூலிங்கிளாசை அணிந்து கொண்டார்.

313 வாக்குமூலத்திற்கான கேள்வி கள் தொடங்கின. நெல்லையில் லிவர்வே அக்ரோ ஃபார்ம் நிறுவனத் திற்கான நிலம் வாங்கியது தொடர் பான கேள்விகளுக்கு, தெரியாது என்று பதில் சொன்னார் சசிகலா. ஜெயா பப்ளிக்கேசனுக்காக அசோக் லேலாண்டு நிறுவனத்திடமிருந்து அப்போதைய டிரான்ஸ்போர்ட் மினி ஸ்டர் செங்கோட்டையன் மூலம் பஸ் வாங்கப்பட்டது தொடர்பான கேள்வி வந்தபோது, சசிகலாவின் முகம் மாறியது.

"பஸ் வாங்கியது உண்மை. அதில் ஜெயாவுக்கு எந்தத்தொடர்பும் இல்லை. அதுபோல அப்போதைய போக்குவரத்துத்துறை அமைச்சர் செங்கோட்டையன் பெயரையும் இதில் இழுப்பது சரியல்ல" என்று தன் கையிலிருந்த குறிப்புகளை வைத்துக்கொண்ட பதிலளித்தார். அதனைத் தொடர்ந்து தியாகராஜ நகர் அபிபுல்லா சாலையில் உள்ள பங்களா, அண்ணா நகரில் வாங்கப் பட்டுள்ள ஒரு பங்களா ஆகியவை பற்றிய கேள்விகள் வர, அவற்றை வாங்கியதை ஒப்புக்கொண்ட சசி கலா "அவற்றிற்கும் ஜெயாவுக்கும்

**நன்றி: நக்கீரன்**

எந்தத்தொடர்பும் இல்லை" என்றார்.

இந்த 313 வாக்குமூலத்தின் 237வது கேள்வி, இ.சி.ஆர்.ரோட்டில் உள்ள அக்கரை கிராமத்திலுள்ள வீட்டின் மதிப்பு பற்றியது, 21 இலட்சம் ரூபாய்க்கு மதிப்பீடு செய் யப்பட்டிருந்த அந்த வீட்டில், 18 இலட்சம் ரூபாய் கட்டட மதிப்பு என்றும் 1இலட்சம் ரூபாய் எலக்ட் ரிக்கல் வேலைக்கான செலவு என்றும், மற்றையவை இன்டீரியர் செலவு என்றும் சாட்சியமளிக்கப் பட்டிருந்தது.

சசிகலா இந்தக்கேள்விக்குப் பதிலளிக்கும்போது ரொம்ப டென் ஷனாகிவிட்டார். "ஜெயலலிதா பெயரில் சொத்துக் குவிப்பு வழக்கு போட வேண்டும் என்பதற்காகவே பொலிஸ் செய்த இந்த மதிப்பீட்டில் ஒரு பெரிய தொகையைப் போட்டு அதை விளம்பரப்படுத்தி, பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தில் மதிப்பைக் கூட்டிப்போட்டு,பொய்ச் சாட்சி சொல்ல வைத்திருக்கிறார்கள். இது அரசியல் எதிரி கருணாநிதி போட்ட சொத்துக் குவிப்பு வழக்கு. கருணாநிதியைத் திருப்திப்படுத்த வேண்டும் என்று பொலிஸார் இப்படி செய்திருக்கிறார்கள்" என்றார். டென் ஷனாக

அரசு வழக்கறிஞர் ஆச்சார்யாவின் ஜூனியரான வக்கீல் சந்தேஷ் ச்சத்தா எழுந்து, சசிகலா தொடர்ந்து தன் கையில் குறிப்புகளையும் பதில்கள் அடங்கிய தாள்களையும் வைத்துக் கொண்டு, கோர்ட் விதிமுறைகளுக்கு மாறாக பதிலளிப்பதை எடுத்துச் சொல்லி எதிர்ப்புத் தெரிவித்தார். இதற்கு சசிகலாவின் வழக்கறிஞர் மணிசங்கர், "கேள்விகளெல்லாம் ஒரு பக்கம், இரண்டு பக்கம் அளவுக்கு இருக்கிறது. எப்படிக் குறிப்பு இல் லாமல் பதில் சொல்ல முடியும்?" என்று கேட்டார்.

அவரை நோக்கிய நீதிபதி மல்லி கார் ஜூனய்யா, "313 கேள்விகளைப் பொறுத்தவரை தெரியும்... தெரியாது என்று பதில் சொன்னால் போதும் என்பதையும் மற்றவற்றை ரிட்டன் ஆர்க்யூமெண்ட்டாகத் தரவேண்டும் என்றும் ஏற்கனவே கோர்ட் அறிவுறுத் தியிருகின்றது. ஆனால், நீங்கள் நேரத் தைக் கடத்திக் கொண்டிருக்கிறீர்கள்" என்று கண்டித்தார். அப்போது சசி கலா வழக்கறிஞர்கள் தரப்பில் கோபம் வெளிப்பட்டது. "எங்கள் கட்சிக்காரர் சசிகலாவிற்கு எதிராக அரசுதரப்பு வக்கீல் பொய் சொல்கிறார்" என்றார்.


அரசு தரப்பு வக்கீல் சந்தேஷ் வேக மாக எழுந்தார். "நான் பொய் சொல்ல வில்லை. குறிப்புகளை வைத்துக் கொண்டு அவர் பதில் தருவதை உறுதி செய்துகொள்ள கனம் நீதி பதியே அந்த நோட்டை வாங்கிப் பார்வையிட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்" என்றார். அரசு வக்கீல் சொன்னதும், சட்டரென எழுந்தார் சசிகலா. கூலிங்கிளாசை கழற்றி மேஜைமீது வைத்தார். கையிலிருந்த நோட்டை, கோர்ட் அலுவலரான தஞ்சாவூர்த் தமிழிரிடம் கொடுத்து, "இதை நீதிபதியிடம் கொடுங்கள்" என்றார் கோபமாக. அத்துடன், அரசு வழிக்கறிஞரையும் படித்துப்பார்க்கும் படி ஆவேசத்தோடு சொன்னார். கோர்ட் அலுவலர் அந்த நோட்டுப் புத்தகத்தை நீதிபதியிடம் கொடுத்தார். அந்த நோட்டிலிருந்தவையெல்லாம் தமிழில் எழுதப்பட்ட குறிப்புகள். நீதிபதிக்கும் அரசு வக்கீல் சந்தேஷுக் கும் தமிழ் தெரியாது. இதில் என்ன இருகிறது என்று தமிழ் தெரிந்தவரான கோர்ட் அலுவலரிடம் கேட்டார் நீதிபதி. "கேள்விகளுக்கான பதில் இருக்கிறது" என்றார் கோர்ட் அலுவ லர். அவர்சொன்ன மாத்திரத்தில் இல்லை இது அனுமதிக்கப்பட முடியாதது என்று மறுத்தார் நீதிபதி. அந்த நோட்டுப்புத்தகத்தை சசிகலா வின் வக்கீலிடம் நீதிபதி கொடுத்தார். உடனே சசிகலா, அரசுசார்பில் மொழிபெயர்க்க நியமிக்கப்பட்ட ஹரீஷைப் பார்த்து பொரிந்துதள்ள ஆரம்பித்துவிட்டார். "ஹிண்ட்ஸ்கூட வச்சிக்கக்கூடாதா?" என்று மெதுவாக ஆரம்பித்தவர், பிறகு நிதிபதிக்கும் கேட்பது போல குரலை உயர்த்தி, "என்ன மிரட்டுறீங்களா? மிரட்டுற மாதிரிப்பேசிறதெல்லாம் நல்லதுக் கில்ல... இது நல்லதுக்கில்ல... இதோ பாருங்க... இதோபாருங்க... நான் குற்றம் சாட்டப்பட்டவள்தான். குற்றவாளி இல்லை. நான் பதில்சொல் வதைத் தடுக்கிற வகையிலேயே அரசு வக்கீல் செயல்படுறார். இதை நீதிபதிக்கிட்டே நீங்க சொல்லுங்க" என்றார்.

கோர்ட் நடமுறைகளுக்குப்புறம் பான சசிகலாவின் நடவடிக்கைகளால் நீதிபதியின் குரல் கடுமையானது. சசிகலாவைப்பார்த்து "நீங்கள் இனி மேல் குறிப்புகளை வைத்துக்கொண்டு அதைப்பார்த்துப் பார்த்து பதில் சொல்லக்கூடாது. அதுபோல பதில் களை மெதுவா முணுமுணுக்கக் கூடாது. சத்தமமாகப் பேசணும். சுருக்கமா பதில் சொல்லணும்" என்றார் சீரியஸ்ான குரலில்.

அத்துடன், மொழி பெயர்ப்பாளர் ஹரிஷைக் கூப்பிட்டு "ஆக்கியூஸ்ட் (சசிகலா) பதில் எழுதுவதற்கு வசதி யாக வைட் பேப்பர் கொடுங்கள்" என நீதிபதி உத்தரவிட்டார். சசிகலாவுக்குப் புதிதாக வெள்ளதைத் தாள்கள் தரப் பட்டு, கேள்விகள் தொடர்ந்தன.

இந்த விசாரணையின்போது, கொட நாடு எஸ்டேட் சொத்துவிபரம் பற்றிய கேள்விகளும் சசிகலாவிடம் கேட்கப் பட்டன. பீட்டர் கிரேட் ஜோன்ஸ் என்ற பெங்களூர்க்காரருக்கு சொந்த மாக ஊட்டியில் இருந்த கொடநாடு டீ எஸ்டேட்டை வாங்குவது தொடர் பாக ராம்சந்திரா மெடிக்கல் காலேஜ் ராமசாமி உடையார் பேசியிருக்கிறார். இதற்கு ராஜரத்தினம் என்பவர் உதவி யிருக்கிறார். இது பற்றிக் கேள்விப் பட்ட ஜெயலலிதா இந்த எஸ்டேட்டை வாங்க விரும்பி, ஊட்டிக்குப் போன போது சசிகலாவுடன் சென்று இத னைப் பார்த்துவிட்டு வந்திருக்கிறார் என்று சாட்சியம் அளிக்கப்பட்டிருக் கிறது.

ராமசாமி உடையார் நடத்திய பேச்சு வார்த்தையின் தொடர்ச்சியாக பீட்டர் க்ரேட் ஜோன்ஸிடமிருந்த இந்த எஸ்டேட் வாங்கப்பட, உடையாரின் மருமகள் ராதா வெங்கடேசன், அமுதா, ஆண்டாள் மூவரும் அந்த எஸ்டேட்டின் டைரக்டர்களானார்கள் என்றும் சாட்சியமளிக்கப்பட்டுள்ளது. 7.6 கோடி ரூபாய் மதிப்பில் வாங்கப் பட்ட இந்த எஸ்டேட்டில், பிறகு குணபூஷணி, சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோரது பெயரும் இணைக்கப்படுகிறது. ராதா வெங்க டேசன் தன்னுடைய இன்கம்டாக்ஸ் கணக்கில் இதனைக் காட்டியிருக் கிறார். இதுபற்றிய கேள்விகளுக்கு கனரா வங்கி, இந்தியன் வங்கி ஆகியவற்றில் கடன் வாங்கிய விபரங் களைப் பதிலாகப் பதிவு செய்திருக் கிறார் சசிகலா. கொடநாடு எஸ் டேட்டை வாங்கித்தருவதற்கு உதவிய புரோக்கர்களின் பெயர்கள் அதற்காகத்



தங்கியிருந்த ஓட்டல்களின் பில்கள்-விபரங்கள் உள்ளிட்ட பல ஆவணங் களையும் கோர்ட்டில் சமர்ப்பித்திருக் கிறது அரசுதரப்பு.

மார்ச் 1 (வியாழன்) அன்றும் கூலிங்கிளாசுடனேயே வந்த சசிகலா, அடிக்கடி கண்ணுக்கு மருந்து விட் டுக். கொண்டார். இதைக்கவனித்த நீதிபதி, "உங்களுக்கு கண்ணில் என்ன பிரச்சினை? உங்க பதில் களைச் சுருக்கமா சொல்லிட்டு, சீக்கிரமா கிளம்பிப் போகலாமே?" என்றார். அன்றும் சசிகலா கையில் குறிப்புகள் இருந்தன. வெள்ளைத் தாளில் அவற்றை எழுதி, அதன்மீது டிரேஸ் பேப்பர் போட்டு வைத்தி ருந்தார். அரச வக்கீலின் எதிர்ப் பையும் மீறி அதைப்பார்த்தே பதில் சொன்னார்.

பையனூர் பங்களா, சிறுதாவூர் பங்களா, ஹைதராபாத் திராட்சைத் தோட்டம் ஆகியவற்றுக்கான மதிப் பீடுகள் பற்றிய கேள்விகளுக்கு "இது அதிகாரிகளினால் அதிகப்படுத்தி காட்டப்பட்டுள்ளது" என்றவர், போயர்ஸ்காடன் வீடு 7 கோடியே 35 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய்க்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது தொடர்பான கேள்விக்கு மட்டும் "எனக்குத் தெரியாது" என்று பதிலளித்தார் அன்றைய விசார ணை முடிந்து வெளியேவந்தபின், கோர்ட் நடவடிக்கைகளை ஒருமையில் விமர்சித்தபடியே சென்றார் சசிகலா. சுப்ரீம்கோர்ட் கேஸைக்காட்டி வழக்கை ஒத்திவைக்க அவரது வக்கீல்கள் எடுத்த முயற்சிகள் பலன் தரவில்லை.

"டாக்குமெண்ட்ஸ் ஆதாரங்கள் பலமாக இருப்பதால், வழக்கை இழுத்தடிக்கச் செய்யும் சசிகலா தரப்பின் முயற்சிகள் ஸ்பெஷல் கோர்டில் இதுவரை எடுபடவில்லை. அதன் எதிரொலிதான் சசிகலாவும் அவரது வக்கீல்களும் பொறுமை யிழந்து, நீதிபதியிடம் காரசாரமான விவாதம்" என்கிறார்கள் கர்நாடக சட்டவல்லுநர்கள்.

# தமிழ்ச் சிறுவனை தேடும் சிங்களர்

## யாழ் சுமந்த சிறுவன் யார்?

நஷனல் ஜியோகிரபி பத்திரிகை அட்டையில் வந்த ஒரு ஆப்கானிஸ்தானின் அகதிப் பெண்ணை 17 வருடங்களுக்குப் பின்பு புகைப்படத்தை மட்டும் வைத்து தேடிக் கண்டுபிடித்த கதை உலக அளவில் பிரபலமானது. அதைப்போல் இப்பொழுது இலங்கை யுத்தத்தில் தொலைந்த ஒரு தமிழ்ச் சிறுவனை ஒரு புகைப்படத்துடன் ஒவ்வொரு முகாமாகத் தேடிக் கொண்டிருக்கிறார் பிபிசியின் சிங்கள சேவை பொறுப்பாளர் பிரியத் லியனகே. இத்தனைக்கும் லியனகே ஒரு சிங்களர். லியனகே ஏன் இந்த சிறுவனைத் தேடுகிறார்? அவரைச் சந்தித்தோம்.

"இலங்கை உள்நாட்டுப் போரின் இறுதி மாதங்களில் பின்னடைந்த புலிகளுடன் தமது வீடுகளிலிருந்து விரட்டப்பட்ட 3 இலட்சம் வரையான தமிழ்மக்கள், நாட்டின் வடபுலத்தில், ஒரு சிறு கடற்கரைப்பகுதியில் அகப்பட்டுக் கொண்டார்கள். கடைசிநாளில் பொறிபறக்கும் சண்டைக்கு நடுவே முன்னகரும் அரசப் படையினரை நோக்கி அடியெடுத்து வைப்பதை விட வேறு வழி அவர்களுக்கு இல்லை.


அப்போது சுதந்திரமான, வெளியுலக ஊடகங்களும் அநேகமான சர்வதேச உதவி அமைப்புகளும் யுத்தக்களத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தன. அத்தகைய சூழ்நிலையில், மக்கள் அல்லற்பட்ட செய்திகள் எல்லாம் படையினர் அழைத்துச் சென்ற அரச ஊடக நிருபர்கள் வழியாகவே வெளிவந்தன.

அப்படி வெளிவந்த வீடியோ காட்சிகளை, ஒரிரவு நான் பார்த்துக் கொண்டிருந்தேன். அதில் ஒரு காட்சி என்னை மிகவும் ஆச்சரியப்படவைத்தது. அக்காட்சியை திரும்பத்திரும்ப ஓடவிட்டுப் பார்த்தேன். சுற்றிலும் விழுந்துகொண்டிருக்கும் குண்டுச் சத்தங்களுக்கும் மனித ஓலங்களுக்கும் நடுவே, ஒரு சின்னஞ் சிறு பையன் யாழ்ப்பெட்டி ஒன்றைத்தோளில் சுமந்தபடி சமர்க்களத்தை ஊடறுத்து நடந்துசெல்லும் காட்சி அது.



ஒரேயொரு இசைக்கருவியுடன் அத்தனை ஆபத்தான பயணத்தை அவன் மேற் கொண்டது எதற்காக? உயிராபத்தை எதிர்கொண்ட மக்கள் தங்களால் எடுத்துச் செல்லக்கூடிய ஒரேயொரு பொருளைக்கையில் எடுக்கையில், அவனோ அந்த இசைக்கருவியைத்தூக்கிச் செல்கிறான். அவன் கதையை நான் அறிய விரும்பினேன்.

அந்தச் சிறுவனைக் கண்டறிய,



அவனுடைய மங்கிய நிழற்படம் ஒன்றுடன், ஐரோப்பாவிலிருந்து இலங்கை திரும்பினேன். கொழும்பிலிருந்து வடக்குநோக்கி 258 கிலோமீற்றர்தூரத்தில் அமைந்துள்ள வவுனியாவில் என் தேடுதலை ஆரம்பித்தேன்.

அங்கிருந்து இலங்கையின் வடக்கெல்லையில் அமைந்துள்ள யாழ்ப்பாண மாநகரத்துக்கு தமிழ்மக்களின் நடுநிலையத்துக்குப் புறப்பட்டேன். போரின் பொழுது தனது கருவிகள் அனைத்தையும் இழந்த முன்னாள் இசை நெறியாளுநர் ஒருவர் தற்பொழுது யாழ்ப்பாணத்தில் ஒரு பள்ளிக்கூடத்தில் பணியாற்றி வருகிறார். அவர் தெரிவித்த துப்பே எனக்குக் கிடைத்த துப்புகளுள் சிறந்தது. நிழற்படத்தில் உள்ள சிறுவனை அவர் அடையாளம் காட்டவில்லை.

அதேவேளை நன்கு உடுப்புடுத்து அவனுடன் அடியெடுத்து வைப்பவர் சிறீகுகன் எனப்படும் இசைஞர் என்று அவர் அடையாளம் காட்டினார்.

சிறீகுகனுடன் தொடர்பு கொள்ள எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்தன. என்னுடன் அவர் தொடர்பு கொள்ள விரும்பவில்லை. தனது செல்பேசியை அவர் நிறுத்திவிட்டார். அவரது பயத்துக்கு நியாயம் உள்ளது."இம்மியும் தண்டனைப் பயமின்றி இப்பொழுதும் இங்கு குற்றங்கள் இழைக்கப்படுகின்றன" என்ற இலங்கை திரைப்பட இயக்குநர் கேசவராசன், நிழற்படத்தில் சிறுவனுடன் நடப்பவர் புலிகளின் தொலைக்காட்சி ஒளிபரப்பாளர் வீரா என்பவராக இருக்கலாம் என்றார்.

வீராவும் அவரும் எங்களுடன் பேசத் தயங்கினர். அவருடன் தொடர்புகொள்ள நாங்கள் பல தடவை முயன்றோம். பின்னர் அவர் வடபுலத்தை விட்டே அகன்றுவிட்டார் என்று கேள்விப்பட்டோம்." மக்கள் அஞ்சுகிறார்கள்" என்கிறார் கேசவன்.

பார்வதி சிவபாதம் என்னும் வேறொரு கலைஞருடன் நான் பேசிப் பார்த்தேன்.

மற்றவர்கள் பலரைப் போல் களம் விட்டு நகர்ந்த பொழுது இவரும் காயப்பட்டார். ஒரே ஒரு கருவியையே சுருதிப் பெட்டியை அவரால் காக்க முடிந்தது. இப்பொழுது ஒரு சின்னஞ்சிறிய தகரக் கொட்டிலில் வசித்து வருகிறார்.

பார்வதி உட்பட பலரையும் சந்தித்த நிலையிலும் அந்த யாழ். சுமந்த சிறுவனோ எங்களுக்கு அகப்படவேயில்லை.

மெனிக் பண்ணை அகதி முகாமில் இன் னும் அடைபட்டுள்ள 7 ஆயிரம் பேருள் அவனும் ஒருவனாக இருக்கலாம்.

எனினும் நாங்கள் அங்கு செல்வதற்கு பாதுகாப்பு அதிகாரிகள் அனுமதியளிக்கவில்லை.

ஆனால் மெனிக் பண்ணை அகதி முகாமில் ஓர் அகதியாய் இருந்த சிவரூபன் என்ற இசைஞரை நான் சந்தித்தேன். படத்தில் உள்ள சிறுவனையோ அவனுக்குப் பக்கத்தில் நடப்பவரையோ சிவரூபன் அடையாளம் காட்டவில்லை.

அவர் தற்பொழுது தனது மனைவியுடனும் ஒரு வயது நிரம்பிய மகளுடனும் ஒரு தகரக் கொட்டிலில் வசித்து வருகின்றார். போரின் போது தனது குடும்பத்தவர்கள் பலரை அவர் இழந்துவிட்டார்.

படத்தில் உள்ள பையனைக் கண்டறியும் எங்கள் இறுதி முயற்சியாக நாங்கள் ஓர் அநாதை இல்லம் சென்றோம்.

சமரின் பொழுது பெற்றோரை இழந்த நூற்றுக்கணக்கான சிறுவர்கள் அங்கே வசிக்கின்றார்கள். அங்கே யாழுடன் கூடிய சிறுவன் ஒருவனை கண்டோம். ஆனால் அவன் நாங்கள் தேடிய சிறுவனல்ல.

இலங்கை முழுக்க சுற்றிவிட்டேன். யாழ் சுமந்த பையனைத் தேடிப்பிடிக்கும் நாட்டமே



என்னை இலங்கை எங்கும் கொண்டு சென்றது.

இலங்கையில் போர் முடிந்து மூன்றாண்டுகள் ஆகியும் வடுக்கள் ஆறவில்லை. நான் கேட்டபோது எல்லாம் மக்கள் பட்ட வேதனை வழி வந்த புலம்பல்களே.

ஆனால் இன்னமும் அந்த சிறுவனை நான் தேடிக் கொண்டுதான் இருக்கின்றேன். நிச்சயம் ஒருநாள் அவனைக் கண்டுபிடிக்க முடியும் என்னும் நம்பிக்கை எனக்கு உள்ளது என்கிறார் பிரியத் லியனகே.

யாழ் சுமந்த பையனை கண்டறிய உங்களால் உதவ முடியும் என்று நினைத்தால் பி.பி.சி சிங்கள சேவை பொறுப்பாளர் பிரியத் லியனகேவைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**குமுதம்**

**கனடாவில் இருந்து மணி வேலுப்பிள்ளை**

# அரசின் ஆயுள் குறைந்து வருவதால் ஐ.தே.கட்சி மீண்டும் ஆட்சிக்கு வரும்

## ஐ.தே.க.தெரிவிப்பு

(கொழும்பு)

**மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் மக்கள் நம்பிக்கையிழந்து ஆட்டம் கண்டு வருகின்றது. அதற்கு நீண்ட கால ஆயுள் இல்லை என்பதை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே புரிந்து கொண்டுள்ளார் என ஐ.தே.கட்சியின் செயலாளர் நாயகம் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.**

அண்மையில் அவர் வெளியிட்டுள்ள கருத்தில், மக்கள் எமது ஆட்சியை விரும்பவில்லையெனில் அந்த மாற்றம் ஏற்படும் என்று கூறியதை இங்கு நினைவுபடுத்துவதாக தெரிவித்த அவர், அடுத்த ஆண்டில் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கம் ஆட்சி செய்யும் என்றும் கூறினார்.

புத்தளத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கட்சி புனரமைப்பு கூட்டத்தில் உரையாற்றும் போதே மேற்கண்ட கருத்தை அவர் வெளியிட்டுள்ளார்.

கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். இன்னும் பலர் நியமிக்கப்பட வேண்டியுள்ளனர். இம்மாதம் நிறைவடைவதற்கு முன்னர் அதனையும் செய்யவுள்ளோம். அமைப்பாளர்களாக நியமனம் பெற்றவர்கள் மிகவும் வேகமாக தமது கிளை அமைப்பு பணிகளை செய்ய வேண்டும். அதன் மூலம் எமது கட்சி பலமடையும். அதற்கான திட்டங்களை நாம் வகுத்து செயற்பட வேண்டும்.

சிறிகொத்தாவுக்கு கல் வீச்சு நடத்தியர்கள் யார்?,அவரது பின்னணி என்னவென்பது யாவரும் அறிந்த உண்மை, அவர்கள் வணங்கும் மத தலத்துக்கு தாக்குதல் நடத்துவார்களா இவ்வாறு செய்பவர்களின் மன நிலை குறித்து நாம் அவதானம் செலுத்தியுள்ளோம்.

மக்கள் தமது கோரிக்கைகளை முன்வைக்கும் போது அவர்களுக்கு எதிரான துப்பாக்கி நீண்டுள்ளது. இந்த கலாசாரம் மாற்றப்பட வேண்டும். அதற்கு நாம் ஒன்றுபட்டு உழைக்க வேண்டியுள்ளது. புத்தளம் தமிழ், முஸ்லிம் மக்கள் என்றும் ஐக்கிய தேசிய கட்சியுடன் தான் இருக்கின்றார்கள் என்பதை நாம் நன்கறிவோம்.

அரசின் ஆயுள் குறைந்து வருவதால் மக்களது எதிர்காலம் மீண்டும் ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியில் பிரகாசிக்க போகின்றது என்ற நல்ல செய்தியினை கூறுவதாக அவர் கூறினார். (அ-2)

## ஆயிரத்து 369 ஏக்கரில் தெங்கு பயிர்ச்செய்கை

(கேகாலை)

இலங்கை தெங்குப் பயிர்ச்செய்கை சபை மனைப் பொருளாதார திட்டத்தின் கீழ் கேகாலை மாவட்டத்தில் கடந்த வருடம் புதிதாக ஆயிரத்து 369 ஏக்கரில் தெங்குப் பயிர்ச்செய்கையை மேற்கொண்டுள்ளது.

அதன்படி 64 ஆயிரத்து 11 தென்னம்பிள்ளைகள் விநியோகிக்கப்பட்டதாக கேகாலை மாவட்டச் செயலகம் தெரிவிக்கின்றது.

இதேவேளை, மாவட்டத்திலுள்ள 280 பாடசாலைகளுக்கு 14 ஆயிரத்து 387 தென்னம்பிள்ளைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. (அ-2)




வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற 19 வயது பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற பருத்தித்துறை சென்தோமஸ் றோ.க.த.க.பாடசாலை அணியினரையும் இரண்டாம் இடத்தைப் பெற்ற நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- எஸ்.செல்வதீபன்)

# நீதி கோரிய பயணத்தில் கிலாரிக்கு மனு கையளிப்பு

(கொழும்பு)

ஈழத் தமிழர்களுக்கு நீதிகோரி அமெரிக்க வாழ் ஈழத்தமிழர்களும் தமிழகத் தமிழர்களும் ஒன்றுபட்டு தொடர் போராட்டமொன்றை நடத்தியுள்ளனர்.

வோஷிங்டன் இராஜாங்கத் திணைக்களத்துக்கு முன்னால் கடந்த 24 ஆம் திகதி அமைதி வழியில் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் இதன் ஏற்பாட்டாளர்கள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், வோஷிங்டன் இராஜாங்கத் திணைக்களத்துக்கு முன்னாலான தமிழ் அமைப்புக்களின் ஆர்ப்பாட்டம் வெற்றியுடன் முடிவுறுகிறது.

இலங்கை அரசினால் 2009 இல் மேற்கொள்ளப்பட்ட யுத்தத்தின் போது கொல்லப்பட்ட பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழ்ப் பொதுமக்களுக்கு நீதி கோருமுகமாக கடந்த மாதம் 24 ஆம் திகதி முதல் இம்மாதம் 2 ஆம் திகதி வரையில் அமைதி வழிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் ஈழத்தமிழர், தமிழ் நாட்டுத் தமிழர் அனைவரையும் உள்ளடக்கிய அமெரிக்கத் தமிழ் அமைப்புக்கள், வோஷிங்டன் நகரில் இராஜாங்கத் திணைக்களத்தின் முன்னால் பதாகைகளைத் தாங்கியவாறு நாள்தோறும் திரண்டு நின்று அமெரிக்க அரசின் கவனத்தைக் கோரி வந்துள்ளனர்.

அவர்கள் எதிர்பார்த்தவாறே அமெரிக்க இராஜாங்கத் திணைக்களமும் ஆர்ப்பாட்டத்தை உற்றுக் கவனித்தே வந்துள்ளது.

இறுதி நாளாகிய கடந்த வெள்ளியன்று ஆர்ப்பாட்டம் முடிவுக்கு வர இருப்பதைத் தெரிந்து கொண்ட தெற்காசியப் பிராந்தியத்துக்குக்கான உதவிச்செயலாளர் ரொபேர்ட் பிளேக் ஆர்ப்பாட்டத்தில் பங்கு கொண்டோருடன் அளவளாவிய ஐ.நா.மனித உரிமைகள் ஆணையத்தில் அமெரிக்கா மேற்கொள்ளவுள்ள செயற்பாடுகள் பற்றி அவர்களுக்கு விளக்குமாறு தனது உதவியாளர் ஒருவரை அனுப்பி வைத்தார்.

பிளேக்கின் செய்தியைத் தாங்கி வந்த உதவியாளர் பங்கு பற்றியோர்களால் இராஜாங்கத் திணைக்கள செயலாளர் ஹிலாரி கிளின்டன் அம்மையாருக்கெனத் தயாரித்து வைக்கப்பட்டிருந்த கோரிக்கை மனுவையும் பெற்று கொண்டதுடன் தமிழ் மக்கள் விடயத்தில் அமெரிக்கா உறுதியுடன் செயற்படுமெனவும் தெளிவுபடுத்தியுள்ளார் என ஏற்பாட்டுக் குழுவினரின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## ஸ்ரீ கல்கி பகவானின் 63 ஆவது அவதார தினம்

ஸ்ரீ கல்கி பகவானின் 63 ஆவது அவதார தின நிகழ்வுகள் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீக பிரார்த்தனை மையத்தில் 63 கலச பூசை நிகழ்வுடன் ஆரம்பமாக வுள்ளது.

தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு சத்திய லோகாவிலிருந்து நேரடியாக இணையத்தளம் மூலம் பக்தர்களுக்கு ஸ்ரீ அம்மா பகவான் தரிசனம் வழங்கப்படவுள்ளதால் பக்தர்கள் அனைவரையும் கலந்து கொண்டு தரிசனத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரார்த்தனை மையத்தினர் கேட்டுக் கொள்கிறனர். (அ)

# ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த வேண்டும்

## சிரேஷ்ட அமைச்சர்கள் வலியுறுத்து

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை பரிந்துரைகளை விரைவில் அமுல்படுத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் சிரேஷ்ட அமைச்சர்கள் கோரிக்கை விடுக்கவுள்ளனர்.

பிரதான கூட்டணி கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்களும் இடதுசாரி கட்சிகளைச் சேர்ந்த சிரேஷ்ட அமைச்சர்களும் கூட்டாக இணைந்து இந்தக் கோரிக்கையை விடுக்கத் தீர்மானித்துள்ளனர்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டுமென சிரேஷ்ட அமைச்சர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண ஆணைக்குழுவின் பரிந்துரைகளை சரியான முறையில் அமுல்படுத்துவது அவசியமானது எனவும் பரிந்துரைகளை அமுல்படுத்துவதன்மூலம் சர்வதேச அழுத்தங்களையும் தவிர்க்க முடியும் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (அ-2)


3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் திருமதி லபிதா பூமிராசா (ஆசிரியர்)

(திதி 06.03.2012)



பிறப்பு 11.08.1968

இறப்பு 09.03.2009

நீயிருந்த நாட்களில் துயரமே வந்ததில்லை
தூணாக நீயிருந்து தோளில் எம்மை தாங்கினீர்
துணையின்றி தவிக்கின்றோம் நாம்
தூரதேசம் போனதேனோ?

எம்மை விட்டுப் பிரிந்து சென்ற எமது குடும்ப ஒளிவிளக்கின் 3 ஆம் ஆண்டு ஆத்மா சாந்திப் பிரார்த்தனையும் திவசக் கிரியையும் எமது இல்லத்தில் 06.03.2012 செவ்வாய்க்கிழமை பகல் 12.00 மணிக்கு நடைபெறும். அதனைத் தொடர்ந்து மதிய போசன விருந்தும் இடம்பெறும். இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.01, பாலிநகர்,
வவுனிக்குளம்.
TP:-0214909166

த.பூமிராசா (கணவர்),
பிள்ளைகள்
(கோபினாத், கோகிலாத், லோஜினி)

(7527)

# ஈழத்தமிழர் படுகொலையில் கருணாநிதிக்கும் பொறுப்புண்டு

## கம்யூனிஸ்ட் கட்சி தெரிவிப்பு



(தஞ்சாவூர்)

ஈழத்தமிழர் படுகொலையில் தி.மு.க.தலைவர் கருணாநிதி , பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோருக்கும் பொறுப்புள்ளது என இந்திய கம்யூனி. கட்சி மாநில துணைச் செயலாளர் மகேந்திரன் தெரிவித்தார்.

தஞ்சையில் அவர் நிருபர்களிடம் கூறியதாவது, ஈழத்தமிழர்களைக் கொன்று குவித்த இலங்கை அரசு இன அழிப்பு போர்க் குற்றவாளியாக இந்திய அரசு அறிவிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி தமிழகத்தில் இந்திய கம்யூ.கட்சி பல்வேறு அமைப்புக்களை ஒருங்கிணைத்து இன்றையதினம் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தவுள்ளது. இதில் பங்கேற்க அ.தி.மு.கவுக்கும் அழைப்பு விடுத்துள்ளோம். பா.ம.கவும் நிச்சயம் பங்கேற்கும். தி.மு.க., காங். கட்சிகள் தான் ஈழத்தமிழர் படு கொலையைத் தடுக்க வேண்டிய பொறுப்பில் இருந்தும் ஆட்சி அதி காரத்தில் இருந்தும் விலகிச் சென்று விட்டனர். அதனால் படு கொலைக்குப் பொறுப்பு ஏற்க வேண்டிய கடமை தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கும் பிரதமர் மன்மோகன் சிங் குக்கும் உள்ளது.

ஐ.நா.பொதுச் செயலாளர் பான்கீமூன்தலைமையில்மூன்று நீதி பதிகள் ஆய்வு செய்து அளித்த அறி க்கையில் இலங்கையில் இனப்படு கொலை நடந்துள்ளது. இதில் சம ரச முயற்சி மேற்கொண்ட பத்திரி கையாளர் பெண்மணி ஒருவரும் கொல்லப்பட்டுள்ளார் என தெளி வாகக் கூறியுள்ளனர். எனவே, அத னடிப்ப டையில் இலங்கை ஜனா திபதியை விசாரிக்க ஐ.நா. சபை சார்பில் மனித உரிமை ஆர்வலர் களைக் கொண்ட சுதந்திரமான நீதி பதிகள் கொண்ட குழுவை அமைக்க வேண்டும். தமிழகத்தில் மின்வெ ட்டை தடுக்கும் வகையில் மின் உற் பத்தியை அதிகரிக்க வழிவகை காண வேண்டும். இவ்விவகாரத்தில் மத்திய அரசும் மாநில அரசும் அரசுக்கு உதவ வேண்டும். இல்லாவிட்டால் பெரிய அளவில் இந்திய கம்யூ.கட்சி போராட்டம் நடத்தும் என அவர் கூறினார்.

இதேவேளை, ஆழ் வார் பேட் டையில் உள்ள இலங்கை தூதரகம் முன்பு மார்க்சிஸ்டு கம்யூ னிஸ்டு கட்சி தொண்டர்கள் நேற் றுக் காலை குவிந்தனர். இதன் போது 200 பேர் வரை ஆர்ப்பாட்ட த்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சில இளைஞர்கள் பொலிஸாரின் தடுப்பையும் பொருட்படுத்தாமல் இலங்கை தூதரகத்திற்குள் நுழைய முயன்றனர். பொலிஸார் அவர்களை உள்ளே விடாமல் தடுத்து நிறுத்தினார்கள்.

அப்போது அவர்களுக்குள் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. பின்னர் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு தொண்டர்கள் மெயின் றோட்டில் படுத்து மறியலில் ஈடுபட்டனர். இதனால் அங்கு போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டம் மற்றும் மறியலில் ஈடுபட்ட மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி செயலாளர் ஜி.ராமகிருஷ் ணன், பீமாராவ் எம்.எல்.ஏ.உட்படஒளஒ 200 பேரை பொலிஸார் கைது செய்தனர். (அ-2)

# பீகாரில் மிகப்பெரிய இந்துக் கோவில்

(பாட்னா)


உலகின் மிகப்பெரிய இந்துக்கோவிலை பீகார் மாநிலம் வைசாலி மாவட்டத்தில் கட்டப் போவதாக மகாவீர் மந்திர் அறக்கட்டளை அறிவித்துள்ளது.

மேலும் இந்த கோவில் 100 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படவுள்ளது என்றும் சுமார் 15 ஏக்கர் பரப்பளவில் 5 மாடிகளைக் கொண்ட இக்கோவிலின் உயரம் சுமார் 222 அடி உயரம் இருக்கும் எனவும் அது அறிவித்துள்ளது.

கோவில் கட்டுவதற்கு தேவையான நிலம் 30 கோடி ரூபாய் செலவில் கையகப்படுத்தப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. தற்போது கம்போடியா நாட்டில் உள்ள அங்கர்வாட் கோவில் உலகின் மிகப்பெரிய இந்துக்கோவில் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)




# மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைவர் ரங்கராஜனுக்கு சீமான் கண்டனம்



தமிழினப் படுகொலை செய்த இலங்கை அரசுக்கு எதிரான போர்க்குற்றங்களை சுதந்திர மான பன்னாட்டுக் குழுவை அமை த்து விசாரணை நடத்துவதை மார்க்சிஸ்ட் கட்சி எதிர்க்கும் என்று அக்கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் டி.கே.ரங்கராஜன் கூறியுள்ளது கண்டனத்திற்குரியதாகும் என நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில கூறப்பட்டுள்ளவை வருமாறு,

இரண்டரை ஆண்டுகாலப் போரில் ஒன்றே முக்கால் இலட்சம் தமிழர்களை கொன்று குவித்த இலங்கை அரசு மீது போர்க்குற்ற விசாரணை நடத்த வலியுறுத்தி ஐ.நா. மனித உரிமை மன்றத்தில் தீர்மானம் கொண்டு வரப்படவுள்ள நிலையில் அப்படிப்பட்ட தீர்மானத்தை இந்திய அரசு ஆதரிக்க வேண்டும் என்று தமிழக காங்கிரஸ் கட்சி உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் ஆதரிக்கும் போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி அதற்கு எதிர்ப்புக் காட்டுவது விரோதமாகவுள்ளது.

இலங்கையில் நடந்த போர்க் குற்றங்கள் குறித்த விசாரணையை அந்நாட்டு அரசுதான் நடத்த வேண்டும் என்றும் ரங்கராஜன் கூறியுள்ளார்.

இது கொலை செய்தவனிடமே விசாரணைப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும் என்று கூறுவதற்கு ஒப்பானதாகும்.

பன்னாட்டு விசாரணையை ஏன் எதிர்க்கிறீர்கள் என்று கேட்டதற்கு இலங்கை இறையாண்மையுள்ள ஒரு நாடு? அது இந்தியாவின் நண்பன் என்றும் ரங்கராஜன் கூறியுள்ளார். ஒரு நாட்டின் இறையாண்மை என்பது அது அந்நாட்டு மக்களையே கொன்று குவிக்கும் உரிமையா? என்று கேட்கிறோம். தமிழ் நாட்டின் மீனவர்கள் 540 பேருக்கு மேல் இலங்கை கடற்படை சுட்டுக் கொன்றதே அதுதான் இந்தியாவின் நட்பு நாடு என்பதற்கு அத்தாட்சியா?

இலங்கையில் தமிழர்கள் நடத்தி வருவது சுயநிர்ணய போராட்டம் அல்ல என்று கூறும் ஒரே மார்க்சியர் இவராகத்தான் இருக்க முடியும்.

இந்திய மார்க்சிஸ்ட் கட்சி ஒரு தமிழின விரோத கட்சி என்பதையும் அது உண்மையான மார்க்சிய கட்சி அல்ல என்பதையும் தமிழக மக்கள் புரிந்து கொண்டு இனிவரும் தேர்தல்களில் காங்கிரஸ் கட்சியைப் போல் மார்க்சிஸ்ட் கட்சியையும் புறக்கணிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம் என அதில் கூறியுள்ளார். (அ-2)

# இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை மத்திய அரசு ஆதரிக்க வேண்டும்

## காந்தி பேரவைத் தலைவர் வலியுறுத்து

ஐ.நா. மனித உரிமை குழுவில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்படவுள்ள தீர்மானத்தை மத்திய அரசு ஆதரிக்க வேண்டும் என்று காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் காந்தி பேரவை தலைவருமான குமரி அனந்தன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஐ.நா. மனித உரிமை குழுவில் இலங்கை அரசை போர்க்குற்றவாளியென்று அமெரிக்காவும் பிறநாடுகளும் கொண்டுவரும் தீர்மானத்தை மத்திய அரசு ஆதரிக்க வேண்டும். தமிழ் மக்களைக் கொடூரமாகக் கொன்று குவித்த இலங்கை அரசு தண்டிக்கப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் நோக்கமாக இருக்க வேண்டும். இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது இத்தாலி சென்றிருந்த ஜவஹர்லால் நேரு ஹிட்லருக்கு துணைபோன முசோலினி தன்னைப் பார்க்க விரும்பிய போதும் அனுமதி கொடுக்காமல் மறுத்து விட்டார் என்பதை நினைவில் கொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார். (அ-2)

# ஏவுகணை சோதனை வெற்றி



(ஜெய்சல்மார்)

பிரமோஸ் ஏவுகணைச் சோதனையை இந்திய இராணுவம் நேற்று முன்தினம் வெற்றிகரமாக நடத்தியது.

இந்தியா-ரஷ்யா கூட்டுத் தயாரிப்பில் உருவாக்கப்பட்ட ஒலியைவிட வேகமாகச் செல்லக்கூடிய ஏவுகணையான பிரமோஸ் ஏவுகணைச் சோதனை இராஜஸ்தான் மாநிலம் பொக்ரான் அருகே உள்ள ஜெய்சல்மார் இராணுவ தளத்தில் நடைபெற்றது. 290 கி.மீ.தொலைவிலுள்ள இலக்கை இந்த ஏவுகணை வெற்றிகரமாகத் தாக்கியது.

இராணுவ துணைத் தளபதி ஸ்ரீ கிருஷ்ணா சிங், இராணுவ நடவடிக்கைகளுக்கான இயக்குநர் ஜெனரல் ஏ.கே.சவுத்திரி ஆகியோர் இந்த சோதனையை நேரடியாகப் பார்வையிட்டனர். (அ-2)

# இந்தியாவில் தங்கிய இஸ்ரேலிய எழுத்தாளரை நாடு கடத்த உத்தரவு



விசா காலம் முடிவடைந்தும் இந்தியாவில் தங்கிய இஸ்ரேல் பெண் எழுத்தாளரை மருத்துவ பரிசோதனைக்கு பின்பு அவரது நாட்டிற்கு அனுப்பி வைக்கும்படி கேரள உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இஸ்ரேலை சேர்ந்த பெண் எழுத்தாளரான சூசன் நாதன் திஅதர் சைடு ஆப் இஸ்ரேல் என்ற புத்தகத்தை எழுதுவதற்காக சில ஆண்டுகளுக்கு முன்பு கேரளா மாநிலம் கோழிக்கோடு மாவட்டத்திற்கு வந்தார்.

இவர் எழுதிய புத்தகம் குறித்து விசாரணை நடத்திய மத்திய புலனாய்வு பிரிவினர் பிரிவினைவாதத்தை தூண்டுவதாக அமைந்திருப்பதாக தெரிவித்தனர்.

இந்நிலையில் அவரது விசா காலம் முடிவடைந்ததும் அவர் நாடு திரும்பவில்லை. இது குறித்து அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு பொலிஸார் அவரை கேரள உயர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிபதிகள் குழாம் விசாரணையின் முடிவில் அவருக்கு மருத்துவ பரிசோதனை நடத்தப்பட்டு பின்னர் அவரது நாட்டிற்கு அனுப்பி வைக்க கேரள உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-2)

# போலந்தில் புகையிரத விபத்து 14 பேர் பலி; 54 பேர் காயம்



போலந்து நாட்டின் ஷெகோசினி நகரில் இருந்து பயணிகள் எக்ஸ்பிரஸ் புகையிரதம் புறப்பட்டு சென்றது. வார்சா கிரோசோ பகுதியில் சென்ற போது இந்தப் புகையிரதம் மீது எதிரே வந்த மற்றொரு புகையிரதம் மோதியது.

இதனால் பெட்டிகள் ஒன்றுடன் ஒன்று மோதி நொறுங்கின.

இந்த விபத்தில் 14 பேர் உயிரிழந்தனர். 54 பேர் காயம் அடைந்தனர். தகவல் அறிந்ததும் தீயணைப்பு படையினரும் பொலிஸாரும் அங்கு சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். (அ-2)

# முஷாரப்பை கைது செய்யும்படி சர்வதேச பொலிஸாருக்கு பாக். கடிதம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோ கொலை வழக்கு தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி முஷாரப்பை கைது செய்யும் படி சர்வதேச பொலிஸாருக்கு பாகிஸ்தான் உள்துறை அமைச்சகம் கடிதம் அனுப்பியுள்ளது.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோ 2007 இல் படுகொலை செய்யப்பட்டார். அப்போது ஜனாதிபதியாக இருந்த முஷாரப் பெனாசீருக்கு போதிய பாதுகாப்பு அளிக்கத் தவறி விட்ட தாக பாகிஸ்தான் நீதிமன்றம் குற்றம் சாட்டி அவரை கைது செய்ய உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கில் முஷாரப் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ளார். தற்போது முஷாரப் டுபாய் மற்றும் பிரிட்டனில் வசித்து வருகின்றார். அவர் நாடு திரும்பினால் உடனடியாக கைது செய்யப்படும் சூழல் உள்ளது.

இது குறித்து பாகிஸ்தான் சட்ட வல்லுநர் ஒருவர் குறிப்பிடுகையில்,

இன்டர்போலுக்கு கடிதம் அனுப்பியதன் மூலம் முஷாரப்பை கைது செய்து விட முடியாது. பிரிட்டனுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே கைதிகளை ஒப்படைக்கும் ஒப்பந்தம் இதுவரை ஏற்படுத்தப்படவில்லை.



முஷாரப்பை பாகிஸ்தான் தேடுகின் றது என்பதை தான் இன்டர்போல் கடிதம் வலியுறுத்துமே தவிர அவரை கைது செய்ய வழி வகுக்காது என்றார்.

பாகிஸ்தான் வெளியுறவுச் செயலாளராக இருந்த சல்மான் பஷீர் ஓய்வு பெற்றதையடுத்து புதிய செயலாளராக ஜீலீல் அப்பாஸ் ஜிலானி நியமிக்கப்பட்டுள்ளார். (அ-2)

# வங்கத்தில் நிறுவன ஊழியர்கள் கொடுமைப்படுத்தப்படுகின்றனர்

## பிரிட்டன் பத்திரிகை தெரிவிப்பு

வங்க தேசத்தில் பிரபல விளையாட்டு உடைகளை தயாரிக்கும் நிறுவனத்தின் ஊழியர்கள் பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாக்கப்படுவதாக பிரிட்டன் பத்திரிகை தெரிவித்துள்ளது.

லண்டனில் எதிர்வரும் ஜுலை மாதம் 27 ஆம் திகதி ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாகின்றன.

இதையொட்டி விளையாட்டு வீரர்களுக்கான பனியன், காற்சட்டை, சப்பாத்து போன்றவற்றை தயாரிக்கும் பணியில் நைக், பூமா, அடிடாஸ் போன்ற பிரபல நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன.

வங்கதேசத்தில் உள்ள இந்த நிறுவனங்களில் ஒலிம்பிக் போட்டிக்கு தேவையான பொருட்கள் அதிக அளவில் தயார் செய்யப்பட்டு வருகின்றன. இந்த நிறுவனங்களில் ஒப்பந்த அடிப்படையில் அதிக ஊழியர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களை நிர்வாகத்தினர் அடித்தும் தலைமுடியை பிடித்து இழுத்தும் பாலியல் ரீதியாகவும் கொடுமைப்படுத்துவதாக லண்டனில் இருந்து வெளிவரும் அப்சர்வர் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட ஊழியர்களின் பேட்டியை இந்த பத்திரிகை வெளியிட்டுள்ளது. அதுமட்டுமல்லாது 12 மணி நேரத்துக்கு அதிகமாக இந்த ஊழியர்கள் வேலை வாங்கப்படுவதாகவும் பெண்கள் மார்பு பகுதியை மறைக்க பயன்படுத்தப்படும் துப்பட்டாவை அகற்றும்படி வற்புறுத்துவதாகவும் இந்த பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (அ-2)

# திபெத்தியப்பெண் தீக்குளிப்பு

திபெத் சீனாவின் ஆக்கிரமிப்பில் உள்ளது. இதற்குவிடுதலைஅளிக்க வலியுறுத்தி திபெத் மக்கள் பல ஆண்டுகளாக போராடி வருகின்றனர். ஆனால் சீனா கண்டு கொள்ளவில்லை. எனவே தீக்குளித்து தற்கொலை செய்யும் போராட்டத்தில் திபெத் மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மேலும் ஒரு பெண் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார். தனது உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்து கொண்ட அவர் திபெத்துக்கு சுதந்திரம் வேண்டும். தலாய்லாமா இங்கு மீண்டும் திரும்ப வேண்டும் என கோஷம் எழுப்பியபடி கருகி விழுந்து மடிந்தார். இச்சம்பவம் சீனாவுக்கு மேலும் தலைவலியை ஏற்படுத்தியுள்ளது. இப்போராட்டத்தை ஒடுக்கும் படி திபெத் பொறுப்பாளர்களுக்கு கடும் உத்தரவு பிறப்பித்துள்ளது. (அ-2)

# உலக தரிசனம்

# இந்தோ.வில் ஆண்களுக்கு இப்படியும் கண்டிப்பு

இந்தோனேசியா நாட்டில் ஆண் ஊழியர்களின் சம்பள பணத்தை அந்நாடு அவரவர் மனைவிகளிடம் ஒப்படைக்கும் படி உத்தரவிட்டுள்ளது.

ஆண்கள் தங்களின் சம்பளம் முழுவதும் வேறு வழிகளில் செலவழிப்பதை தடுக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. இந்தோனேசியாவில் அரசு பணி மேற்கொள்ளும் ஊழியர்கள் தங்களது சம்பளப் பணத்தை கள்ளக்காதலிகள் மற்றும் விபச்சாரிகளிடம் செலவு செய்து வருவதாக தெரிகின்றது.

இதனால் குடும்பம் நடத்த முடியாமல் சிரமத்திற்குள்ளாவதாக அரசு ஊழியர்களின் மனைவிமார்கள் புகார் தெரிவித்தனர். இந்த புகார்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் அதிக அரச ஊழியர்கள் கள்ளத்தொடர்பில் ஈடுபட்டு பணத்தை செலவிடுவது கண்டறியப்பட்டுள்ளது.

இதையடுத்து அரசு ஊழியர்களின் சம்பள பணத்தை அவரவரது மனைவிமார்களிடம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதை தொடர்ந்து மனைவிமார்களின் பெயர்களில் வங்கி கணக்கு தொடங்கப்பட்டு அதில் சம்பள பணம் போடப்பட்டது. இந்த நடைமுறை இந்த மாதம் முதல் அந்நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ளது. (அ-2)

# ரஷ்ய தேர்தலில் வெற்றிபெற்று மீண்டும் ஜனாதிபதியாகும் புடின்

ரஷ்ய ஜனாதிபதி தேர்தலில் விளாடிமிர் புடின் வெற்றி பெற்று 3 ஆவது முறைஜனாதிபதியானார்.



ரஷ்ய ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய ரஷ்ய கட்சி சார்பாக முன்னாள் ஜனாதிபதி விளாடிமிர் புடின் போட்டியிட்டார்.

ரஷ்ய நாட்டின் சட்டப்படி ஒருவர் 3 ஆவது முறையாக மீண்டும் ஜனாதிபதியாக முடியாது. எனவே சென்ற முறை ஜனாதிபதியாக தெரிவான புடின் தமது நம்பிக்கைக்குரிய டிமித்ரி மெத்வதேவை ஜனாதிபதியாக்கினார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் நடந்த ரஷ்ய ஜனாதிபதிக்கான வாக்கெடுப்பில் 62 சதவீத வாக்குகள் பெற்று புடின் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இதனால் 3 ஆவது முறையாக ஜனாதிபதியாக தெரிவாகி புடின் சாதனை படைத்துள்ளார். (அ-2)

# ரவீந்திரநாத் தாகூரின் உருவச்சிலை திறந்துவைப்பு

நோபல் பரிசு பெற்றவரும் புகழ்பெற்ற கவிஞருமான ரவீந்திரநாத் தாகூர் உருவச்சிலை எகிப்தில் திறக்கப்பட்டுள்ளது. இச்சிலையை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர்கள் எஸ். எம். கிருஷ்ணா மற்றும் எகிப்து கலாசாரத்துறை அமைச்சர் ஷாகெர் அப்துல் ஹமீதும் இணைந்து திறந்து வைத்தனர்.

தாகூரின் 150 ஆவது பிறந்த தினக் கொண்டாட்டமாக இந்தச் சிலையை இந்திய கலாசார அமைப்பு மூலம் எகிப்தில் உள்ள எகிப்து கலாசார அமைச்சகத்தின் அலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ளது. இது இந்தியாவுக்கு அளிக்கப்பட்ட கௌரவமாக கருதப்படுகின்றது. 1878 மற்றும் 1926 ஆம் ஆண்டுகளில் எகிப்துக்கு தாகூர் சென்றுள்ளார். எகிப்தின் புகழ்மிக்க கவிஞர் அகமது ஷாவியுடன் நட்பு கொண்டிருந்தார். கடந்த மே மாதம் முதல் தாகூரின் 150 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு எகிப்தில் உள்ள இந்திய தூதரகத்தின் கலாசாரப் பிரிவு பல்வேறு கலை நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றது. (அ-2)


# நேபாள சந்தையில் தீ

நேபாளத்தில் காய்கறி மொத்த வியாபாரச் சந்தையில் ஏற்பட்ட தீ விபத்தில் 3 குழந்தைகள் உட்பட 6 பேர் பலியாகினர்.

நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் காளிமதி மொத்த காய்கறிச் சந்தை உள்ளது. இங்குள்ள கிடங்கில் நேற்று முன்தினம் இரவு மின் கசிவினால் தீ விபத்து ஏற்பட்டது. இதில் ஆறு பேர் பலியாகினர். பலியானவர்களில் 5 பேர் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள்.

இப் பயங்கரத் தீ விபத்தில் 10 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் எரிந்து நாசமாயின. ஆறு தீயணைப்பு வண்டிகள் நான்கு மணிநேரம் போராடி தீயை அணைத்தன. இந்த சந்தையிலிருந்து தான் காத்மண்டுவின் அனைத்து பகுதிகளுக்கும் காய்கறி மற்றும் பழங்கள் விநியோகம் செய்யப்படுகின்றன. தீ விபத்து காரணமாக நேற்று முன்தினம் காய்கறி விநியோகம் பாதிக்கப்பட்டது. (அ-2)

# சொத்துக்கள் பட்டியலில் கேம்பிரிட்ஜ் முதலிடம்



அதிகளவு சொத்துக்களை வைத்துள்ள பகல்கலைக் கழகங்களின் பட்டியலில் இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் பல் கலைக்கழகம் முதலிடம் பெற்றுள்ளது. மற்றொரு பல்கலைக் கழகமான ஒக்ஸ்போர்ட்டு பல் கலைக்கழகத்தை தவிர இங்கிலாந்தில் உள்ள ஏனைய பல்கலைக்கழகங்களை காட்டிலும் இரண்டு மடங்கு சொத்து மதிப்பு அதிகமாகும்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் சொத்து மதிப்பு சுமார் 4 பில்லியன் பவுண்டுகளாகும். அது மட்டுமல்லாமல் ஆசிரியர் மற்றும் மாணவர்கள் எண்ணிக்கை மொத்தம் 30 ஆயிரம் ஆகும்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் 65.8 சதவீதம் வெள்ளையர்கள் ஊழியர்களாகவும் 9 ஆயிரத்து 147 பேர் ஆபிரிக்க கறுப்பின மக்கள் மற்றும் கரீபியனை சேர்ந்தவர்கள் ஊழியர்களாகவும் பணி புரிந்து வருகின்றனர்.

பல்கலைக்கழகத்தின் அனைத்து துறைகளிலும் சேர்ந்து 75 சதவீத ஆண்கள் பேராசிரியர்களாகவும் 60 சதவீத பெண்கள் பேராசிரியர்களாகவும் பணிபுகின்றனர். (அ-2)

பாதகம் செய்பவர்களைக் கண்டால் மோதி மிதித்துவிடு பாப்பா.
அவர் முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா – *பாரதியார்*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## வடக்கு மாகாண அரச அதிபர்கள் ஒற்றுமைப்பட வேண்டும்

விநாயகர் தலைமையிலான குழு, முல்லைத் தீவு அரச அதிபரிடம் விசாரணை நடத்திய அதே நேரம், கிளிநொச்சி அரச அதிபரையும் இணையத்தள வழியாக விசாரணை நடத்தியது.

வைரவர்: ஆர்ப்பாட்டத்திற்கு முன்னதாக அரச பணியாளர்களின் சம்மதம் பெறப்பட்டதா?

அரச அதிபர்கள்:இல்லை.

வைரவர்: அரச பணியாளர்களிடம் அனுமதி பெற்றுக் கொள்ளாமல் ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபடுத்துவது மனிதவுரிமை மீறல் அல்லவா?

அரச அதிபர்கள்: (மௌனம்)

வீரபத்திரர்: அரச அதிபர்களே மனிதவுரிமைகளை, சட்டத்தை மீறி நடந்து கொண்டால், நாட்டில் நீதி நிலவுமா?நிர்வாகம் ஒழுங்காக நடைபெறுமா?

அரச அதிபர்கள்: (மௌனம்)

யமன்: எல்லாவற்றுக்கும் மௌனமாக இருந்தால்..

அரச அதிபர்கள்: அரசாங்கத்தை எதிர்க்கும் வல்லமை எங்களிடம் இல்லை.பயத்தின் நிமிர்த்தம் அவர்கள் இட்ட கட்டளையை நிறைவேற்றினோம்.

வீரபத்திரர்: பயம் என்று கூறிக் கொண்டு நிர்வாக விதிமுறைகளில் இருந்து தப்பித்துக் கொள்கின்றீர்களா?

அரச அதிபர்கள்: (மௌனம்)

விசாரணையைத் தொடர்ந்து வீரபத்திரர் தொகுப்புரை ஆற்றினார்.

போரில் பாதிக்கப்பட்ட அரச பணியாளர்களையும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க வைத்தமை மகா தவறு.

இதுபோன்ற மனிதநேயமற்ற செயல்களை அரச அதிபர்கள் மட்டுமல்ல, எந்த அரச நிர்வாகியும் செய்யக்கூடாது. தமிழ் மக்கள் போரினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வன்னியில் நடந்த இறுதிப் போரின் கொடூரம் ஜெனிவா வரை நிலைமையைக் கொண்டு சென்றுள்ளது.

இலங்கை அரசிற்கு எதிராக ஜெனிவாவில் தீர்மானம் கொண்டுவருவதாக இருந்தால் அதற்குப் பரிகாரம் காண வேண்டிய பொறுப்பு, அரசாங்கத்தினுடையதே அன்றி,அரச அதிபர்களினதோ அல்லது அரச பணியாளர்களினதோ அல்ல.

எனவே வட பகுதியில் கடமையாற்றும் அரச அதிபர்கள், பிரதேச செயலர்கள், அரசிடம் நல்ல பெயர் வாங்குவதற்காக தமிழ் இனத்திற்கும் தமிழ் மக்களுக்கும் ஒருபோதும் பாதகம் செய்யலாகாது.

அரச பயம் உங்களிடம் இருக்குமாக இருந்தால், வட பகுதியில் கடமையாற்றும் அரச அதிபர்கள், பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் கூட்டாகச் சேர்ந்து அமைப்பொன்றை உருவாக்குங்கள்.

சட்டத்திற்கு முரணாக உங்களை வழிநடத்த யார் முற்பட்டாலும் நீங்கள் கூட்டாக நின்று எதிர்ப்புத் தெரிவியுங்கள்.எல்லாம் சரியாக வரும்.

உங்களுக்குள் ஒற்றுமையில்லை.

நீங்களே! ஒருவரையொருவர் காட்டிக் கொடுக்கும் நிலையில் இருக்கிறீர்கள்.

வடக்கு மாகாண சபையில் கடமையாற்றும் இலங்கை நிர்வாக சேவையிலுள்ள தமிழ் நிர்வாகிகள் ஒருவரை ஒருவர் அறுப்பதாகத் தகவல்.

அதுபோல நீங்களும் இருக்காதீர்கள்.

இவ்வாறு குழுவின் சார்பில் வீரபத்திரர் தொகுப்புரை வழங்கி முடிக்க,

விசாரணைக் குழுவின் மிக நீண்ட அறிக்கை, பிரம்மசூடிப் புத்தகத்தில் பதியப்படுகிறது எனவும் அதனை வலம்புரி நாளிதழ் ‘கருத்துக்களம்’ என்ற தலைப்பில் மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என்றும் விசாரணைக் குழுவின் தலைவர் விநாயகர் கட்டளையிட, குழுவினர் தேவலோகம் செல்ல நாம் கண்ட கனவும் கலைந்தது.

# உண்மையான நீதியினையே தமிழர்கள் வேண்டி நிற்கின்றனர்

## உருத்திரகுமாரன் செவ்வி



இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கான சுயாதீனமான சர்வதேச விசாரணைப் பொறிமுறையொன்றினை உடனடியாக அமைக்க வேண்டுவதோடு, உலகத் தமிழர்கள் உண்மையான நீதியையே சர்வதேசத்திடம் கோரி நிற்பதாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் இடம்பெற்றுவரும் ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 19-வது கூட்டத் தொடரை முன்னிறுத்தி கொழும்பில் இருந்து வெளிவரும் சண்டே லீடருக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இச் செவ்வியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

2000-ம் ஆண்டின் ஆரம்ப காலங்களில் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் பல தோல்விகளைத் தழுவிய அரசாங்கம், சர்வதேச நாடுகள் மூலமாக சமாதானம் என்ற மாயமானை அனுப்பி தமிழர்களை ஏமாற்றி திரைமறைவில் போருக்கான ஆயத்தங்களை செய்திருந்தது.

இக் கொடிய போருக்கு சாட்சியம் இல்லாதிருக்க சர்வதேச தொண்டு நிறுவனங்களை போர் இடம்பெற்ற பிரதேசங்களில் இருந்து வெளியேற்றிவிட்டு ஊடகங்களுக்கு தடை விதித்துவிட்டு, மனிதாபிமானப் போர் எனும் பேரில் இன ஒழிப்பு போர் ஒன்றை தமிழர்கள் மீது அரசாங்கம் கட்டவிழ்த்தது.

இப்போரின்போது, 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்றும் வகை தொகையில்லாப் பெண்கள் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள் என்றும் இருப்பிடம் இழந்தவர்களுக்கு உணவும், போரில் காயப்பட்டவர்களுக்கு மருத்துவமும் வேண்டுமென்றே மறுக்கப்பட்டிருந்தமை போன்ற விடயங்கள் கண்டறியப்பட்டது என ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை அரசால் வெகு சாமர்த்தியமாக சதி செய்யப்பட்டு நடத்தி முடிக்கப்பட்ட இந்த இனவழிப்பை சர்வதேச பொறி முறையொன்றால் விசாரிக்கப்பட்டால் மட்டுமே தங்களுக்கு உண்மையான நீதி கிடைக்கும் என தமிழர்கள் நம்புகின்றார்கள்.

ஐ.நா.நிபுணர்குழு காட்டியிருப்பது போல இறந்தவர்களின்தொகை 40 ஆயிரம் அல்ல.பல ஆதாரங்களின் வழியே இது உண்மையில் ஒரு இலட்சத்து 46 ஆயிரத்தைத் தாண்டுகிறது.

இந்நிலையில் சில இராணுவத்தினரைத் தண்டிப்பதோ அல்லது ஒரு தொகை மக்கள் இறந்ததாக ஒத்துக் கொள்ள முன் வருவதோ சிங்கள அரசு தன்னைப் பாதுகாக்க முற்படும் ஒரு பேரமாகவே இது அமைகிறது என உருத்திரகுமாரன் இச்செவ்வியில் மேலும் தெரிவித்துள்ளார். (எ-1)

# சுற்றுலா விசாவில் வரும் வெளிநாட்டு பெண்கள் தகாத செயல்களில் ஈடுபடுகின்றனர்

## கலாசாரத்திற்கு ஆபத்து என்கிறது குடிவரவுத் திணைக்களம்

சுற்றுலா விசாக்களைப் பெற்றுக் கொண்டு நாட்டுக்குள் பிரவேசிக்கும் அதிகளவான வெளிநாட்டுப் பெண்கள் கொழும்பு உள்ளிட்ட பிரதான நகரங்களில் பாலியல் தொழிலில் ஈடுபட்டுவருவதாக குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சீனா,ரஷ்யா, உஸ்பெகிஸ்தான், உக்ரைன் மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளைச் சேர்ந்த பெண்களே இவ்வாறு அதிகளவில் இத்தொழிலில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டுப் பெண்கள் இலங்கையில் இவ்வாறான தகாத தொழிலில் ஈடுபடுவது தேசிய பாதுகாப்பிற்கும் கலாசாரத்திற்கும் சவாலாக அமையக் கூடும் என குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விசா காலம் முடிபடைந்தும் இலங்கையில் தங்கியிருத்தல் மற்றும் சுற்றுலா விசாக்களை வேறும் தேவைகளுக்காக பயன்படுத்தல் ஆகிய குற்றச் சாட்டுக்களின் கீழ் குறித்த பெண்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான தொழிலில் ஈடுபடும் வெளிநாட்டுப் பெண்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம்.

கொழும்பின் பிரதான பாடசாலைகளைச் சேர்ந்த சில மாணவர்கள் இவ்வாறான தொழிலாளிகளின் வாடிக்கையாளர்களாக மாறி வருவதாகவும் இது ஓர் ஆபத்தான நிலைமை எனவும் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது. (அ-7)

### வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரியினால் துடுப்பாட்ட வீரர்களை உற்சாகமூட்டும் வடக்கின் போர் இசைப்பாடல் வெளியீட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு றொமைன்குக் மண்டபத்தில் நடைபெறவுள்ளது என யாழ்.மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் அறிவித்துள்ளார்.(அ-7)

### வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்தேற்றல்

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்த கொழும்புத்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி (A.R.V) வழங்கப்படவுள்ளது என யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அ.ஏ.ஞானஜோதி அறிவித்துள்ளார்.

இதன்போது நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணி முதல் முற்பகல் 11 மணிவரை சுவாமியார் வீதி சிகிச்சை நிலையத்திலும் முற்பகல் 11.30 மணிமுதல் பிற்பகல் 1.30 மணி வரை அதிப்பத்தி வளன்புரத்திலும் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. (அ-7)

### திருவள்ளுவர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை ஒழுங்கமைப்பில் திருவள்ளுவர் குருபூசை எதிர்வரும் 9-ம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணியளவில் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக சைவபரிபாலனசபை அறிவித்துள்ளது. (அ)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### எது செய்தாலும் பலன் நமக்கே!



கடவுள் பிரமாண்டமான பெரிய வட்டம் போன்றவர். அந்த வட்டத்தின் மையம் எங்கும் எல்லா இடங்களிலும் அமைந்து இருக்கிறது. அந்த மையம்தான் மனிதன்.

நம்முடைய தெய்வீக இயல்பை வெளிப்படுத்த ஒருவழி மற்றவர்கள் தங்கள் இயல்பை வெளிப்படுத்தும்படி அவர்களுக்கு உதவிசெய்வதுதான்.


கடவுள் ஒவ்வொரு உயிரிலும் குடிகொண்டிருக்கிறார். இதைத்தவிர தனியாக வேறு ஒரு கடவுள் இல்லை. இந்த உண்மையை எவ்வளவோ தவங்களுக்குப் பின்னர்.நான் புரிந்து கொண்டிருக்கிறேன். மக்களுக்குச் சேவை செய்பவன் உண்மையில் கடவுளுக்குச் சேவை செய்பவனாகிறான்.

தன்னலமற்ற மனப்பான்மைதான் ஆன்மீக வாழ்வின் அடிப்படை. இதைக் கொண்டே ஒருவரின் ஆன்மீகத் தேடுதலை சோதிக்கவேண்டும். சுயநலம் இல்லாதவனே ஆன்மீக வாழ்க்கையைப் பெற்றவனாகிறான்.

தீமையைச் செய்வதனால் நாம் நமக்கும் மற்றவர்களுக்கும் தீமையைச் செய்கிறோம். நன்மையைச் செய்வதனால் நாம் நமக்கும் நன்மை செய்து கொள்கிறோம்.

# ஒட்டுமொத்த தமிழ் மக்களின் பார்வையும் இந்தியாவின் மீது

## மனோ கணேசன் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை வாழ் அனைத்து தமிழர் பார்வையும் இந்தியாவின் அடுத்தகட்ட நடவடிக்கையை நோக்கி நிற்கின்றது. யுத்தம் முடிந்து மூன்று வருடம் ஆகியும் அரசாங்கம் ஆக்க பூர்வமான தீர்வுகளை நோக்கி நகர்வதாக தெரியவில்லை என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரவுள்ள தீர்மானத்தை இந்தியா ஆதரிக்குமா இல்லையா என்ற நிலை தொடர்ந்து வரும் நிலையில், பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். இந்நிலையில் கருத்து வெளியாகும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழு கூட்டத்தை தமிழ் மக்கள் ஆதங்கத்துடன் எதிர்பார்த்து இருக்கின்றார்கள். அரசாங்கம் சரியாக செயற்பட்டு இருக்குமானால் எமக்கு சர்வதேசம் தேவைப்பட்டு இருக்காது.

இந்நிலையில் இந்தியா இன்று மீண்டும் இலங்கை அரசாங்கத்திற்கு ஆறுமாத கால அவகாசம் வழங்க வேண்டும் என்ற தீர்மானத்தை எடுத்து சர்வதேசத்தை அதற்கு இணங்க செய்ய போகின்றதா என்பதை தெரிந்து கொள்ள இலங்கை தமிழ் மக்களும் நியாயத்தை வேண்டும் அனைத்து மக்களும் விரும்புகிறார்கள்.

இது உண்மையானால் அடுத்த ஆறு மாதத்திற்கு மேற்சொன்ன விவகாரங்கள் தொடர்பில் இந்திய அரசாங்கம் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு பொறுப்புக் கூற வேண்டும். நாடு முழுக்க வாழும் தமிழ் மக்கள் சந்திக்கும் அனைத்து மனித உரிமை சிக்கல்களுக்கும் இந்திய அரசு பதில் பெற்று தர வேண்டும் என தமிழர்கள் எதிர்பார்ப்பார்கள். இதை இந்திய தூதுவர் தமது அரசாங்கத்திற்கு அறிவிக்க வேண்டும்.

நம் நாட்டு தலைவர்களை போர்க்குற்ற விசாரணைக்காக சர்வதேச நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என இலங்கையில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் எந்த ஒரு அரசியல் கட்சியும் கோரிக்கை முன்வைக்கவில்லை.

அனைத்து தமிழ் கட்சிகளும் இலங்கையில் இன உறவுகள் பாதிக்கப்படக் கூடாது என்ற பொறுப்புணர்வுடன் நடந்து கொண்டுள்ளன.

போர்குற்றம் பற்றியும் மின்சார நாற்காலி பற்றியும் அரசாங்கத்தில் இருக்கும் பெரும்பான்மை தீவிரவாத கட்சிகள்தான் அதிகம் பேசுகின்றன. தமது இருப்புக்காக இந்த கோஷங்களை சிங்கள மக்கள் மத்தியில் வைத்து இவர்கள் அரசியல் செய்கிறார்கள்.

தமிழ் மக்களை பொறுத்தவரையில் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு, வட கிழக்கில் இராணுவ பிரசன்னம் குறைப்பு, ஆயுத குழுக்கள் கலைப்பு, திட்டமிட்ட சிங்கள குடியேற்றம், பாரிய மனித உரிமை மீறல்களுக்கு உள்ளானவர்களுக்கு நீதியும் நிவாரணமும் தடுப்பு காவல் கைதிகள் விவகாரம், தோட்ட தொழிலாளர்களின் வாழ்வாதார பிரச்சினைகள் ஆகியவை முதனிலை தேவைகளாக இருக்கின்றன.

இந்நிலையிலேயே ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழு கூட்டத்தை தமிழ் மக்கள் ஆதங்கத்துடன் எதிர்பார்த்து இருக்கின்றார்கள். அரசாங்கம் சரியாக செயற்பட்டு இருக்குமானால் எமக்கு சர்வதேசம் தேவைப்பட்டு இருக்காது. இந்நிலையில் இலங்கை தொடர்பில் தீர்மானகரமான நிலைப்பாட்டுக்கு இந்தியா வரப்போகிறதா அல்லது அடுத்த ஆறு மாதத்திற்கு இலங்கை அரசாங்கத்திற்கு இன்னுமொரு அவகாசம் வழங்கப்போகின்றதா என்பதே தமிழர் மனங்களில் இன்று எழுந்துள்ள கேள்வி.

(அ-2)

# வெளியிலிருந்து வரும் அழுத்தங்களால் கூட்டமைப்பினர் நிலை தடுமாறுகின்றனர்

## அமைச்சர் தினேஷ் தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள், புலம்பெயர் மக்களின் ஒரு பிரிவினர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் அழுத்தங்கள் காரணமாகவே இலங்கை விடயத்தில் அமெரிக்கா நகர்வுகளை முன்னெடுத்து வருகின்றது.

இவ்வாறான தரப்பினரின் அனைத்து விடயங்களையும் அமெரிக்கா ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் சில விடயங்கள் குறித்து செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது என ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

மேலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு அரசாங்கத்துடன் புரிந்துணர்வுடன் செயற்படும் ஆர்வம் இருந்தாலும் வெளியில் இருந்து வரும் சில அழுத்தங்கள் காரணமாகவே ஆரோக்கியமற்ற நிலைமைகள் ஏற்படுகின்றன எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தமிழ்த்தேசிக் கூட்டமைப்புடன் அரசாங்கம் தொடர்ந்து பேச்சு நடத்தும். கூட்டமைப்பின் யோசனைகள் குறித்து நாங்கள் கவனம் செலுத்தியுள்ளதுடன் அரசாங்கத்தின் நிலைப்பாடுகள் குறித்தும் கூட்டமைப்புக்கு அறிவித்துள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஜெனீவா நிலைமைகள் மற்றும் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்படவுள்ளதாக கூறப்படும் பிரேரணை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து கருத்து வெளியிடும் போதே அமைச்சர் இதனை குறிப்பிட்டார்.

இந்நிலையில் நாடுகள் தொடர்பான பிரேரணைகள் எதிர்வரும் வாரங்களில் முன்வைக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் அரசாங்கம் தொடர்ந்து பேச்சு நடத்தும். கூட்டமைப்பு முன்வைத்துள்ள யோசனைகள் குறித்து நாங்கள் கவனம் செலுத்தியுள்ளோம். அத்துடன் அரசாங்கத்தின் நிலைப்பாடுகள் குறித்தும் கூட்டமைப்புக்கு தெளிவாக அறிவித்துள்ளோம்.

எனவே, கூட்டமைப்பு பொறுப்புடன் செயற்படும் என்றும் அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. ஆனால், வெளியில் இருந்துவரும் சில அழுத்தங்களே கூட்டமைப்பின் சில தீர்மானங்களுக்கு காரணமாக அமைந்துள்ளன.

ஆனால், எமது பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் மிகவும் பொறுப்புடன் செயற்படும் என்று நாங்கள் நம்புவதுடன் அவ்வாறு நடந்து கொள்ளும் என எதிர்பார்க்கின்றோம்.

அரசாங்கம் நாட்டில் ஜனநாயகத்தைப் பலப்படுத்தவும் முன்னேற்றத்தை ஏற்படுத்தவும் பல வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. நாடளாவிய ரீதியில் அபிவிருத்தி வேலைத்திடங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன கூறியுள்ளார்.

(அ-2)

# சீனத் தொலைத் தொடர்புக் கருவிகளை பயன்படுத்தி அரசு ஒட்டுக்கேட்கின்றது

## மங்கள சமரவீர குற்றச்சாட்டு

சீனத் தொலைத்தொடர்பு நிறுவனங்கள் இலங்கையில் ஜனநாயக விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் சீனத் தொலைத்தொடர்பு கருவிகளைப் பயன்படுத்தி தனிப்பட்ட நபர்களின் தொடர்பாடல் நடவடிக்கைகளை உளவு பார்ப்பதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். இந்த நடவடிக்கைகள் குறித்து சீன அரசாங்கம் விசாரணை நடத்த வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்கவும் மின்னஞ்சல்களை இரகசியமாகப் பார்வையிடவும் சீனத் தொழில்நுட்ப ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்படுவதாகவும் சீனாவின் முன்னணி தொலைத்தொடர்பு நிறுவனங்களாக இசட் ரீ.ஈ மற்றும் ஹூவேய் ஆகிய நிறுவனங்கள் இவ்வாறு அரசாங்கத்திற்கு உதவி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் தொலைபேசி ஒட்டுக் கேட்டல் மற்றும் மின்னஞ்சல் இரகசியமாக பார்வையிடும் நடவடிக்கைகளுக்கு தமது நிறுவன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றமையை அந்தந்த நிறுவனங்கள் அறியுமா என்பது தெரியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச பயங்கரவாத நடவடிக்கைகளை தடுக்கும் நோக்கில் உலகின் பல நாடுகளில் இவ்வாறான கருவிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் அந்த வகையிலான தொழில்நுட்பங்களின் ஊடாக துஸ்பிரயோக சம்பவங்கள் இடம்பெறுவதனை தடுப்பதற்கு கடுமையான சட்ட விதிகள் அமுல்படுத்தப்படுகின்றதாக தெரிவித்துள்ளார்.

(அ-7)

# லங்கா சித்த ஆயுர்வேத இறுதியாண்டு பரீட்சை முடிபு

லங்கா சித்த ஆயுர்வேத கல்லூரியின் இறுதியாண்டுப் பரீட்சை 2008 (2011 நவம்பர் முடிபுகள்) சித்த ஆயுர்வேத வைத்திய சாலைப் பிரிவு பதிவாளர் கே.சமரநாயக்கவினால் வெளியிடப்பட்டுள்ளது. இப்பரீட்சையில் சித்தியடைந்தோர் விபரம் வருமாறு,

நவரெட்னம் மணிகரன், ஜெயராஜசிங்கம் ஜனார்த்தனி, சர்மிளா ஆறுமுகராஜா, பிரியதர்சினி கேதீஸ்வரன், மேரிசுதர்சினி மரியானந்தம் அல்லேலோயா, றமணசாமினி குணரத்னம், சக்திகா பாலகுருநாதன், புவனேந்திரநாதன் அருள்பாபு, கேதார நாதன் காந்தரூபி, கனகரத்தினம் கிருஷ்ணப்பிரசாத், ஞானசிங்கம் நிறோசன்.

(அ-7)


**சங்கானை நிகரையம்பதி சாமுண்டாதேவி சமேத அருள்மிகு நிகரை ஞான வைரவர் ஆலய திருமஞ்சத் திருவிழா விஞ்ஞாபனம்**

காலம் :- 2012.03.06 செவ்வாய்க்கிழமை

☞ மாலை 6.30 மணிக்கு வசந்த மண்டபபூசை இடம்பெற்று மின்குமிழ்களால் அலங்கரிக்கப்பட்ட திருமஞ்சத்தில் சுவாமி எழுந்தருளி திருப்பவனி வரும் திருக்காட்சி இடம்பெறும்.

☞ தென்னிலங்கையிலும் யாழ்ப்பாணத்திலும் பிரசித்திபெற்ற வாண வேடிக்கை குழுவினரின் விசேட வாண வேடிக்கைகள் மற்றும் இராட்சத வெளிச்சக் கூடுகள் நிகழ்வுகள்.

**இன்னிசைகானங்கள்**

☞ யாழ். மண்ணின் புகழ் பூத்த முன்னணி இசைக்குழுவினர் வழங்கும்

***ராகம்ஸ்* இன்னிசை கானங்கள்**

☞ இலங்கை வானொலியில் நேரடி அஞ்சல்

*மாலையில் நடைபெறும் திருமஞ்சத் திருவிழா நிகழ்வுகள் மாலை 7.00 மணி முதல் இலங்கை வானொலியில் நேரடியாக அஞ்சல் செய்யப்படவுள்ளது.*

*வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன் நேரடி நேர்முக வர்ணனை அஞ்சல் நிகழ்வினை தொகுத்து வழங்கவுள்ளார்.*

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**ஆசைப்பிள்ளை அன்ட் சன்ஸ் நகைமாடம்,**
**இல.10, பஸ்நிலையம் முன்பாக, சங்கானை.**

(சி/6022)

# இலங்கை - ஆஸி மோதும் 2-வது இறுதிப் போட்டி இன்று

(அடிலெய்ட்)

இலங்கை, இந்தியா, அவுஸ்திரேலியா ஆகிய மூன்று நாடுகள் பங்கேற்கும் மும்முனை கிரிக்கெட் போட்டி அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வருகின்றது.

இதன் இறுதிப் போட்டிகளுக்கு இலங்கை, அவுஸ்திரேலிய அணிகள் தகுதிபெற்றன. இறுதிப் போட்டி மூன்று ஆட்டங்களாக நடக்கின்றன.


இதன்படி பிரிஸ்பேர்னில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதல் இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியா 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தது.


இவ் இறுதிப் போட்டித் தொடரின் இரண்டாவது போட்டியில் இலங்கை - அவுஸ்திரேலிய அணிகள் இன்று அடிலெய்ட்டில் மோதுகின்றன.

இன்றைய இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றால் தொடரில் சம்பியன் பட்டத்தை தனதாக்கிக் கொள்ளும். மாறாக இலங்கை அணி வெல்லும் பட்சத்தில் மூன்றாவது இறுதிப் போட்டி நடைபெறும்.

இன்று நடைபெறும் 2-வது இறுதிப் போட்டியில் வென்று கோப்பையை தனதாக்கும் ஆவலில் அவுஸ்திரேலிய அணி உள்ளது.

அதேநேரத்தில் இலங்கை அணி அவுஸ்திரேலியாவுக்கு சரியான பதிலடி கொடுக்க காத்திருக்கிறது.





கடந்த ஆட்டத்தில் அதிரடியாக விளையாடி சதம் குவித்து அவுஸ்திரேலியாவின் வெற்றிக்கு வழிவகுத்த டேவிட் வோர்னர் காயம் அடைந்துள்ளதால் இன்றைய ஆட்டத்தில் விளையாடுவது சந்தேகத்திற்கு இடமாகி உள்ளது.

அவர் விளையாடாமல் போனால் அது அவுஸ்திரேலியாவைப் பொறுத்தவரை பாரிய இழப்பாகும்.

வோர்னர் ஆடாமல் போனால் பீற்றர் பாரஸ்டுக்கு வாய்ப்பு கிடைக்கும்.

கடந்த முதலாவது இறுதிப்போட்டியில் ஆஸியால் 300க்கும் மேற்பட்ட ஓட்டங்களைக் குவித்தும் இலங்கை அணியை இலகுவாக வீழ்த்த முடியவில்லை. கடும் போராட்டத்திற்கு பின்பே அவர்களால் வெற்றிபெற முடிந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலிய அணியைப் பொறுத்தவரை மத்யூ வேட், வோட்சன், ஹசி சகோதரர்கள், அணித்தலைவர் கிளார்க் ஆகியோரும் துடுப்பாட்டத்தில் நல்ல நிலையில் உள்ளனர்.

கடந்த ஆட்டத்தில் ஹில் பென் ஹியூ ஸின் பந்துவீச்சு அவ்வளவாக எடுபடவில்லை. இதனால் அவருக்கு பதிலாக இன்றைய ஆட்டத்தில் மெக்காய் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்று தெரிகிறது.

இலங்கை சகலதுறையிலும் சிறப்பாக இருப்பதால் அந்த அணி அவுஸ்திரேலியாவை பழி தீர்க்கும் என்று நம்பப்படுகின்றது.


அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன, சங்கக்கார, டில்சான், சண்டிமல், தரங்க ஆகியோரது துடுப்பாட்டம் சிறந்த நிலையில் காணப்படுகின்றது.

கடந்த ஆட்டத்தில் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்திய குலசேகர தொடர்ந்து அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தும் ஆர்வத்தில் உள்ளார்.

இரு அணிகளும் சமபலம் பொருந்திய அணிகள் என்பதால் இன்றைய இறுதிப் போட்டி விறுவிறுப்பாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இன்றைய 2-வது இறுதி ஆட்டம் இலங்கை நேரப்படி காலை 8.50 மணிக்கு அடிலெய்ட்டில் ஆரம்பமாகும்.

# மிகவும் அமைதியாக நாடு திரும்பிய இந்திய வீரர்கள்



அவுஸ்திரேலியாவில் தர்ம அடி வாங்கிய இந்திய கிரிக்கெட் அணி வீரர்கள் எந்த ஆர்ப்பாட்டமும் இல்லாமல் மிக மிக அமைதியாக நாடு திரும்பியிருக்கிறார்கள்.

அணித் தலைவர் தோனி, ஹோலி, சேவாக், காம்பீர், சுரேஸ் ரெய்னா, பிரவீன் குமார், ராகுல் சர்மா ஆகியோர் பிரிஸ்பேனில் இருந்து சிங்கப்பூர் வழியாக டில்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்துக்கு வந்தனர்.

சச்சின், சகீர்கான், உமேஷ் யாதவ் ஆகியோர் நேராக மும்பைக்கும், தமிழக வீரர் அஷ்வின் சென்னைக்கும் சென்னைக்கும் வந்து சேர்ந்தனர்.

ஒவ்வொரு தொடர் முடிபடைந்ததும் வீரர்கள் நாடு திரும்பும்போது, விமான நிலையத்தில் ரசிகர்கள் வரவேற்பு அமர்க்களமாக இருக்கும். ஆனால் இம்முறை அவுஸ்திரேலியாவில் மோசமான தோல்விகளை சந்தித்து திரும்பியதால், எந்த விமான நிலையத்திலும் ரசிகர்கள் கூட்டமே இல்லை.

# பெடரர் சம்பியன்



ஏடிபி அந்தஸ்து பெற்ற டுபாய் டூட்டி பிரி டென்னிஸ் தொடர் டுபாயில் நடந்தது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டிகள் நேற்று முன்தினம் நடந்தன.

2-ம் நிலை வீரரான சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், பிரிட்டனின் அன்டி முர்ரே மோதினர்.

அரையிறுதியில் முர்ரே, முன்னணி வீரரான நோவக் டிஜோவிக்கை வீழ்த்தியிருக்கிறார்.

இதனால் ெபடரருக்கு கடும் நெருக்கடி தருவார் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனாலும் சமாளித்து ஆடிய பெடரர் 7-6, 7-6 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்று சம்பியன் கோப்பையை கைப்பற்றினார்.

இத் தொடரில் பெடரர் பெறும் 5-வது கோப்பை இது. இதுவரை ெபடரர் 72 கோப்பைகளை வென்றுள்ளார்.

# வெற்றிபெறுதல் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்க்கிறது -ரோஜர் பெடரர்

வெற்றி பெறுதலுக்கு மாற்றீடான எதுவும் கிடையாது எனத் தெரிவித்துள்ளார் பிரபல டென்னிஸ் வீரரான ரோஜர் பெடரர்.

டுபாய் பகிரங்க டென்னிஸ் சுற்றுத் தொடரில் சம்பியன் பட்டம் வென்ற முன்னாள் முதற்தர வீரரும், தற்போது மூன்றாம் இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளவருமான ரோஜர் பெடரர், டுபாய் பகிரங்க சுற்றுத் தொடரில் தான் சிறப்பாக விளையாடியதாக உணர்வதாகத் தெரிவித்துள்ளார்.

உலகின் டென்னிஸ் தரப்படுத்தலில் முதல் 10 இடங்களுக்குள் தரப்படுத்தப்பட்டுள்ள வீரர்களுள் 8 வீரர்கள் உட்பட ஏராளமானோர் பங்குபற்றிய முக்கியமான சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டியில் ரோஜர் பெடரர் பிரித்தானியாவின் அன்டி முர்ரேயைத் தோற்கடித்து பட்டம் வென்றார்.

அவ்வெற்றி தொடர்பாக கருத்து வெளியிடும்போதே பெடரர் இவ்வாறு தெரிவித்தார்.

வெற்றிபெறுதல் மூலம் தன்னம்பிக்கை அதிகளவில் கிடைப்பதாகக் குறிப்பிட்ட பெடரர், அண்மைக்காலமாக சிறப்பாக விளையாடுவதாக உணர்வதாகத் தெரிவித்ததோடு, வெற்றிபெறுதல் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்ப்பதாகவும் தெரிவித்தார்.

அத்தோடு உலகின் முதற்தர வீரர் ரபேல் நடாலுடன் சிநேகபூர்வமான டென்னிஸ் போட்டியொன்றில் பங்குபற்ற மறுத்தார் என வெளியான செய்திகள் தொடர்பாகத் கேட்கப்பட்டதற்கு, தான் இதுவரை அதை மறுக்கவில்லை. தனக்கு இலகுவான திகதிகளை ஏற்பாட்டாளர்களிடம் வழங்கியதாகவும், எனினும் பொருத்தமான திகதியை உறுதிப்படுத்துவதில் சிக்கல் காணப்பட்டதாலேயே அது கைகூட வில்லை எனவும் எனவும் தெரிவித்தார்.

# வடமாகாண ஆளுநரின்...

சபைகளின் அபிவிருத்தி தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ்.கிறீன்கிராஸ் ஹோட்டலில் நடைபெற்றது. இதன்போது அவர்கள் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினர்.

இந்தக் கலந்துரையாடலில் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டில் எந்த மாகாணத்திலும் இல்லாதவாறு வட மாகாணத்தில் ஆளுநரின் தலையீடு அதிகமாக காணப்படுகின்றது.

நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளில் உள்ள ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்குக்கூட ஆளுநரின் தலையீடு உள்ளது.

யுத்தத்திற்கு முன்பிருந்த நிலை வேறு. தற்போது உள்ள நிலைவேறு. எமது சபைகளுக்கு அதிக தேவைகளும் அதிக பொறுப்புக்களும் உண்டு.ஆளணி என்பது சபைகளுக்கு முக்கியமானது. மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு ஆளணி மிகவும் அவசியம்.

1987ஆம் ஆண்டு இருந்த ஆளணிகளுடன்தான் இன்றும் எமது பிரதேச, நகர சபைகள் இயங்கி வருகின்றன.

இதனால் எந்தவித அபிவிருத்திப் பணிகளையும் முன்னெடுக்க முடியவில்லை.

வட மாகானத்திற்கு என முதலமைச்சர் இல்லாததால் ஆளுநரின் தலையீடு அதிகமாகவுள்ளது எனவும் பிரதேச சபைத் தலைவர்கள் மற்றும் நகரசபைத் தலைவர்கள் கூட்டாக வலியுறுத்தினர்.

இதற்கு பதிலளித்த இலங்கை உள்ளூர் அரசாங்க அதிகாரிகள் சங்க சம்மேளனத் தலைவர் நிமால் ஜெயவர்த்தன கூறுகையில்,

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரை முதலமைச்சர் இல்லாததால் ஆளுநரிடம் எந்த உதவிக்கும் பிரதேச மற்றும் நகரசபையினர் செல்ல வேண்டிய நிலையுள்ளது.

ஆனால் ஒரு சில சபைகளைத் தவிர ஏனைய சபையினர் ஆளுநரிடம் சென்று உதவிகளைக் கேட்பதில்லை எனத் தெரிய வருகின்றது.

பிரதேச சபை எந்தக் கட்சியின் ஆட்சிக்கு சென்றாலும் அந்தச் சபைகளை அபிவிருத்தி செய்ய வேண்டியது அரசின் கடமையாகும்.

நாம் ஒருபோதும் கட்சி பேதம் காட்டுவதில்லை. எந்தக் கட்சியாக இருந்தாலும் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு சேவை செய்தால் உதவி செய்ய வேண்டும்.

கொழும்பு மாநகர சபையை எதிர்க் கட்சி வென்றதனால் அந்த மாநகரசபை அபிவிருத்திக்கு யாரும் தடையாக இருக்கவில்லை.

இந்த நாட்டில் முப்பது வருட கால யுத்தம் இடம்பெற்றது. குறிப்பாக வட மாகாணத்திலுள்ள யாழ்.மாவட்ட சபைகள் யுத்தத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைக் கொண்டுள்ளது. அந்தப் பிரதேசங்களின் அபிவிருத்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

நாம் செய்யும் சேவை மன ரீதியாக ஆனந்தத்தை கொடுக்க வேண்டும். விருப்பப்பட்டு சேவை செய்யும் போதுதான் அது கிடைக்கும்.

ஜனாதிபதியில் விருப்பம் உள்ளது. ஆளுநரில் விருப்பம் இல்லை என்பதை உங்களின் கூற்றிலிருந்து நான் அறிந்து கொண்டேன் என அவர் மேலும் தெரிவித்தார்.(எ-6)

# கனடா உயர்...

அறிவதிலும் அவர்களுக்கான சலுகைகள் மற்றும் தேவைகள் உரிய முறையில் வழங்கப்படுகின்றதா என்பதை அறிவதிலும் செயலாளர் பேர்னாட் ஆர்வம் காட்டினார்.

மேலும் யாழ்.போதனா வைத்தியசாலையில் இருதய சத்திரக் சிகிச்சைக்கூடம் அமைப்பதற்கு உதவிகள் செய்ய வேண்டும் எனவும் வெளிநாட்டு ராஜதந்திரிகளைச் சந்திக்கும் போது இந்தக் கோரிக்கையைத் தாம் முன்வைப்பதாகவும் ஜேர்மன் நாட்டு ராஜதந்திரிகளை அண்மையில் சந்தித்தபோதும் தாம் இந்தக் கோரிக்கையை முன்வைத்ததாகவும் அதற்கு உதவிகள் செய்வதாக அவர்கள் வாக்குறுதியளித்ததாகவும் அரச அதிபர் கூறினார். (எ-6)

# புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபர் நேற்றுப் பதவியேற்றார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக கே.எல்.பெரேராவும் யாழ்.பிராந்திய பொலிஸ் அத்தியட்சகராக எஸ்.ஸ்ரீ.கு.நேசவும் உத்தியோக பூர்வமாக பதவியேற்றனர்.

இவ் பதவியேற்பு வைபவம் நேற்றுக் காலை யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் சிகேரா தலைமையில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது.

வட மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபராக இருந்த இந்திரன் தற்போது இடமாற்றம் செய்யப்பட்டதனைத் தொடர்ந்து தற்போது யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக பெரேரா பதவி யேற்றுள்ளார்.

பொலிஸ் நிலைய தலைமைப் பணியகத்தில் பொது உளநலப்பிரிவின் இயக்குநராக கடமையாற்றிய பெரேரா தற்போது யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபராக பதவியேற்றுள்ளார்.

இதைவிட யாழ்.பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் நெவின் பத்மதேவாவிற்கு பதிலாக தலைமைப் பொலிஸ் பணியகத்தில் விசேடக் குற்றத்தடுப்பு பிரிவில் பணியாற்றிய குகசேன நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர்களுடைய உத்தியோக பூர்வ பணிகள் யாவும் நேற்று 3 மணியில் இருந்து ஆரம்பமாகின. (எ-4)

# கிலாரிக்காக அமைக்க...

இலங்கை அரசாங்கம் தன் தலையில் தானே மண் அள்ளிப்போட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

ஜெனிவாவில் அமைச்சர் மகிந்த சமரசிங்க நல் லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவோம் எனத் தெரிவித்தமை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அமைச்சர் மகிந்த சமரசிங்க இந்தக் கருத்தை அமெரிக்காவில் வெளியிடலாம். அதற்குத் தடையில்லை. ஆனால் இலங்கையில் விளையாட முடியாது. உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த ஒரு போதும் இடமளிக்க மாட்டோம்.

எமது மக்களின் தேவைக்காகவா நல்லிணக்க ஆணைக்குழு அமைக்கப்பட்டது? இல்லையே. கிலாரி கிளின்டனின் தேவைக்காகவே உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த நல்லிணக்க ஆணைக் குழுவில் சாட்சியமளிக்க எனக்கு அழைப்பு விடுவிக்கப்பட்டது. ஆனால் அதனை நான் நிராகரித்தேன் ஏன் என்றால் இக் குழுவில் அங்கம் வகித்தோரும் தகுதியற்றவர்கள். பக்க சார்பானவர்கள்.

அத்துடன் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு வரையறைகளை மீறி இலங்கையில் இனப்பிரச்சினையிருப்பதாகவும் அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்ளவேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

இதனையேற்றுக்கொள்ள முடியாது கிலாரி கிளின்டனின் தேவைக்காக உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்து அரசாங்கம் தன் தலையில் தானே மண்ணை அள்ளிப் போட்டுக் கொண்டது என் சிங்கள பௌத்த கடும் போக்காளரான தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

# அரசாங்கத்தின் பொறுப்புக் கூற...

இவ்விவகாரம் தொடர்பிலான தனது கடப்பாட்டை சர்வதேச சமூகம் நிறைவேற்றிக் கொள்ள வேண்டிய காலம் இதுவெனக் குறிப்பிட்டுள்ள அவர், இப் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள சுயாதீனமான சர்வதேச பொறிமுறையொன்றை ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழு உருவாக்க வேண்டும் என சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஒன்று கொண்டு வரப்படவுள்ள நிலையில், அமெரிக்காவிலிருந்து வெளிவரும் த நியூயோர்க் ரைம்ஸ் எனும் ஊடகத்தில் மார்சூகி தாருஸ்மன் எழுதியுள்ள கட்டுரையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய பகுதி வருமாறு,

இலங்கையில் இடம்பெற்ற குருதி உறைந்த போர் 2009ஆம் ஆண்டு முடிபுக்கு வந்ததிலிருந்து ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கவனத்திற்கு உள்ளாக்கப்பட்டிருந்த இலங்கை விவகாரம் இவ்வாறம் ஆர்வமான அதன் கூட்டத்தொடரில் விவாதிக்கப்பட்டுள்ளது.

இப்போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனிடம் இலங்கை ஜனாதிபதி போர் முடிபுக்கு வந்த பின்னர் வாக்குறுதி வழங்கி ஒருவருடம் கடந்திருந்த நிலையிலும், அது தொடர்பில் ஜனாதிபதி எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

இந் நிலையில் இப் போர் மீறல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கையொன்றை தயாரித்து வழங்குமாறு நான் உட்பட்ட மூவர் கொண்ட நிபுணர்கள் குழுவிடம் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கேட்டுக் கொண்டார்.

இதன்படி இலங்கையில் இடம்பெற்ற போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கைகளை தயாரித்திருந்ததுடன் இப் போர் மீறல்கள் தொடர்பிலான நம்பகரமான ஆதாரங்களையும் சாட்சியங்களையும் நாம் முன்வைத்தோம்.

ஆனால் இப் போர் மீறல்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்காக அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக் குழுவின் செயற்பாடுகள் உண்மைகளை மூடிமறைப்பதற்கான பொறிமுறையைக் கொண்டதாகவே அமைந்திருந்தன.

இலங்கையில் இடம்பெற்ற போருக்கான அடிப்படைக் காரணங்களைக் கண்டறிந்துள்ள உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு மக்களின் இழப்புகள் தொடர்பில் போரில் ஈடுபட்ட இரு தரப்பினர்களும் பொறுப்பேற்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட பரிந்துரையின்படி இப் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு சுயாதீனமான சர்வதேச பொறிமுறையொன்றை ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழு உருவாக்க வேண்டும்.

இலங்கையிடம் பெற்ற இறுதிக்கட்டப் போரின் போதான படுகொலைகள் தொடர்பில் சர்வதேச சமூகமும் போதியளவு ஆர்வம் கொண்டிருக்காது விட்டாலும் கூட இவ்விவகாரத்தை மன்னித்துவிட முடியாது.

அத்துடன் இப் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் பொறுப்புக் கூறுவதை சர்வதேச சமூகம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் தலைவரான மார்சூகி தாருஸ்மன் தனது கட்டுரையில் வலியுறுத்தியுள்ளார். (எ-11)

# ஜெனிவாவுக்குச் சென்றிருந்தால்...

தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன் தெரிவித்தார்.

ஜெனிவா கூட்டத்தொடரில் பங்கு பெற்றாமல் போனதைத் தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிராக கடும் விமர்சனங்கள் எழுந்து வரும் நிலையில் தமது நிலைப்பாட்டையும் கூட்டத்தொடரில் பங்குபற்றாததற்கான காரணத்தைக் கூறும் பொருட்டு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் யாழ். தேர்தல் மாவட்டத்திற்கு உட்பட்ட உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுடன் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.சுமந்திரன், சி.சிவஞானம் ஆகியோர் ஈடுபட்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், கொடும்பாவி எரிக்கப்பட்ட பின்பும் உங்கள் முன் பேசுவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஜெனிவாக் கூட்டத்தொடரில் பங்கேற்கவில்லை என்பதற்காக பல விமர்சனங்கள் வெளியிடப்பட்டு வருகின்ற நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அடுத்தாக என்ன செய்யப் போகிறது எனவும் பலர் கேள்வி எழுப்புகின்றனர்.

யுத்தம் முடிபடைந்து மூன்று வருடங்கள் ஆகின்றன. ஒவ்வொரு வருடமும் மூன்று தடவை கூடும் மனிதவுரிமை அமைப்புகள், 2009 ஆம் ஆண்டுக்குப் பிறகு இதுவரை 12 தடவைகள் கூடியுள்ளது.

இந்தக் கூட்டத்தொடருக்கு முன்பு நடந்த 11 கூட்டத் தொடரிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்குபற்றவில்லை. ஆனால் இம் முறை மட்டும் ஏன் போகவில்லையென கேட்கின்றனர். ஏன் இதற்கு முன்பு நடந்த கூட்டத் தொடரிலும் பங்குபற்றவில்லை எனக் கேட்க யாரும் முன்வரவில்லை.

தமிழருக்கு செய்த துரோகம் எனக் கூறுவதற்கு என்ன காரணம் அத்தோடு வரலாற்றுத் தவறு செய்து விட்டதாகவும் கூறுகின்றனர்.

ஐ.நா. மனிதவுரிமை அவையில் இரண்டு விதமான அமர்வுகள் நடைபெறுகின்றன. ஒன்று அரச பிரதிநிதிகளுக்கான அமர்வு. இதில் அரசாங்கப் பிரதிநிதிகள் மட்டுமே கலந்து கொள்வர். மற்றது அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கான அமர்வு. இதில் அரச சார்பற்ற அமைப்புச் சார்பாக [illegible] வர்கள் கலந்துகொள்வர். த.தே.கூ. இந்த இரண்டு பிரிவிலும் அடங்காது.

ஐ.நா. மனிதவுரிமை அவையில் அரசபிரதிநிதிகள் கலந்து கொள்ளும் கூட்டமே முக்கியமானது. இதில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகள் தம்நாட்டு அரசுகள் எடுக்கும் முடிபுகளுக்கு அமைய வாக்களிப்பர்.

அந்தந்த நாட்டு அரசுகளோடு பேசித்தான் அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிக்குமாறு கேட்கவேண்டும். இந்தப் பணியைத் த.தே.கூ. செவ்வனே செய்து வருகிறது. மேற்படிக்கூட்டத்தில் பங்குகொள்ளும் 47 நாட்டுதூதுவர்களோடு தொடர்பு கொண்டு இலங்கையில் தொடர்ந்தும் நடைபெற்றுவரும் மனிதவுரிமைமீறல்களையும் தமிழர்களுக்கான பாதுகாப்பற்ற ஒரு நிலையையும் எடுத்துச் சொல்லி வருகிறார்கள். (எ-6)

# டில்லியில் நேற்று...

தற்கான தகவல்கள் இல்லை யென்று அதிகாரிகள் கூறியுள்ளனர். டில்லியில் அண்மையில் பூமி அதிர்ச்சி முன்னெச்சரிக்கை ஒத்திகை ஒன்றின் போது இந்திய நேரப்படி பகல் 1.10 மணியளவில் நில அதிர்வு ஏற்பட்டதாக இந்தியாவின் பூமியதிர்ச்சி தொடர்பான ஆய்வுநிலையம் தெரிவித்தது.

பூமியதிர்ச்சிகள் ஏற்படக் கூடிய நில அமைப்புகளுக்கும் அருகில் டில்லி உள்ளதாக சுட்டிக்காட்டப்படுகின்ற நிலையில், அங்கு பூமி அதிர்ச்சி எதுவும் ஏற்பட்டால் மக்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற பயிற்சிக்காக அண்மையில் அவசரகால ஒத்திகை நடவடிக்கையொன்று பெரிய அளவில் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# இலங்கை தூதர...

இருந்த நிலையில் ஆழ்வார் பேட்டையில் அமைந்துள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்துக்கு முன்னால் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலர் பொலிஸாரின் உத்தரவையும் மீறி இலங்கை உயர்ஸ்தானிகராலயத்துக்குள் அத்துமீறி நுழைய முற்பட்டதை அடுத்தே அவர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்று தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன. (எ-11)

# நெடுந்தீவு மாண...

கந்தசாமி ஜெகதீஸ்வரன் எனும் இச்சந்தேக நபரை ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் ஊர்காவற்றுறைப் பொலிஸார் நேற்று ஆஜர்படுத்தினர். அதையடுத்து சந்தேக நபரை 16ம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் ஆர்.வி.உதயகுமார் உத்தரவிட்டார். (எ-11)


விநியோகஸ்தர்கள் தேவை

தண்ணீர் போத்தல்கள், பழக்கலவை, நூடல்ஸ் மற்றும் சோஸ் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் கம்பனிக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய பகுதிகளுக்கு விநியோகஸ்தர்கள் தேவை.

மேலதிக விபரங்களுக்கு:-
R.S.M.யோகேஸ்வரன்
077 4334727
(7628)



பதவி வெற்றிடம்

யாழ்ஸ்ரான்லி வீதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. முகாமையாளர்
தகைமை: க.பொ.த.உயர்தரம் வர்த்தக பிரிவு, கணனி அனுபவம்.

2. எரிபொருள் நிரப்புநர்
6,7,8-ம் திகதிகளில் நேரடியாக சமூகமளிக்கவும்.

தொடர்புகளுக்கு:-
கதிரேசன்பிள்ளை எரிபொருள் நிரப்பு நிலையம்
207, K.K.S. வீதி,
சுன்னாகம்.
TP: 0212241466
0774667603
(7624)



அம்மா பகவான் சரணம்
ஓம் சச்சிதானந்த பரப்பிரம்ம புருஷோத்தம பரமாத்மா
ஸ்ரீ பகவதி சமேத ஸ்ரீ பகவதே நமஹ



ஸ்ரீ ஸ்ரீமான் கல்கி பகவானின்
64வது ஜென்மதின
மஹோற்சவப் பெருவிழா

நகர சங்கீர்த்தனமும்
ஸ்ரீ அம்மா பகவானின் விசேட Webcast தரிசனமும்

இடம் : கதிரமலைச் சிவன் கோவில் தேவஸ்தான மணிமண்டபம், ஸ்ரேசன் றோட், சுன்னாகம்.
காலம் : 07.03.2012 புதன்கிழமை காலை 6.30 மணி

அன்பர்களே!
சம்பூர்ண அவதார புருஷர்களாகிய ஸ்ரீ ஸ்ரீ அம்மா பகவான் மனித குலத்திற்கு ஜீவன் முக்தியை பிரசாதித்து அனுக்கிரகம் செய்ய வேண்டி இப்பூவுலகில் அவதாரம் செய்துள்ளனர்.

ஸ்ரீ கல்கி பகவானின் 64வது ஜென்மதினத்தையொட்டி காலை 6.30 மணியளவில் சுன்னாகம் ஐயனார் கோவிலிருந்து நகர சங்கீர்த்தனத்துடன் பக்தர்கள் பாற்குடமேந்திவர, சிவன் கோயில் மண்டபத்தையடைந்து பாதுகாபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து ஸ்ரீ அம்மா பகவானின் Webcast தரிசனமும் (10.00 மணிக்கு) ஜென்ம தின வைபவமும் நிகழவுள்ளது.

பக்தர்கள் அனைவரும் இவ்வைபவத்தில் தவறாது கலந்து கொண்டு ஸ்ரீ அம்மா பகவானால் அருளப்படும் தீக்ஷையைப் பெற்று ஆனந்தப் பெருவாழ்வு பெற அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: மதியம் மகேஸ்வர பூஜை இடம்பெறும் (அன்னதானம்)

மேலதிக தொடர்புகளுக்கு: 021 222 2314, 021 222 5868, 077 7973225
077 6153842, 077 1937162, 077 3771592
01 221 9263, 077 1547545, 0750414027

ஸ்ரீ அம்மா பகவான் பக்தர்கள், யாழ் மாவட்டம்.
(7626)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.03.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.